TAMIL SPEAKING LAWYER
Personal Injury Lawyer
INJURED IN A **ROAD ACCIDENT** ?
ACCIDENT AT WORK OR **PUBLIC PLACE**
WE ACT ON "NO WIN NO FEE" BASIS
www.nmflawyers.co.uk
NM NOT MY FAULT F Accident & Injury Claims
Ask for RAJ
Raj Rajamohan - 078 1089 7754

BILINGUAL FORTNIGHTLY

ஒரு பேப்பர் ORU PAPER

FREE

PAPER - 12 ♦ ISSUE - 263 ♦ FRIDAY 08 APRIL 2016

LONDON ACCIDENT CLAIMS LIMITED
70 Windmill Road, Croydon, CR0 2XP
வாகன விபத்தா? உங்கள் தவறில்லையா?
Driver / Passenger – within last 3 years
3 வருட காலத்துக்குள் சந்தித்த அனைத்து வாகன விபத்துக்களிலும் ஏற்பட்ட
• Personal injury (Neck,Back & Shoulder Pain)
• Replacement Vehicle (Terms & Conditions Apply)
Mini cab ஓட்டுனர்களுக்கு "PCO" உடன் வாகனம் வழங்கப்படும்
NO WIN NO FEE
*Other Insurance charges may apply
Call Free:0800 032 6798 | Tel: 020 8665 7667
Web: www.lacl.co.uk | Mail: info@lacl.co.uk

உங்கள் வாழ்க்கைத் துணையை இணையத்தில் தேடுங்கள் WWW.ORUMANAM.COM

RnD Jewellers
PAWNBROKERS AND SAFE DEPOSIT CENTRE
Strictly Private and Confidential Service
• Protect your valuables from burglary, fire, flooding and accidental damage
• Safe access to your vault granted as often as your require at no extra cost
• Security controlled access with the latest Biometric and Remote control systems
Highest cash loans on Gold Jewellery, Lowest interest charges
‣ Cheques Cashed – Wages, Housing Benefits, Inland Revenue
‣ International Money Transfer & Foreign Exchange
Job vacancy for counter staff
A good comumunication skill in English. Right to work in uk
Competitve rate of pay
Please contact us with your CV
Tel : 020 8869 0644
321 Northolt Road, South Harrow, Middlesex, HA2 8JA.

JOB VACANCIES
A well established reputed Company in London looking for a Business Development Manager / Driver with following qualifications.
• A good communication skills in English and Tamil
• Valid UK Driving licence
• Experience in sales
• Right to work in UK
• Competitive rates of pay
• A work permit can be arranged after successful training
Please email your resume to :
EMail: nalin@uas.org.uk, Mob: 07868731760

குழந்தைப் பாக்கியம் இல்லையே என்ற கவலையைப் போக்க 20 வருட அனுபவமுள்ள நிகரற்ற வைத்தியர்களைத் தொடர்பு கொள்ளுங்கள்
HSFC offers comprehensive services in the areas of assisted reproduction (including IVF, ICSI, egg donation and egg sharing), gynaecology, and male infertility.
We have a flexible schedule, including appointments in the evenings and weekends.
தமிழில் தொடர்புகொள்ள அழையுங்கள்
HSFC HARLEY STREET FERTILITY CLINIC
Director: Dr Geetha Venkat MD, FRCOG
134, Harley Street, London, W1G 7JY
Phone: +44 (0)20 7436 6838
Mail : info@hsfc.org.uk | Web:www.hsfc.org.uk

R & C PROPERTY LAWYERS LLP & NOTARY PUBLIC
CONVEYANCING SERVICES:
• Residential and Commercial Conveyancing
• Last will
NOTARIAL SERVICES:
• Power of Attorneys, Notarisation of documents
• Affidavits , Oaths/ Statutory Declarations / Affirmations
Contact: SEN THAVARAJA LLB (Hons) Solicitor & Notary Public
Consultant : RAJA THAVARAJA LLB Solicitor
Telephone: 020 8772 4920
10a Upper Tooting Road , London SW17 7PG

சென்னையிலிருந்து UK விசா
தொழிலாளர் விசா
தங்கியிருக்கும் விசா
மாணவர் விசா
சுற்றுலா விசா
இந்தியாவிலிருந்து கொண்டு UK விசா செய்து தரப்படும்
UK Immigration Specialist
Poul & Minnaa 044 4261 3698
New No. 88, Old No. 150, 1st Floor, Dharma Towers
Nelson Manickam Road, Choolaimedu, Chennai 94

நீங்கள் லண்டனில் நீண்ட காலம் இருக்கின்றீர்களா? அல்லது உங்கள் அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டு விட்டதா? நீண்ட காலமாக விசா முடிந்த பின்னர் இந்த நாட்டில் இருந்துள்ளீர்களா? கவலையை விடுங்கள். மனித உரிமை சட்டத்தின் கீழ் விசாவை விண்ணப்பிக்கலாம்
Contact - Immigration Law Expert - Paul John & Co. Solicitors
020 8215 1205
இந்த விளம்பரம் கொண்டு வருபவர்களுக்கு இலவச சட்ட ஆலோசனை வழங்கப்படும்
எந்த விதமான UK விசா பிரச்சனைகளையும் உங்களுக்கு செய்து தருவோம்.
Paul John & Co. Solicitors
115a, The Grove, Stratford, E15 1EN
website - www.pauljohnandco.co.uk

வேலையாட்கள் தேவை
STORE MANAGER
Start From £26,00 Per Year, Minimum 3 Year Experience
SHOP FLOOR
£7 Per Hour Minimum 1 Year Experience
West London பகுதியில் Eastern European உணவுப் பொருட்கள் விற்பனை செய்யும் Super Marketக்கு ஆங்கிலம், தமிழ் தெரிந்த வேலை செய்யும் அனுமதிப்பத்திரம் உள்ள வேலையாட்கள் தேவை.
Polish மொழி தெரிந்திருப்பது விரும்பத்தக்கது.
Please Contact
Mob : 07484051040
Mail : PRACA@MIESZKO.CO.UK

ஈசியாய் வாசிக்க ஒரு பேப்பர்

SURREY PAWNBROKERS

(அடைவு கடை)

உங்கள் நகை அடைவில் உள்ளதா ?

2.5 % அதி கூடிய வட்டியா ? **2.5 %**

கவலை வேண்டாம் !

நாம் நேரில் வந்து உங்கள் நகைகளை மீட்டு
குறைந்த வட்டியில் மீள் அடைவு செய்து தரப்படும்.

CHOOSE YOUR CONTRACT

() 1 MONTH CONTRACT OR () 6 MONTH CONTRACT

(NO NEED APPOINTMENT, CASH AVAILABLE ALL THE TIME)

- நாணய மாற்று சேவை - EURO, USD, CAD
  BEST RATE GURANTEED
- காசோலை மாற்றுதல் - CHEQUE CASHING
- LOG BOOK LOAN - உங்களிடம் கார் உள்ளதா? LOG BOOK க்கு பணம்

இலங்கை, இந்தியா மற்றும் ஏனைய நாடுகளுக்கான RIA, Western Union ஊடான பணபரிமாற்று சேவையும் DHL, FEDEX, TNT, UPS ஊடான துரித பார்சல் சேவையும்

உங்கள் நகைகளுக்கு பிரித்தானியாவில் அங்கீகாரமும்,
உத்தரவாதமும் பெற்ற ஒரே தமிழ் நிறுவனம் **SURREY PAWNBROKERS**

தொடர்புகளுக்கு: Surrey Pawnbrokers

94, TOLWORTH BROADWAY, TOLWORTH,SURREY, KT6 7HT

T: 0208 399 9176 M: 07947 579 682

Uwps
UNIQUE WEDDING & PARTY SERVICES

திருமணம், பூப்புனித நீராட்டு விழா,
பிறந்த நாள் நிகழ்வுகள் மற்றும்
அனைத்து தேவைகளுக்கும்...

Inspire your guests by creating an event that's truly unique, Passion, Experience & Creativity, we have the perfect formula in UWPS where the occasion always exceeds your expectations

அனைவருக்கும் எமது இனிய சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் !

Wedding Decoration | Ballons Decoration | Stage Arrangement | Marquee
Banqueting Hall Decoration | Videography & Photography | Catering
LCD Backdrop Hire | Fresh Flower Bouquet | Gifts | Party Planning
Chair Cover | Table & Chair Hire | Table Cloth Hire | Centre Piece Arrangement

அனைத்து மங்களகரமான நிகழ்வுகளுக்கும் சகல வசதிகளுடன்
கூடிய 250, 350 மற்றும் 450 பேர் அமரக்கூடிய மண்டபங்கள் (Halls)
உண்டு மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்

Tel: 0203 086 9915 Mob: 0795 083 3135 – 0787 201 5560
London, UK, Europe
www.uwps.co.uk | uwps@hotmail.co.uk

AtlasShipping
MOST TRUSTED SHIPPING COMPANY

Atlas Shipping

430, High Road | Willesden | London | NW10 2XA | (Opst. Homebase)

Colombo | Kandy | Trincomalee | Jaffna | Vavuniya | Mullaithivu

உங்கள் இடத்திலிருந்து பொருட்களை எடுத்துச் சென்று
இலங்கை - இந்தியா மற்றும் உலகெங்கும் உரிய இடத்தில் சேர்க்கும் சேவை

Personel Effects Items

Special Offer Available
Call us for more details

More Details
Visit our web:

www.atlasshipping.co.uk
atlasshipping@hotmail.com

Door to Door Service to Srilanka, India and Worldwide
**** World wide cargo and vehicles shipping ****

கொழும்பு | கண்டி | திருகோணமலை | யாழ்ப்பாணம் | முல்லைத்தீவு | வவுனியா

Tel: 02084596633 - 02084590001 Mobile : 07949143535

நூறாண்டுக்கு பெற்றோலா ?

என்ன நூறாண்டுக்கு பெற்றோல் அடிக்காமல் கார் ஓடப் போகுதா? அப்போது காசு கொடுக்காமல் பெற்றோல் அடித்துவிட்டு ஓடுபவர்கள் என்னசெய்ய முடியும்.அப்படி ஓடுவதிலும் ஒரு பிரச்சினை இருக்கே! இருக்கே. எத்தனை தமிழரின் பெற்றோல் நிலைய வேலை பறி போகப் போகிறது?

- கிரி

குறைடன் அம்மன் கோயில் காரரின் அடாத்து!

கடந்த வாரம் ஒரு அந்தியெட்டிச் சடங்கில் சந்தித்தவர்களிடையே கோயில்கள் பற்றி ஒரு பேச்சு எழுந்தது. தற்போது வெஸ்ட் குறைடனில் இருக்கும் அம்மன் கோயில்காரன் எழும்பச் சொல்லியும், எழும்ப மாட்டேன் என்று அடாத்துப் பண்ணுவதாக கட்டடச் சொந்தக்காரன் கவலைப்படுகிறாராம். கட்டாயப்படுத்தி எழுப்பினால் அம்மன் உன்னைச் சும்மா விடாது என்று வெருட்டுகிறாராம். குற்றிங்கில் கடந்த 15 வருடம் நடந்த கோயில் லீஸ் ஒப்பந்தம் முடிய எழும்ப மறுத்து அடாத்துப்பண்ணி இதே கோயில்காரனை நீதிமன்ற உத்தரவு பெற்று பூட்டி பட்டேல் நடு ரோட்டில் விட்டது ஊர் அறிந்த கதை. பிறகு நாலு மாதம் கழித்து கோயில் குறைடனில் இந்த சின்ன மண்டபத்திற்கு மாறி இயங்குகிறது. 6மாதத்தில் இடம்பார்த்து எழும்பிப் போவேன் என்று சொல்லித் தான், உள்ளே உள்ளட்டாராம். இன்று இன்னும் இடம் கிடைக்கவில்லை அம்மனை எங்கு கொண்டு போவது என்று கேட்கிறாராம். 2005ஆம் ஆண்டு சொந்தக் கட்டடம் வாங்க காசு சேர்க்கத் தொடங்கினவர். இப்பவும் காசு சேர்த்துக் கொண்டு தான் இருக்கினம்.

கூடுதலான வருமானம் வந்த ஒரு பெரிய கோவில், இப்ப குச்சு மண்டபமாகிக் கிடக்கிறது. 80 வயதாகியும் பெரியவருக்கு ஆசை விடவில்லை. சிவயோக சரிட்டி என்று பதிந்தவர். மகன், மகள் நன்றிக்குரிய ஒரு சிற்பாசாரி, தலைமைப் பதவி கிடைத்தால் காணும் என்று ஒரு கணக்காளர் இந்த நாலு பேரும் தான் அந்த அறக்கட்டளைக்காரர்.

வெம்பிளியில் ஒரு சிவன் கோயிலைத் தொடங்கி அரைகுறையாக அதையும் விட்டிருக்கிறார். இவை மாதிரி ஏற்றுக் கொண்ட அம்மனை நம்ப மனசுக்கு கஷ்டமாக இருக்கு என்றார் அந்தச் சந்திப்பிலிருந்த ஒரு சைவக்காரர். இப்ப ஏப்ரல் 5இல் எழும்பச் சொல்லி நோட்டீஸ் கொடுத்தாச்சு. அம்மன் திருப்பவும் நீதி மன்றம் ஏறப்போறா. இதுதான் கோயி னெண்டால் கோயில்களை எப்படி வளர்க்கிறது ?

க.சுப்பிரமணியம்(குறொய்டன்)

தமிழ்நாட்டில் தமிழர் 60 விழுக்காடா?

வேல் கொண்டு எம் நெஞ்சங்களைத் தாக்கும் முயற்சியா? தமிழ் நாட்டில் தமிழர் 90 விழுக்காடு. அப்படி அவர்கள் பரம்பரையை வைத்து, எடுத்துக்காட்டிற்கு கருணாநிதியை தெலுங்கர் என்று வைத்துப் பார்த்து மதிப்பீடு செய்வதுடன் அங்குள்ள 20க்கு மேற்பட்ட பழங்குடி மக்களை தமிழர் இல்லைஎன்றுசொன்னாலும்75விழுக்காடு தமிழர்கள் தான். 60 விழுக்காடு என்பது தர்மத்துக்கு ஏற்காது.

- கணேசன்

நகையிலை கைவைக்கப் போறாராம்..

லண்டன் மேயர் வேட்பாளராக போட்டியிடுகிற சதீக் கான் வெற்றி பெற்றால். மக்களிடமிருக்கிற தங்க நகைகளுக்கு வரிவிதிக்கப்போகிறார் என அவரை எதிர்த்துப் போட்டியிடுகிற கொன்சவேர்ட்டிவ் கட்சியைச் சேர்ந்த ஷக் கோல்ட்ஸ்மித் என்பவர் பயம் காட்டுகிறார். தெரியாமல்தான் கேட்கிறேன் மக்களின் உடமைகள் மீது வரிவிதிக்கிறது அரசாங்கத்தின் வேலையா? அல்லத லண்டன் மாநகர சபையின் வேலையா? ஏன் இப்படி பரப்புரை செய்கிறார்கள்?

- இணுவை சி. இரங்கன்

தமிழ்ஸ் போர் நியு லேபர்?

தமிழ்ஸ் போர் லேபர் என்று ஒரு அமைப்பிருக்கிறது. தேர்தல்காலங்களில் தொழிற்கட்சி வேட்பாளர்களுக்கு வாக்குப் போடுமாறு கேட்பது. தொழிற்கட்சி வேட்பாளர்களுக்கு தமிழ் மக்கள் மத்தியில் நிதி திரட்டுவது. கூட்டங்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர்களை அழைத்து வருவது என்று ஏகப்பட்ட சோலிகளோடு இருந்தார்கள். இப்ப அவர்களின் நடவடிக்கைகள் குறைஞ்சு போய்விட்டது. காரணம் என்ன வென்றால் இவர்கள் ஆதரித்த நியுலேபர் காரர். அதுதான் பிளேயரின் அபிமானிகள் கட்சியில் ஓரங்கட்டப்பட்டுவிட்டார்கள். அடுத்த தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பு இவர்களுக்கு கிடைப்பதே கடினம் என்று பேசுகிறார்கள்.

- ஆனந்தவரதன்

சிங்கள மக்களின் அரசியல்..

கொழும்பில் இடம்பெற்ற எதிர்க்கட்சி அணியினரின் எழுச்சிக்கூட்டம் சிங்கள மக்களின் சமகால அரசியல் மனப்பான்மையைத் துல்லியமாக எடுத்துக்காட்டியது கடந்த 10 வருட கால ஆட்சியில், ஊழல்கள், கொலைகள், கடத்தல்கள் இடம்பெற்றிருக்கலாம். இவை எதுவும் கணிசமான சிங்கள மக்களின் கவனத்தை திசை திருப்பவில்லை. மாறாக மகிந்தவின் மீள் வருகையை ஆதரிப்பது போன்ற ஒரு அரசியல் அவை மோதுவதையே உறுதிப்படுத்தியது. நல்லாட்சி அரசாங்கத்துக்கு இது ஒரு பெரிய சவாலாக இருக்கப் போவது கண்கூடு.

- உமா மகாலிங்கம்

மெற்றல் வீடுகள்

வடக்கில் 65 ஆயிரம் வீடுகளை கட்டவிருப்பதாகக் கூறினார்கள். இப் போது ஏற்கனவே செய்யப்பட்ட வீடுகளை அங்கு நாட்டவுள்ளதாகக் கூறுகிறார்கள். முதலமைச்சர் விக்னேஸ்வரன் இப்படியான வீடுகள் வேண்டாம் என்கிறார். சிறிலங்கா அமைச்சர் சுவாமிநாதனோ மிற்றல் என்ற இந்திய வர்த்தக நிறுவனத்தின் வீடுகளை நாட்டப் போவதாக நாண்டுகொண்டு நிற்கிறார். இருந்து பாருங்கோ, இந்த வீடுகள் ஒரு இரண்டு வருசத்திலை ஒரு கொண்டெயினர் பெட்டிபோல வந்து நிக்கும்.

- கயல்விழி

அஞ்சலிக்கட்டுரை

திருமதி மங்கையர்கரசி அமிர்தலிங்கம் பற்றிய கட்டுரையை ***ஒரு பேப்பர்*** ல் வாசித்து மகிழ்ச்சியடைந்தேன். உண்மையில் தமிழினத்துக்கு நீண்ட காலம் பாடுபட்ட ஒரு அம்மை யாரைப் பற்றிய சேவையை இறுதி மரியாதைபோல வெளியிட்டு கௌரவித்த ***ஒரு பேப்பர்*** க்கு பாராட்டுகளும் என்னுடைய நன்றிகளும் கூட. அவருடைய செயலில் மகளிர் முன்னணியில் நானும் சேர்ந்து பணியாற்றியுள்ளேன். இங்கும் பலரோடும் பல மூத்தோர் மன்றங்களில் பணியாற்றிய வகையில் அவருடையநல்ல குணாதிசயங்களையும் தலைமைப் பண்புகளையும் நானும் அறிந்துள்ளேன். கட்டுரை எழுதிய பாவை ஜெயபாலனுக்கும் நன்றிகள்

- திருமதி சர்வா குமாரராஜா

ஒரு பேப்பர் *தொடர்பான*
உங்கள் கருத்துக்களுக்கு.....
Tel : 020 7043 4314
Email: info@orupaper.com

கருணாநிதியின் சாதி அடையாளத்தை சந்திக்கு இழுக்கும் வைகோவின் சாதிவெறி...

இன்று பத்திரிகையாளர்கள் சந்திப்பில் உணர்ச்சி பொங்க பேசிக்கொண்டிருந்தார் வைகோ. கேப்டன் டீவியில் நேரலை பார்த்துக்கொண்டிருந்தேன். வழக்கம் போலத்தான் பொங்குகிறார் என்று பார்த்துக்கொண்டிருந்தேன். இடையே சந்திரகுமாரின் வெளியேற்றத்தைப் பற்றி விளாசித்தள்ளிக் கொண்டிருந்தார். ஆச்சரியமில்லைதான்.

அப்போது சந்திரகுமாரின் செயல்பாட்டை மிகமோசமாக வர்ணித்தார். அந்த 'துரோகத்தை' அம்பலப்படுத்தும்போது அவர் 'வேறு ஒரு தொழிலைச் செய்யப்போகலாம்' என்றார். உலகத்தின் ஆதித்தொழிலைச் செய்யலாம் என்றார். இதுவும்கூட திராவிட வாய்ச்சவடால் ஸ்டைல்தான்.அதன் பிறகு கருணாநிதியும் உலகத்தின் ஆதித் தொழிலைச் செய்யப்போகலாம் ஒரே போடாக போட்டார். உலகின் ஆதித் தொழிலைச் செய்பவர்களை எதற்கு இழுக்க வேண்டும் எனறே தெரியவில்லை. அவர்கள் பணம் வாங்கிக்கொண்டு படுக்க மாட்டேன் என்றார்களா? நடுராத்திரியில் அணி மாறினார்களா? துரோகிகளாகவோ அரசியல்வாதிகளைப் போல மோசமானவர்களாகவோ அவர்கள் இருக்கிறார்களா? பாவம் அவர்கள். சரி, அதுவும் ஒரு பக்கம் இருக்கட்டும். நம்ம ஊர் 'ஆம்பிளைகளைப்' பற்றி நமக்குத் தெரியும்தானே!

அடுத்து சொல்கிறார் வைகோ. கருணாநிதிக்கு வேறு ஒரு தொழிலும் தெரியுமாம் நாதஸ்வரம் வாசிக்கிற தொழில்! எதற்காக வைகோ இந்த இடத்தில் கருணாநிதியின் சாதியை இழுக்கிறார்? அது வெறும் தொழில் சம்பந்தப்பட்ட வார்த்தை அல்ல. ஏனென்றால் கருணாநிதி ஒரு நாதஸ்வர வித்வானாக அறியப்பட்டவர் அல்ல. அவரோடு அதை சம்பந்தப்படுத்துவதாக இருந்தால் அது அவரது சாதியைச் சுட்டிக்காட்டுவதற்காகத்தானே ஒழிய. வேறு ஒன்றும் அல்ல.

வைகோவின் வார்த்தைகளை இந்த சாதியசமூகத்தில் ஒரு பச்சைக் குழந்தை கூட புரிந்துகொள்ளும். அவர் கருணாநிதியின் ஜாதியை, - நாதஸ்வரம் வாசிப்பதைத் தொழிலாக கொண்டிருக்கும் ஒரு ஜாதியை - சுட்டிக்காட்டி, அதை உலகின் ஆதி தொழிலைச் செய்பவர்களோடு சம்பந்தப்படுத்திப் பேசுகிறார். எப்படிப்பட்ட ஆதிக்க சாதி மனநிலையும் ஆணாதிக்க மனநிலையும் இருந்தால் வைகோவால் இப்படி பேசமுடியும் என்று யோசித்துப்பாருங்கள்.

வைகோவின் உண்மை முகம் எப்படிப்பட்டது என்பதை அவரே அடிக்கடி வெளிப்படுத்திவருகிறார். அதில் ஒரு அம்சம்தான் இது. அன்று 'கருவின் குற்றம்' என நாஞ்சில் மனோகரன் கருணாநிதியின் பிறப்பை கேள்விக்குள்ளாகியது தொடங்கி, இன்று ஆதி தொழில், நாதஸ்வரம் வாசிக்கும் தொழில் தெரிந்தவர் என கருணாநிதியை வைகோ விமர்சிப்பது வரை, மதிமுக தலைவர்கள் பலருக்கும் வேறு கட்சிகளில் இருக்கும் தமிழ்நாட்டு ஆண்டை சாதித் தலைவர்களுக்கும் கருணாநிதியின் சாதியைச் சுட்டிக்காட்டி விளையாடுவது ஒரு நீண்டகால சாதிவெறி விளையாட்டு. வைகோ அப்படிப் பேசியதைக் கேட்டுக்கொண்டு மேடையில் அமர்நதிருந்த திருமா , ஜிஆர். முத்தரசன், ரவிகுமார் போன்றோரின் மனத்தில் அப்போது எத்தகைய எண்ணவோட்டம் இருந்திருக்கும் என்று நமக்குத் தெரியாது.

இது கருணாநிதி ஆதரவு பதிவு அல்ல. கருணாநிதியைத் தூக்கியெறிய ஆயிரம் காரணம் உண்டு. இப்போதும் ஜெ-கருணா இருவர் கூட்டணிக்கு எதிராகவே நிற்கிறேன். அது வேறு. ஆனால் வைகோவிடம் உறைந்திருக்கும் ஆண்டை சாதி மனோபாவதைப் பற்றி குறிப்பிடவேண்டியிருக்கிறது. தமிழ் நாட்டின் பேர்போன சாதியொழிப்பாளர்கள் அந்த ஆளை நம்பி தங்களுக்கு தாங்களே குழிபறித்துக்கொண்டிருக்கிறார்களே!

- ஆழி செந்தில்நாதன்



ஒரு பேப்பர்
ORU PAPER
FRIDAY, APRIL 08, 2016, ISSUE 263

தமிழின அழிப்பிற்கு பிரித்தானிய அரசும் உடந்தை

தமிழ் மக்களுக்கு எதிரான போர் உச்சமடைந்திருந்த 2008 – 2009 காலப் பகுதிகளில், இலங்கைத்தீவில் சமூக பாதுகாப்புக் குழுக்களை அமைத்தல் என்ற செயற்திட்டத்தின் அடிப்படையில் ஆயுதம் தரிக்காத மக்கள் விழிப்புக் குழுக்களை அமைப்பதில் பிரித்தானிய அரசு உதவியதாக Phil Miller என்ற செயற்பாட்டாளர் கடந்த மாத இறுதியில் வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. சாதாரணமாக சமூக மட்டத்தில் உருவாக்கப்படும் விழிப்புக் குழுக்கள் போலன்றி, உளவுத்தகவல்களை சேகரித்து சிறிலங்கா காவற்துறையினருக்கு வழங்கும் பணியில் இக்குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டு வந்ததாகவும், இவற்றுக்கான பயிற்சிகளை பிரித்தானிய அதிகாரிகள் வழங்கியதாகவும் மேற்படி அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மனிதவுரிமை மீறல்சம்பவங்கள், போர்க்குற்றங்கள் போன்றவற்றுடன் இக்குழுக்கள் தொடர்புபட்டிருந்த விடயத்தினை பிரித்தானிய வெளியுறவு அமைச்சு அறிந்திருந்தாகவும் தெரியவந்துள்ளது.

அப்போதைய பாதுகாப்புச் செயலர் கோத்தாபாய இராஜபக்சவினால் முன்னெடுக்கப்பட்ட மேற்படி செயற்திட்டத்தில், சிறிலங்கா ஆயுதப்படைகளின் ஒட்டுப்படையாகச் செயற்பட்டு மோசமான குற்றச் செயல்களில் ஈடுபட்டுவந்த பிள்ளையான் தலைமையிலான ரீ.எம்.வி.பி குழுவினரையும் இணைக்குமாறு பிரித்தானிய அதிகாரிகள் ஆலோசனை வழங்கியதாகம் இவ்வறிக்கை கூறுகிறது. தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலை நடவடிக்கைகளில் ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா ஆகிய அரசுகளுக்கும் பங்குண்டு என ஜேர்மனியில் பிறேமன் நகரில் நடைபெற்ற மக்கள் தீர்ப்பாயம் தீர்ப்பளித்திருந்தது. ஆனால் இவ்விடயத்தில் மகிந்த இராஜபக்ச தலைமையிலான முன்னைய அரசாங்கத்தினை குற்றஞ்சாட்டும் மேற்கத்தைய தரப்புகள், வெளித்தரப்புகளின் பங்குபற்றி வாய் திறப்பதில்லை. புலம்பெயர் நாடுகளில் செயற்பட்டுவரும் தமிழ் அமைப்புகளும், செயற்பாட்டாளர்களும் கூட மேற்குலக அரசுகளின் வெறுப்பினைச் சம்பாதித்துவிடுவோமோ என்ற அச்சத்தில் இவ்விடயத்தை பெரிதுபடுத்துவதில்லை. மாறாக நடந்த அனர்த்தத்திற்கு சிறிலங்கா அரசாங்கமும், விடுதலைப்புலிகளுமே பொறுப்பாளிகள் எனக் கூறித் தப்பிக்கொள்கிறார்கள்.

பிரித்தானியாவில் நடைமுறையில் உள்ள தகவலறியும் சுதந்திரச் சட்டமூலத்தினைப் (freedom of information act) பிரகாரம் பெற்றுக்கொண்ட ஆவணங்களை வைத்து, தகுந்த ஆதாரங்களுடன் இவ்வறிக்கையை திரு. மில்லர் தயாரித்துள்ளார். இவ்விடயம் தொடர்பாக பிரித்தானிய அரசினைக் கேள்வி எழுப்புவதுடன், மேலதிக தகவல்களை வெளிக் கொணர்வதில் தமிழ் அமைப்புகளும், செயற்பாட்டாளர்களும் அக்கறை காட்ட வேண்டும்.

ஒரு பேப்பர்

வணக்கம்!

எங்கட பூராயம் பகுதிக்கு சரியான மதிப்பிருக்கிறது நிறையப் பேர் சொல்லித் தெரிஞ்சுகொண்டோம். தாங்கள் எடுத்த உடனை அதைத்தான் வாசிக்கிறதாய் கன ஆட்கள் சொல்லியிருக்கினம். பேப்பரைத் திறந்த உடனை 3ம் பக்கத்திலை இருக்கிறதாலையாய் இருக்கலாம். இங்கை லண்டனிலை மூண்டாம் பக்கம் எண்டது வேறை சங்கதி. நாங்கள் அப்பிடி தரமிறங்கிப் போக மாட்டம்.

ஒரு பேப்பர் *பூராயத்திலை வாற விசயங்கள் உங்களின்ரை மனசிலை இருக்கிற விசயங்கள்தான். பொதுவாய் ஊருக்கை அடிபடுகிற விசயங்களைத்தான் நீங்கள் எழுதிறியள் இல்லையெண்டால் போன் அடிச்சு சொல்லிறியள். இந்த விசயங்களில் ஆசிரியர் குழு தலையிடுவது இல்லை. ஆனபடியால் பூராயத்திலை வந்திருக்கிற விசயத்திற்கு விளக்கம் கேட்டு ஆசிரியரோடை கதைக்கவேண்டும் எண்டில்லை. உங்களுக்கு பிடிக்கேல்லை இல்லை உங்கடை கருத்து வேறை எண்டால் அதை எழுதி அனுப்புங்கோ. பூராயத்திலை வந்த விசயத்திற்காக கோட்டுக் போக விரும்பினவையும் இருக்கு. இப்ப ஒண்டு கோடேறியிருப்பதாகக் கேள்வி.*

நீங்கள் சந்தாதாரராய் சேர்வதன் மூலம் உங்கள் பேப்பரை தவறாமல் பெற்றுக் கொள்ளலாம். ஏற்கனவே சந்தாதாரராய் இருந்து, பேப்பர் வருகிறது நிண்டு விட்டது எண்டால் கூச்சப்படாமல் எங்களுக்கு ஒரு ஈமெயில் போடுங்கோ, அல்லது எங்கட பணியகத்திற்கு போன் அடிச்சு கதையுங்கோ.

கிட்டடியிலை லண்டனிலை ஒரு கூட்டத்திலை, ***ஒரு பேப்பர்*** *இல் ஒன்பது வருசத்திற்கு முன்னம் வந்த கட்டுரையைச் சொல்லி 'தூ'.. என்று துப்பியிருக்கிறார் ஒருவர். துப்பிறதை விட்டுட்டு கட்டுரையில் தவறு இருந்தால் எது சரி எண்டதை எங்களுக்கு அனுப்பியிருக்கலாம். தமிழ்த் தேசியத்திற்கு எதிராக தினமும் எதையோ எழுதிக் கொண்டிருக்கிற இவர் மாதிரி ஆட்கள் துப்புவதால்* ***ஒரு பேப்பர்*** *க்கு ஒன்றும் ஆகப்போவதில்லை. ஆனால், குறித்த கட்டுரைக்கு தகவல் வழங்கியவர் மேடையிலிருந்து இந்த பேச்சைக் கேட்டுக்கொண்டு கொட்டாவி விட்டுக் கொண்டிருந்ததுதான் வேடிக்கையாக இருந்திச்சுது. இந்த 'முன்னோடிகளை' வைச்சு வரலாறு எழுதப் போனால் இப்படித்தான் ஆகும் என்பது ஒரு படிப்பினையாக இருந்தது. துப்பினவர் புதிசாய் அரிதாரம் பூசியிருக்கிற வராம், நடிகர் விஜயகாந்தை பின்பற்றி தான் இப்பிடிச் செய்வதாக சொல்லியுமிருக்கிறார். விட்டுவிடுவோம், இப்பிடியான கோமாளிகளும் இல்லை எண்டால் கூட்டங்கள் போர் அடிச்சுடும் எண்டதும் மெய்தானே?*

லண்டன் மேயர் தேர்தல், ஜரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிவது பற்றிய வாக்கெடுப்பு பற்றிய உங்களது கருத்துகளை எதிர்பார்க்கிறோம்.

வேறை என்ன?

சந்திப்பம்

ஒரு பேப்பர் *காரன்கள் + காரிகள்*

War-affected people have no say in determining housing scheme run by 'MNC-statecraft'

TamilNet

The Colombo-based unitary Agent State, which has been successfully trading 'Sinhala-only reconciliation-genocide' with 'geopolitics-driven consensus' discourse in the UN Human Rights Council in Geneva, is now forcing the war-affected Eezham Tamils in the North and East to 'choose or lose' the pre-fabricated houses that are to be constructed in the name of war-affected people. The 65,000 'housing scheme', with an inbuilt agenda of sophisticated colonisation scheme, is also a good case-study for the sections among Tamils, who are being taken for a ride, to learn how multiple interests of the external 'stakeholders' are jointly facilitating the Colombo-centric 'Sri Lanka'. After the 2009 genocidal war, Tamils are now being given a lesson in how globalisation is 'benefiting' them, commented Tamil activists for alternative politics in the island.

The war-affected victims are being told to choose or lose the housing scheme through a printed form where they have to state yes or no.

The provincial council representing the interests of the people, health and environmental groups in the North and East have not been consulted at all onto how this housing scheme was to be designed and executed.

Under the prevailing Colombo-centric 'one-way' reconciliation paradigm, victims have to remain as victims of the 'victim-centered approach', which is determined by the geopolitics and exploited by the forces of globalisation and the stakeholders in the statecraft.

> Northern Provincial Council Chief Minister Justice C.V. Wigneswaran and health groups representing the interests of the people in the North and East have been critical of the expensive SL State and the MNC driven schemes.

SL Minister of 'Prison Reforms, Rehabilitation, Resettlement and Hindu Religious Affairs' D.M. Swaminathan has already determined, prior to the show-cased tender process, a Indo-European multinational corporation (MNC) as the main contractor of installing 65,000 prefabricated houses in the North and East for war-affected families, according to reports appearing in the Colombo press.

The cost to construct each of these houses is estimated at 2.1 million rupees, which is high or at least twice the sum of the expenses being spent by an average family to construct a house using native infrastructure and local workforce.

There are also controversies regarding the quality of prefabricated fittings and how long these would last, when compared to the houses being constructed locally by the people themselves. People are complaining these prefabricated structures wouldn't last for more than 3 years.

Northern Provincial Council Chief Minister Justice C.V. Wigneswaran and health groups representing the interests of the people in the North and East have been critical of the expensive SL State and the MNC driven schemes.

In addition, there are also serious questions on how these houses are going to be distributed.

There are already indications that a large number of recipients are going to be illegal Sinhala settlers from SL President's Mahaweli scheme that targets to colonise Mullaiththeevu, Vavuniyaa, Trincomalee and the border villages of Batticaloa with Sinhala settlers from Anuradhapura and Polonnaruwa.

News articles appearing in the Colombo press say that an Indo-European Multi National Corporation, ArcelorMittal, was determined as the contractor on the instructions given by the leadership of the SL Government and the remote statecraft-controlling corporate forces outside the island. M.A. Sumanthiran is said to have incidentally revealed in August last year that it was a Europe-based company which was to construct these house and he was referring to D.M. Swaminathan, according to the Colombo press.

> The cost to construct each of these houses is estimated at 2.1 million rupees, which is high or at least twice the sum of the expenses being spent by an average family to construct a house using native infrastructure and local workforce.

40% of the shares of the ArcelorMittal MNC are owned by the family of UK-based Lakshmi Mittal, who ranked 6th in the list of world billionaires in 2011. Although being based in UK, Mr Mittal, who hails from Rajasthan, India, doesn't hold British citizenship. Mittal is a member of the Indian Prime Minister's Global Advisory Council.

Vaddukoddai Resolution:

A Watershed In The History Of Eelam Tamils

By Eelaventhan Manickavasakar

The Vaddukoddai Resolution of May 14th 1976 is a watershed in the history of the Eelam Tamil freedom struggle. The late Dr A.J.Wilson former head of the political science department of Brunswick University, described it in his book, S.J.V Chelvanayakam and the Crisis of Sri Lankan Tamil Nationalism, 1947 – 1977 – page 128, as the turning point when Eelam Tamils turned their minds towards liberation: "In the years after the onset of the Sirimavo government's policies underlining Sinhala majoritarianism, the Tamil people turned their minds towards liberation and self-determination. Tamil youth understood such concepts as a meaningful step towards freedom and independence, for them – it was the only way in which their life chances could be improved, and they will no longer be at the mercy of the Sinhala political class."

Dr A.J. Wilson in his careful and analytical study said further about the Vaddukoddai Resolution of May 1976 in the following words: "the goals were ratified in the Vaddukoddai Resolution of 14th May 1976 at the first national convention of the TULF under Chelvanayakam's chairmanship. This historic pronouncement accused the Prime Minister Mrs. Bandaranaike of having 'callously ignored' the TULF's last attempt…to win constitutional recognition of the Tamil Nation without jeopardizing the unity of the country the convention called on the "Tamil Nation in general and the Tamil youth in particular to come forward to throw themselves fully in the sacred fight for freedom and to flinch not till the goal of a sovereign socialist state of Tamil Eelam is reached."

Dr A.J. Wilson was always careful of the choice of words. This is how he described the collective decision of the main Ceylon Tamil components of the TULF, that is FP and ACTC – Chelvanayakam approving the choice of words. He was a conviction politician who never minced his words, and he was certainly also pragmatic in that he would, "not refuse bread if cake was not on offer". As a lawyer and a politician he knew that goals could not be attained in a single leap; he believed in the policy of 'a little now and more later'. The 'little now' could not therefore become an end in itself, although many of the comfortable Tamil bourgeoisie interpreted the 'little now' aspect of Chelva's policy – best characterized by the 'interim adjustments' he arrived at with prime ministers, SWRD Bandaranaike in 1957 and Dudley Senanayake in 1965 – as final destinations. This was far from his own interpretation of Sinhala majoritarianism. He had come to the conclusion as early as 1958 that the Sinhala leaders were "not big enough to rule the Tamils".

> "We have abandoned the demand for a federal Constitution. Our movement will be all non-violent… we know the Sinhalese people will one day grant our demand and that we will be able to establish a state separate from the rest of the island."

Dr A.J.Wilson who understood his father-in-law Chelva's mindset, in his lucid manner he said what Chelvanayakam stood for. To quote Dr A.J.Wilson again "That Chelva stood unflinchingly for a separate Tamils state was clearly enunciated in the last important statement he made in the national state assembly, a few months before his death. Speaking on Nov 1976 at the second reading debate of the annual appropriate bill for 1977, He acknowledged to his listeners how his federal movement has failed to achieve the objective of obtaining the "lost rights on the Tamil – Speaking people".

Our ancient people were wise, he said, and he seemed to fault himself by stressing that they "had their own Kingdom", as if to say that is – the FP should at the very start have confronted the proposition of a separate state. He reminded his audience of parliamentarians that the Irish had won their freedom … but after centuries of struggle "against the British". (He had also often told the Tamil public how a divided Poland had become unified on two different occasions). There was a finality and finiteness in his conclusion:

"We have abandoned the demand for a federal Constitution. Our movement will be all non-violent… we know the Sinhalese people will one day grant our demand and that we will be able to establish a state separate from the rest of the island."

Whatever the comfortable Tamil middle class residing in Colombo said, Chelva's last testament was that only a Tamil state could protect the Tamil people from repression by the Sinhala state apparatus. When asked by a journalist how the TULF would achieve its goals, Mr. Chelvanayakam replied prophetically… "We would make such a nuisance of ourselves that they (the Sinhalese) would throw us out." In this context it should be said to the credit of Chelvanayakam that he admitted in his interview to the BBC correspondence that "we had failed to produce a Tamil Jinnah at that time".

To give weight-age to the writer's argument of the Vaddukoddai Resolution the writer has quoted at length the academician's statement. In the writers opinion the Vaddukoddai Resolution is a turning point in the history of Eelam Tamils struggle for freedom and an eye opener to the Tamils abroad.

Following the Vaddukoddai Convention the Govt. challenged the resolution and charged the TULF for treason. The trial -at -bar consisted of five eminent judges and 65 Tamil legal luminaries. Mr. Murugesu Thiruchelvam a constitutional authority presented his case in this beautiful manner: He said, "Sinhalese never conquered us nor did we give our consent". In a very convincing manner he said, what the Tamils are asking is what we had & what we lost, we want to regain and reassert ourselves. It comes within the category of restoration or reconstitution. He emphasized that the word separation is a misnomer.

In a very interesting manner, he drew parallel to the Tamils of Tamilnadu & Tamils of Eelam. "Tamilnadu is approx. 55,000 Sq. Miles and the population is roughly 80 million. The size of Eelam is smaller than Tamilnadu. And the population is also comparably small. But the Tamils of Tamilnadu ceased to rule themselves by the end of 1337- the beginning of the 14th century. With the conquest by the Muslims & the Andras. As far as the Eelam Tamils are concerned King Sankili lost his rule in 1619 to the Portuguese. But Pandaravanniyan – the Vanni King ruled till 1803, in other words till the beginning of the 19th century. Tamils of Tamil Eelam maintained their independence till the beginning of the 19th century. We are not here to decry or belittle the people of Tamilnadu. What is being emphasized here is that the Tamils of Tamil Eelam have maintained their contiguity till 1803 and therefore we demand that we have the legal right to rule ourselves."

> To give weight-age to the writer's argument of the Vaddukoddai Resolution the writer has quoted at length the academician's statement. In the writers opinion the Vaddukoddai Resolution is a turning point in the history of Eelam Tamils struggle for freedom and an eye opener to the Tamils abroad.

The question may be posed by doubting Thomases that the present area of the Tamils is in a weakened position, because of Sinhala colonization, but we would like to quote Muhammad Ali Jinnah the father of Pakistan. When he was asked the question whether he is going to have whole of Pakistan as envisaged by him. Typically of an able articulate civil lawyer Jinnah said, "let us have a truncated Pakistan or a moth eaten Pakistan than no Pakistan". Eelam Tamils are quite conscious of our weakened position. But our agitation for an independent state of Tamil Eelam will be a reality even if we do not have the entire area for us. There are nations in the UN, which are even smaller than Tamil Eelam – the traditional homeland of the Tamils. Israel is a barren area where the seawater is converted into drinking water and vegetables are grown in polythene bags. The number of Jews in Israel is lesser than the Jews in America. But Israel being an Independent state the Jews in America are in a position to dictate terms to America in its foreign policy, finance and the media. In other words it's not the size of the country or the strength of the population that counts in a freedom struggle. It is the will & determination of the people that counts in a freedom struggle. Let us not forget Singapore, is smaller than the Jaffna Peninsula. Whether we like it or not the name of Singapore is often mentioned by every body and it is a power to be reckoned with.

Recently Mr. Urudrakumaran Prime Minister of the TGTE when addressing his members said, "That even if Maithri is going to be mother Teresa, is he going to live forever to entrust our future to him?" The writer was in the audience and endorsed what Mr. Urudrakumaran said by quoting what Jinnah said when a reporter asked him that "Gandhi & Nehru are great men and they think of India as a whole and their above narrow parochialism, if that is so why do you harp on Pakistan?" Mr. Jinnah with his unforgettable smileuttered "that he readily agree that

(Continued on page 13)

ஒரு பேப்பர் உங்கள் கைகளில் தவழுவதற்கு உறுதுணையாய் நிற்பவர்கள் . . .

BBK Partnership
Croydon..... 020 8150 9950

Meera Arnold & Co
Southgate..... 020 8882 2333

Aananthi Acca [Rayners Park]
Dr. Ratneswaran [Bromley]
R. Ganeshalingam [Purley]
Subramaniam [Eastham]
Sinnakutty [Walthamstow]
Babu [Thornton Heath]
Sriskanthan [Kensal Rise]
Vithuran [Croydon]
Bobby [Sutton]
P. Pathmanathan [Wembley]
Peter Jesudasan [Rayners Park]
T.Selvaratnam [Wembley]
K.Durairajah [Greenford]

இந்த வெற்றிடத்தை நிரப்புவது உங்கள் கைகளில்தான் உள்ளது.

ஒரு பேப்பர் தொடர்ந்து வெளிவர உங்கள் தயவை நாடி நிற்கிறது. உங்களால் முடிந்த சிறிய பங்களிப்பை தந்துதவுமாறு அன்புடன் கேட்கின்றோம்.
நன்றி.

Name: **ORU PAPER Ltd**
Bank: **HSBC**
A/C: **02211556**
S/C: **40-07-04**

ஒரு பேப்பர்
ORU PAPER

எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!

ஆசிரியர் குழு:

பிரித்தானியா
அ.இரவி - மணி - அகிலன் மாதவன்

கனடா
தயா - அரவிந்தன் - சிந்து

பொறுப்பாசிரியர்
- கோபி -

விளம்பரம்
அஜந்தா

அச்சு
தர்சினி (கனடா) - சுகன்யா

வடிவமைப்பு
மயூரன் - யுகன்

முகப்பு வடிவமைப்பு
seven zero graphics

விளம்பர வடிவமைப்பு
ரஜீவன் - மாயா - சாரங்கன்

தமிழ் எழுத்துரு உதவி
சுரதா யாழ்வாணன்

நிதி – நிர்வாகம்
அஜந்தா

வழங்கல்
உதயகுமார்-ரூபன்-பிரகாஸ்

உங்கள் தொடர்புகட்கு:

தொலைபேசி (Tel)
லண்டன் 020 7043 4310
கனடா 416 613 2850

தொலைநகல் (Fax)
லண்டன் 020 7043 4312
கனடா 416 438 7855

ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகட்கு:

பணிமனை முகவரி
ORU PAPER
G11 LOMBARD HOUSE
2 PURLEY WAY
CROYDON, CR0 3JP

மின்னஞ்சல்:
info@orupaper.com

இணையம்:
www.orupaper.com

'Oru Paper' is a bi-lingual paper published from London by Oru Paper Ltd. on the 1st and 3rd Fridays of each month The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.

ஈழத்தமிழர் தொடர்பில் மூன்று நிலைப்பாடுகளை எடுக்குமாறு தமிழக கட்சிகளை நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் கோரிக்கை !

நடைபெறவிருக்கும் சட்டமன்றத் தேர்தலை தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கும் ஆதரவு தெரிவிக்கும் களமாக பயன்படுத்துமாறு தமிழக கட்சிகளுக்கும் மக்களுக்கும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. தமிழீழ மக்களின் விடுதலைப்போராட்டத்திற்கு ஆதர வாக மூன்று நிலைப்பாடுகளை தங்களது தேர்தல் அறிக்கையில் உள்ளடக்குமாறும் அரசியல் கட்சி களைக் கோரியுள்ளது.

இதுதொடர்பில் நாடுகடந்த தமிழீழ அரசாங் கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையின் விபரம் :

தமிழ்நாட்டு மக்கள் தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தில் இணைபிரியாத அங் கமாக உள்ளார்கள். அதன் அடிப்படையில் எதிர்வரும் மே மாதம் 16 ஆம் நாள் நடை பெறவுள்ள தமிழ் நாடு சட்டப்பேரவைக்கான தேர் தலில் தமிழ்நாட்டு அரசியல் கட்சிகள் ஈழத் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை வலுப்படுத் தும் வகையிலான நிலைப்பாடுகளைத் தங்கள் தேர்தல் அறிக்கையில் உள்ளடக்குவார்கள் என நாம் உறுதியாக நம்புகிறோம்.

தமிழக மக்களும் எவ்வாறு தங்கள் வாக்கு களை அளிப்பது தொடர்பான தீர்மானத்தை எடுக் கும்போது தமிழீழ மக்களின் விடுதலையையும் முக்கிய விடயமாகக் கவனத்தில் கொள்வார்கள் என்பதும் எமது உறுதியான நம்புகிறோம்.

தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட் டம் தற்போது சவாலான சூழலொன்றை எதிர் கொண்டுள்ளது. தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சனைக்கான அரசியல் தீர்வு என சிங்கள தேசம் தீர்மானிக்கும் ஒற்றையாட்சிமுறையி னைத் தமிழர் மீது திணிக்கும் முயற்சிகள் மேற் கொள்ளப்படுகின்றன.

அனைத்துலக சமூகத்தினிடையே பலம்மிக்க சில நாடுகள் தமது நலன்களின் அடிப்படையில் அநீதியான இந்த நடைமுறைக்குத் துணை போகும் நிலைமையே தற்போது காணப்படுகின் றது. சிறிய மக்கள்தொகையினைக் கொண்ட ஈழத் தமிழர் தேசத்துடன் நீதியின் அடிப்படையில் உற வாடுவதனைவிட சிங்கள தேசத்துடனும் சிறி லங்கா அரசுடனும் நலன்களின் அடிப்படையில் உறவாடி அதன் மூலம் தமது நலன்களை அடைந்து கொள்வதனையே அனைத்துலக அரசு கள் விரும்புகின்றன. இந்திய மத்திய அரசின் நிலையும் இதுவாகவே உள்ளது.

இந் நிலையில் மாற்றம் ஏற்பட வேண்டுமானால் தமிழக மக்கள் ஈழத் தமிழ் மக்களுடன் உறுதி யாகக் கைகோர்த்து நிற்க வேண்டும். ஈழத் தமிழ் மக்களின் அரசியல் போராட்டத்தைத் தமிழக மக்கள் தமது போராட்டமாகக் கையிலெடுக்க வேண்டும். தற்போது ஆட்சியில் இருக்கும் கட் சிக்கு தமிழகக் கட்சிகளின் ஆதரவு தேவையற்ற தாயினும் பலம்மிக்க ஒரு மாநிலத்தின் உணர்வு களை மத்திய அரசால் அலட்சியம் செய்துவிட முடியாது. தமிழக மக்கள் தமது அரசியற் செயற் பாடுகளின் ஊடாக இந்தியமத்திய அரசின் நிலைப் பாட்டில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

இந்தியாவின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படு மானால் ஈழத் தமிழ் மக்களுக்குச் சாதகமான அனைத்துலகச் சூழல் உருவாகும்.

தமிழக அரசியல் கட்சிகளும் மக்களும் எதிர் வரும் மே மாதம் 16 ஆம் நாளில் நடைபெறவுள்ள தமிழ் நாடு சட்டப்பேரவைக்கான தேர்தலைத் தமிழீழ மக்களுக்கும் தமிழீழ விடுதலைப்போராட் டத்துக்கும் ஆதரவு தெரிவிக்கும் களமாகப் பயன் படுத்த வேண்டும் என நாம் வேண்டுதல் செய்கி றோம். இதன் பொருட்டு பின்வரும் மூன்று நிலைப் பாடுகளையும் தமிழக அரசியல் கட்சிகள் தங்கள் தேர்தல் அறிக்கையில் உள்ளடக்க வேண்டும் எனவும் தோழமையுடன் நாம் கோருகிறோம்.

1. தமிழீழ மக்களின் தேசிய இனப் பிரச்சனைக் குத் தீர்வு காண்பதற்கு சுதந்திரமும் இறைமை யும் கொண்ட தமிழீழத் தனியரசு உட்பட்ட தீர்வு வடிவங்களைக் கொண்டதொரு மக்கள் வாக்கெ டுப்புஈழத்தாயகத்திலும்புலம்பெயர்ந்தும்வாழும் தமிழ் மக்கள் மத்தியிலும் அனைத்துலக சமூகத் தின் பங்குபற்றுதலோடு நடைபெற வேண்டும்.

2. சிறிலங்கா அரசினதுஈழத்தமிழர் தேசம்மீதான இனஅழிப்பினை அனைத்துலகக் குற்றவியல் நீதீ மன்றம் அல்லது அதற்கு நிகரான அனைத்துலக நீதி விசாரணைப் பொறிமுறையின் ஊடாக விசாரணைக்குட்படுத்தி, பரிகார நீதியின் அடிப்படையில் ஈழத் தமிழ் மக்களுக்குரிய நீதி வழங்கப்பட வேண்டும்.

3. தமிழ் நாட்டில் அரசியல் தஞ்சம் கோரி யுள்ள ஈழத் தமிழ் மக்களின் நலன்கள் இந்திய அரசாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட அனைத்துலக மனித உரிமைகள் சாசனத்தில் உறுதி செய்யப் பட்டுள்ள அரசியல், சமூக, பொருளாதார, கலாச் சார உரிமைகளின் அடிப்படையில் பேணப்படு வதை உறுதிப்படுத்துவதுடன் அவர்கள் விரும்பும் பட்சத்தில் இரட்டைக் குடியுரிமை (dual citizenship) வழங்கப்படுவதும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

இந் நிலைப்பாடுகள் எல்லாமே அனைத்துத் தமிழக அரசியல் கட்சிகளுக்கும் ஏற்புடையவை எனவே நாம் நம்புகிறோம். இவற்றுள் முதல் இரண்டு கோரிக்கைகள் சார்ந்த தீர்மானங்கள் தமிழ் நாடு சட்டப் பேரவையில் அனைத்துக் கட்சி களது சம்மதத்தோடும் ஏற்கெனவே ஒருமனதாக நிறைவேற்றப்பட்டவையே. இத்தகைய தீர்மானங் கள் நிறைவேற்றப்பட்டுள்ள போதும் அவற்றினை இந்திய மத்திய அரசு ஏற்கச் செய்வதற்கான செயற்பாடுகள் தமிழகத்தில் போதியளவு நடை பெறவில்லை என்ற கவலை எமக்கு உண்டு. வர வுள்ள தேர்தலின்போது இந் நிலைப்பாடுகள் குறித்துத் தமது செயற்பாட்டுத் திட்டங்களையும் அரசியற் கட்சிகள் தமது தேர்தல் அறிக்கையில் உள்ளடக்க வேண்டும் என்று நாம் அன்புடன் கோருகிறோம்.

தமிழ்நாட்டுமக்கள்தமிழ்நாடுசட்டப்பேரவைத் தேர்தலில் எந்தக் கட்சிக்கு வாக்களிப்பது என்ற முடிவினை எடுக்கும் போது ஈழத் தமிழ் மக்கள் விடயத்தையும் முக்கியமானதொரு விடயமாகக் கவனத்துக்கெடுத்து முடிவுகளை மேற்கொள்ளு மாறு நாம் வேண்டுகிறோம்.

தமிழ்நாட்டு மக்கள் என்ற வலுமிக்க சமூகத் தின் பொருண்மிய பலமும் அரசியற் செல்வாக் கும் மேலோங்கிய நிலையில் நிமிர்ந்து நிற்கவும் அதே பலத்தின் அடிப்படையில் எமது தேசிய இனப்பிரச்சனை தொடர்பில் நாம் வெறுமனே பார் வையாளர்களாக இல்லாமல் பலம் கொண்ட பங் காளர்களாக மாறும் நிலை ஏற்பட உதவும் வகை யிலும் உணர்வோடு செயற் படுங்கள் என்பதே தமிழ்நாட்டு மக்கள்முன் நாம்வைக்கும் வேண்டு தல் ஆகும்.

இவ்வாறு நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் விசுவநாதன் உருத்திரகுமாரன் அவர்கள் எதிர்வரும் மே மாதத்தில் நடைபெறவுள்ள தமிழ் நாடு சட்டப்பேரவைத் தேர்தல் தொடர்பாக விடுத் துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு பேப்பருக்காக கிறுக்கனின் கிறுக்கல்..

தோன்றின் புகழோடு தோன்றுக

இது திருக்குறள். சுற்றி வளைக்காது கீழே அக் குறளைத் தந்துவிட்டு விடயத்திற்கு செல்வோம்.

தோன்றின் புகழோடு தோன்றுக: அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று

ஒரு முதுவர் இக்குறளுக்கு தமிழில் உரை எழுதிச் சுதப்பியதுடன் திருப்தி அடையாது ஆங்கி லத்தில் வேறு அதை மொழிபெயர்த்து உலகுக்கே தவறான செய்தியை அனுப்பிக் கொண்டிருக்கின் றார். Live in fame; or become extinct. . அவர் மட்டும் தான் அப்படிச் செய்தார் என்றில்லை. ஈவிஎஸ் என்னும் கல்விக் குழுவின் உரையும் அதே சாயல்தான். பிறந்தால் புகழுடன் பிறக்கக் கடவர், அப்புகழ் இல்லாதவர் பிறத்தலினும் பிறவாமை நன்று.

வள்ளுவரே உம்மை உலகினுக்களித்து தமிழ் வான்புகழ் கொணடிருக்கலாம். ஆனால் உங்கள் குறள்களுக்கு வரும் தப்பான உரைகள் மூலம் உங்கள் நிலை பாதிக்கப் படுகிறது. ஒரு சிலர் கற்புள்ள பெண் மழை பெய்யும் என்றால் பெய்யும் என்று உன் குறள் ஒன்று கூறுவதாக உரை எழுது கிறார்கள். அடுத்து மேலுள்ள குறளைப் பார்ப் போம். அதற்கு டாக்டர் மு.வரதராசன் அளித்த சரியான உரையை தருகிறேன். ஒரு துறையில் முற்பட்டுத் தோன்றுவதானால் புகழோடு தோன்ற வேண்டும், அத்தகைய சிறப்பு இல்லாதவர் அங்குத் தோன்றுவதைவிட தோன்றாமலிருப்பது நல்லது. இக்குறளுக்கு ஒரு முதுவரும் கல்விக் குழுவினரும் உரை எழுதி எப்படிச் சுதப்புகிறார் கள் என்று பார்த்தீர்கள்.

மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் அவர்கள் கூறுவது சரிபோல் தெரிகிறது. பிறந்தால் புகழு டன் பிறக்கக் கடவர், அப்புகழ் இல்லாதவர் பிறத்த லினும் பிறவாமை நன்று. இதை எழுதியவர் வள்ளு வர் என்பதை மறந்தால் நாங்களும் அவர்களைப் போலத்தான் சுதப்புவோம். எழுதியவர் வள்ளு வராச்சே. ஒரு முறைக்கு பலமுறை சிந்தித்துத் தான் உரை எழுதவேண்டும்.

ஒரு செயல் மற்றையவர்களைக் கவரும் வகை யில் செய்யப்பட வேண்டும். இது செயற்கரிய செயல் என்று மற்றையவர்கள் போற்ற வேண்டும். அவ்வகையில் ஒருசெயலை ஆற்ற வேண்டுமென் றால் எம்மை நாமே அர்ப்பணித்து கடும் உழைப்பு டன் செயல்படவேண்டும். எவ்வளவுதான் நாம் எம்மை அர்ப்பணித்துச் செயற்பட்டாலும், எம் இயல்பான ஆற்றல் அதற்கு எவ்வளவுக்கு ஒத்து ழைப்புத் தரும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டிற்கு குரல் வளம் அமை யப் பெறாத அபயக் குரல் பெற்ற என்னைப்போன்ற ஒருவர், கடும் உழைப்புடன் பல்லாண்டு காலம் சங்கீதம் பயின்று வாய்பாட்டிற்காக மேடை ஏறி னாலும் அவரின் அபயக் குரல் ஒருபோதுமே அவ ருக்கு அபயம் கொடுத்து அவரை இனிமையாகப் பாட வைக்காது. இது ஒரு எளிதான கணிப்பு. இந்த வகையான சுய ஆற்றல் கணிப்பு எல்லோருக்கும் தேவை. எல்லாத் துறைக்கும் தேவை.

மேடையில் பாடுவதைப் பொறுத்த மட்டில் குரல் வளம் இல்லாதவர்கள் கதை முரடன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படும் கதைபோல் தோன்றலாம் ஆனாலும் மன வலிமையும் கடும் உழைப்பும் கொண்டவர்கள் எந்தத் துறையுள் நுழைந்தாலும் அந்தத் துறைக்கு புகழ் ஈட்டுவதுடன் தாங்களும் புகழ் பெறுவார்கள். குரல் வளம் இல்லாவிட்டாலும் அப்படியானவர்கள் சங்கீதத் துறையுள் நுழைந் தாற்கூட தங்கள் உழைப்பின் பயனால் கிடைத்த ஆற்றலைப் பயன்படுத்தி எத்தனையோ குரல் வளம் கொண்டவர்களுக்கு வழிகாட்டியாக மாறி தாங்களும் புகழ் பெறுவார்கள்.

புகழ்விரும்பாதவர்கள் எவரும் இல்லை. இதைக் கூறும்போது ஒரு மனோ தத்துவ நிபுணரின் கூற்று ஞாபகத்திற்கு வருகிறது. பாலியல் உந்தும் சமூகத்தில் தன் பெயர் முக்கியம் வகிக்க வேண்டு மென்ற எண்ணமுமே மனித வாழ்வின் உந்து சக்தி களாம். இங்கு நான் கூற முற்படுவது புகழ் எம் வாழ் வின் இன்றியமையாத அங்கம் என்பதை எடுத்து ரைக்கவே.

மனவலிமை, கடும் உழைப்பு, ஆகியவற்றுடன் நம் நோக்கும் முக்கிய இடத்தை வகிக்கின்றது. எமது சமூகத்திற்கு தேவைப்படும் பணிகளில் ஒரு குறிப்பிட்ட பணியில் தொய்வு ஏற்படுகிறது அதற்கு முண்டு கொடுக்க வேண்டும் என்று ஒருவர் வலிந்து பணி செய்யச் செல்வாரானால் அவருக்கு அது புகழையும் கொடுக்கும் அதற்கு மேலாக மன நிறை வையும் கொடுக்கும். இன்றைய தமிழ் மக்களின் நியாயமான போராட்டத்தின் நியாயங்கள் தொய்வு கண்டுள்ளன. அவற்றை பரப்புரை செய்தாலே அதன் பயன் எமக்கு மன நிறைவைத் தருவதுடன் எம் இனத்திற்கு பெரும் சேவையாகவும் அமையும்.

மேலே கூறப்பட்ட எல்லாவற்றையுமே வள்ளுவர் சுருக்கமாகக் கூறிவிட்டார். தோன்றின் புகழோடு தோன்றுக என்ற மூன்று சொற்களுள் அடக்கி விட்டார். இந்த மூன்று சொற்களும் அடங்கிய குற ளுக்குத்தான் எத்தனை வகை உரைகள் எழுதிக் குழப்பி உள்ளார்கள். ஒரு துறையில் முற்பட்டுத் தோன்றுவதானால் புகழோடு தோன்ற வேண்டும், அத்தகைய சிறப்பு இல்லாதவர் அங்குத் தோன்று வதைவிடத் தோன்றாமலிருப்பது நல்லது

- கிறுக்கன்

சேர்ந்தோடிய தமிழ் அமைப்புகள் எதிர்நீச்சலுக்குத் தயாரா ?

கோபி
ஒரு பேப்பர்

கடந்த இதழில், இப்பத்தியில் கொழும்பின் அரசியல் முன்னெடுப்புகள் அரசியற் தீர்வைக் காட்டி பொறுப்புக்கூறல் பொறிமுறைகளை இழுத்தடிக்கவும், நல்லிணக்கத்தைக் காட்டி அரசியற் தீர்வை தட்டிக்கழிக்கும் நடவடிக்கைகளாக அமைகின்றன எனக்குறிப்பிட்டிருந்தேன். சிறிலங்கா அரசாங்கம் இவ்வாறு நடந்துகொள்ளும்போது மேற்குலகத் தரப்புகளின் நிலைப்பாடு எவ்வாறிருக்கிறது ? மார்ச் 23ம் திகதி பிரித்தானிய பாராளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற பிரித்தானிய அனைத்துக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களுடனான ஒன்றுகூடல் வைபவத்தில் பொதுநலவாய நாடுகளுக்கான அமைச்சர் திரு. ஹியூகோ ஸ்வையர் ஆற்றிய உரை இவ்வினாவிற்கு விடையளிப்பது போல் அமைந்திருந்தது. இவ்வாறு கூறும்போது, பிரித்தானிய அரசின் நிலைப்பாட்டை வேறு வழிகளில் அறிந்துகொள்ள முடியவில்லை என அர்த்தப்படுத்திக் கொள்ள வேண்டியதில்லை. ஆனால் பிரித்தானியாவில் வாழ்கிற தமிழ் மக்களுக்கு ஆளும் கொன்சவர்ட்டிவ் கட்சி அரசாங்கம் என்ன செய்தியினை வெளிப்படையாகச் சொல்ல விரும்புகிறது என்பதனை அறிந்துகொள்ளவதற்கு இந்த நிகழ்ச்சி உதவியது எனலாம்.

தமிழ் மக்களுக்கான அனைத்துக்கட்சி பாராளுமன்றக் குழுவில் எண்பத்தைந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர் எனக் கூறப்படுகின்ற போதிலும் அன்றைய ஒன்று கூடலில் ஆறு பாராளுமன்ற உறுப்பினர்களே கலந்து கொண்டனர். அவர்களில் ஹியூகோ ஸ்வையர் மாத்திரமே அமைச்சர் தரத்தில் இருப்பவர். கடந்த ஜனவரியில் சிறிலங்காவிற்கு சென்றிருந்த ஸ்வையர் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தைப் பொங்கல் விழாவில் இரணில் விக்கிரமசிங்க, சந்திரிகா ஆகியோருடன் கலந்து கொண்டார். ஸ்வையர் தனதுரையில், சிறிலங்காவில் விரும்பத் தகுந்த மாற்றம் ஏற்பட்டு வருவதாகவும், மைத்திரிபால, இரணில் ஆகியோர் மீது தாம் நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் கூறி, நிலமையை நேரில் சென்று பார்ப்பதற்கு புலம்பெயர் மக்களை விமான மேறி சிறிலங்காவிற்கு செல்லுமாறு வேண்டுகோள் விடுத்தார். சிறிலங்காவின் பொருளாதார நிலமை கவலையளிப்பதாகக் கூறிய அவர் அங்கு தமிழ் மக்கள் முதலீடுகளைச் செய்யவேண்டும் எனவும் ஆலோசனை வழங்கினார் அத்துடன் நின்றுவிடாது 'ஒரு சிறிலங்கா' (One Sri Lanka) ஆக அந்தநாட்டை கட்டியெழுப்புவதில் புலம்பெயர் தமிழர்கள் முக்கிய பங்காற்ற முடியும் எனவும் தெரிவித்தார்.

புதிய ஆட்சியிலும் மனிதவுரிமைகள் மீறப்படுகின்றன என வெளிவரும் செய்திகள் அமைச்சருக்கு அசௌகரியத்தைக் கொடுக்கின்றன போல் தெரிகிறது. ஏனெனில் அவரது உரையில், சில பத்திரிகைகளில் வெளிவரும் செய்திகளை நம்ப வேண்டாம் எனவும், வெள்ளை வான் கடத்தல்கள் இப்போதும் நடைபெறுகின்றன என்பதனை தன்னால் ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது எனவும் கூறியிருந்தார். சித்திரவதைகள் நடைபெறுவதுபோன்ற குற்றச்சாட்டுகள் பற்றிக் குறிப்பிட்ட அவர், அச் சாட்சியங்களை மிகக் கவனமாக பரிசீலக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

இவ்வைபவம் தொடர்பாக பிரித்தானியத் தமிழர் பேரவை வெளியிட்ட அறிக்கையில் திரு. ஸ்வையரின் உரையில் தெரிவித்த மேற்குறித்த விடயங்கள் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. தமிழ் கார்டியன் இணையத்தில் பிரசுரிக்கப்பட்ட செய்தியில், ஐ.நா. மனிதவுரிமைச்சபையில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை சிறிலங்கா அரசாங்கம் அமுல்படுத்துவதில் போதியளவு முன்னேற்றம் காட்டாவிடில் அதனை பிரித்தானிய அரசாங்கம் அனைத்துலக கவனத்திற்கு கொண்டுவரும் என்ற விடயமே முக்கியத்துவபடுத்தப்பட்டிருந்தது.

சித்திரவதைகள், வெள்ளை வான் கடத்தல்கள் பற்றிய ஸ்வையரின் கருத்து அந்த வைபவத்தில் கலந்துகொண்டிருந்த சித்திரவதைகளிலிருந்து விடுதலை (Freedom from Torture) என்ற தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் பணிப்பாளர்களில் ஒருவரான சொனியா ஸ்கேற்ஸ் (Sonya Sceats) க்கு ஏற்புடையதாக இருக்கவில்லை. அங்கிருந்த படியே ரூவிற்றரில் அவர் இட்ட பதிவுகளிலிருந்து தான் இவ்வைபவத்தில் ஸ்வையர் கூறிய மேற் குறித்த முக்கிய விடயங்களை வைபவத்தில் கலந்து கொள்ளாதவர்கள் அறிந்து கொண்டனர்.

மேற்படி வைபவத்திற்கு திரு. ஸ்வையர் அவர்களை அழைத்து உரையாற்ற வைத்தமைக்காக பிரித்தானியத் தமிழர் பேரவைக்கு ஈழத்தமிழ் மக்கள் நன்றியினைத் தெரிவிக்க வேண்டும். ஏனெனில் இலங்கைத் தீவு விடயத்தில் மேற்குலகின் தற்போதைய வெளிப்படையான நிலைப்பாட்டினை தமிழ் மக்கள் அறிவதற்கு இந்த வைபவம் ஒரு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. அவரது உரையில் தெரிவிக்கப்பட்ட கருத்துகள் பிரித்தானியத் தமிழர் பேரவையினருக்கு சங்கடத்தை ஏற்படுத்தியிருக்கலாம். ஏனெனில் தாம் பிரித்தானிய அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கைகளில் மாற்றத்தினைக் கொண்டு வந்திருக்கிறோம் என ஊடகங்களில் வந்து தமது சாதனைப் பட்டியலை வாசிக்கிறபோது, வெளியுறவுத்துறை துணை அமைச்சர் ஒன்றுபட்ட சிறிலங்காவிற்கு பரப்புரை செய்வதனை எவ்வாறு அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியும் ?

அன்றை வைபவத்தில் திரு. ஸ்வையர் வெளியிட்ட கருத்துகளையிட்டு பிரித்தானியத் தமிழர் பேரவையின் அதிர்ச்சியடைந்திருக்க வேண்டியதில்லை. ஏனெனில் அண்மைக்காலமாக, மேற்குலக அரசபிரதிநிதிகளுக்கும் தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நடைபெற்ற எல்லாச் சந்திப்புகளிலும் இவ்விடயம் வலிறுத்தப்பட்டு வருகிறது. கடந்த செப்ரெம்பரில் நடைபெற்ற ஐ.நா. மனிதவுரிமைச் சபையின் கூட்டத் தொடருக்கு வந்திருந்த தமிழ்ப்பிரதிநிதிகளுக்கும் இவ்விடயம் தெரவிக்கப்பட்டது. அதாவது வடக்கு - கிழக்கில் உட்கட்டுமானம் மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு சிறிலங்கா அரசாங்கத்திடம் நிதியில்லை ஆகவே புலம்பெயர் தமிழர்கள் அங்கு சென்று முதலீடுகளைச் செய்ய வேண்டும். கடந்த செப்ரெம்பரில் சிறிலங்காவின் இணக்கப்பாட்டுடன் அமெரிக்க கொண்டு வந்த தீர்மானத்தை வரலாற்றுத் திருப்பமாகக்கூறிய தமிழ் அமைப்புகள், இச்சந்தர்ப்பத்தை வாய்பாகப் பயன்படுத்தி தாயகத்தில் கிளைகள் அமைத்து பணியாற்றப் போவதாக அப்போதுவிருப்புத் தெரிவித்திருந்தன. பின்னர் இவ்வமைப்புகள் மீதான தடை நீக்கப்பட்டுள்ள போதிலும் அங்கு செல்வதற்கான முயற்சிகளில் அவர்கள் இறங்கவில்லை. அண்மையில் சிறிலங்கா அரசாங்கத்தின் அழைப்பில் பேரில் கனடியத் தமிழர் வர்த்தக சம்மேளனம் சிறிலங்காவில் முதலீடு செய்வது பற்றிய கருத்தரங்கு ஒன்றினை கொழும்பில் நடாத்தியிருக்கிறது.

திரு. ஸ்வையர் குறிப்பிட்டதுபோன்று சிறிலங்காவின் பொருளாதாரம் பாரிய நெருக்கடிக்குள் இருக்கிறது. இது ஒன்றும் இரகசியமான விடயமில்லை. அண்மையில் Moody, Fitch நிறுவனங்கள் சிறிலங்காவின் கடன் நிலையை (credit rating) தரமிறக்கியிருந்தன. கடன்சுமையிலிருக்கும் சிறிலங்கன் எயர்லைன்ஸ் நிறுவனத்தை என்ன செய்வது என்ற தெரியாது அரசாங்கம் திணறுகிறது. உலக நாணயநிதியத்திடம் கடனுதவிகோரப்பட்டுள்ளது. மேற்குலக நாடுகளிலிருந்து குறிப்பிட்டுக் கூறக்கூடிய வகையில் புதிதாக எந்த முதலீடுகளும் செய்யப்படவில்லை. இவற்றை வைத்துப் பார்க்கையில் தமிழர் தாயகப்பகுதிகளின் பொருண்மியமேம்பாட்டுக்கு புலம்பெயர் தமிழ் மக்களின் முதலீடு அவசியமானது என்ற முடிவுக்கு நாம் வரமுடியும். ஆனால் இவ்வியடத்தில் சிறிலங்கா அரசு அரசியல் ரீதியாகச் செயற்பட மறுக்கிறது என்பதனை நாம் கவனத்தில் எடுக்கவேண்டும். ஒன்பது மாதங்களுக்கு முன்னர் மைத்திரிபால தன்னைச் சந்தித்த முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு உறுதி வழங்கியிருந்தும், வடமாகாணசபையின் நிதியத்தை ஏற் படுத்துவதற்கு இன்னமும் அனுமதி வழங்கப்பட வில்லை. இத்தகைய புறச்சூழலில், சிறிலங்கா அரசாங்கம் புலம் பெயர் மக்களை முதலீடு செய்ய அழைப்பது அரசியல் உள் நோக்கம் நடவடிக்கையாகவே பார்க்க வேண்டியுள்ளது. தமிழ் வர்த்தகர்களை கொழும்பில் முதலீடுசெய்யவைப்பதன்மூலம், தமிழ் அலைந்துழல்வுச் சமூகத்தினால் மேற்கொள்ளப்படும் எதிர்பரசியலை தணிக்கலாம் என்ற எதிர் பார்ப்பிலேயே இவ்வாறான அழைப்புகள் விடுக்கப்படுகின்றன.

பிரித்தானிய அரசியல்வாதிகளுக்கு அழுத்தம் கொடுப்பது ஒரு புறமிருக்க, மேற்கத்தைய அரசுகளின் நிலைப்பாடு தொடர்பான உண்மையான விவாதத்திற்கு தமிழ் அமைப்புகளும், செயற்பாட்டாளர்களும் தயாராக இருக்கிறார்களா?

ஸ்வயரின் உரைதொடர்பாக தமிழ் ஊடகமொன்றில் பிரசுரிக்கப்பட்டிருந்த கட்டுரையில் "பிரித்தானிய அரசுக்கு புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் கொடுக்கும் அழுத்தம் போதவில்லையா? அல்லது அரசாங்கத்துக்கு புலம்பெயர்ந்து வாழும் மக்கள் வழங்கும் தகவல்கள் போதவில்லையா? " என்று கேள்வி எழுப்பப்பட்டிருந்தது. தகவல் தொழில்நுட்பம் எங்கள் வீட்டு வாசற்படியை உலகிற்கு காட்டிநிற்கிறது. அது எங்கள் படுக்கையறைகளுக்குள்ளும் கழிப்பறைகளுக்கும் புகுந்து விடுமா என அச்சப்படுகிற ஒரு காலத்தில் பிரித்தானிய அரசாங்கத்திற்கு தகவல்களை தமிழ் மக்கள் வழங்க வேண்டும் என்று நினைப்பது முட்டாள்த்தனமாகத் தோன்றவில்லையா? பிரித்தானிய அரசியல் வாதிகளுக்கு அழுத்தம் கொடுப்பது ஒரு புறமிருக்க, மேற்கத்தைய அரசுகளின் நிலைப்பாடு தொடர்பான உண்மையான விவாதத்திற்கு தமிழ் அமைப்புகளும், செயற்பாட்டாளரகளும் தயாராக இருக்கிறார்களா?

மகிந்த இராஜபக்சவின் அரசாங்கத்தை அகற்றி மேற்கு சார்பு அரசாங்கத்தினைப் பதவியில் அமர்த்தும் 'ஆட்சி மாற்றம்' என்ற செயற்திட்டத்திற்கு புலம்பெயர் தமிழர்கள் மேற்குலக சக்திகளுக்குத் தேவைப்பட்டார்கள் என்பது ஒன்று இரகசியமான தல்ல. ஆகவே மே 2009 இலிருந்து ஜனவரி 2015 வரையான காலத்தில், மேற்குலக சக்திகளுக்கும், தமிழ் மக்களும் சேர்ந்தே பயணித்தார்கள் என்று வைத்துக்கொளவோம். இவ்விரு தரப்புகளுக்கும் இலக்கு வேறானது என்பதனை தமிழ்மக்களில் எத்னை பேர் உணர்நது கொண்டார்களோ தெரியவில்லை. ஆனால் தமது இலக்கினை நோக்கிச் செல்வதா, மேற்குலக சக்திகளின் மனங் கோணாது செயற்படுவதா என்ற குழப்பத்தில், சிலர் இரண்டாவதைத் தேரந்தெடுப்பதே இன்றைய அரசியல் பின்னடைவிற்கு காரணமாக அமைகிறது.

ஒரு பேப்பர்

கிடைக்குமிடங்கள்

New Malden
Ayngaran 020 8949 6734
Megaa Superstore .. 020 8336 0061
Vaaniyan 020 8605 0434
Murugan Kovil 020 8942 4475
Vaishna Superfoods 020 8399 4488
Stoneleigh Amman . 020 8393 8147

Tooting
Yhaal House 020 8767 8585
Selvarajah Gold house 020 8767 3795
Niru Con.Store 020 8672 3200
Ayngaran 020 8540 1500
Suvai Aruvi..... 020 8543 6266
Adchaya 020 8540 8192

Croydon
Best Foods..... 020 8684 6269
Haran Bros..... 020 8686 2552
Chennai dosa 020 8665 9192
Eelam Video..... 020 8664 8351
Spice Land..... 020 8667 1700

Lewisham
Chandra 020 8333 8680
Eelam Shop 020 8690 6545
Katpagam 020 8694 8810
AJ Video 020 8691 8888
Sivan Kovil 020 8318 9844
KRS Supermarket... 020 8297 9432
Best Food 020 8692 9811

Eastham
Seelans..... 020 8471 5733
Sakthi Cash & Carry 020 8394 4560
Murugan Temple..... 020 8478 8433
Station Super Store 020 8503 4711
Best Food 020 8552 9578
Saiva Munneta Sangam 02085144732
Akilan Enterprise 020 8548 0033
Anjappar 020 8552 1155

Ilford
Vinnayagar Kovil..... 020 8911 8934
Nathan..... 020 8514 1744
Angels 020 8553 0490
Sri store ltd 020 8553 7737

Edmonton
New Kannan Stores 020 8884 4979
Sayas..... 020 8805 9529
Nagapoosani Temple020 8884 3333

Walthamstow
Vinayagar Kovil..... 020 8527 3819
Kumarans 020 7609 1912
Prabas 020 8509 3322

Harrow
Tsk food & Wine 020 7622 4258
North Harrow C&C.. 020 8863 6160
Prabhas 020 8866 0977
South Harrow F&W. 020 8423 6321
Best foods..... 020 8423 9933
Sambal Express..... 020 8799 7171

Wembley
Malar Super Market 020 8795 5797
Ganapathy C & C..... 020 8795 4627
Best foods..... 020 8900 0100
Vahizan Disc..... 020 8795 0648

Ealing
Amman kovil..... 020 8810 0835

Greenford
Ambiha 020 8813 0967

Coventry
Eellakanthan Temple...02476663554

South hall
Thamilini C & C..... 020 8606 9900
Abi Fast Food 0208 813 9494
Palm Palace Restaurant 020 8574 9209
Spicy Palace Restaurant 020 8574 4087
Luxmys C & C..... 020 8571 4599
Tamilan C & C..... 020 8561 8174
Lady Margret..... 020 8571 4434

HCPPA UK
in association with
Darbar
Present

YESUDAS GOLDEN NITE IN LONDON

Film Songs Music Concert

Featured concert of Alchemy at SOUTHBANK CENTRE

Padmabhushan

DR.K.J.YESUDAS

And

ALKA AJITH

Live in Concert with

World Record Holder for 36 Hours Non Stop Music Performance

LAKSHMAN SRUTHI

லக்ஷ்மன் ஸ்ருதி

LAKSHMAN SRUTHI 100% MANUAL ORCHESTRA

May 21st Saturday 2016, 5.00 pm

**Royal Festival Hall, Southbank Centre,
Belvedere Rd, London SE1 8XX**

For more Details:

Nathan - 07939 272569
Vasan - 07590 318680
Jeyanantham - 07881 808336
Arul - 07801 446413
Jeyavarman - 07853 390416

Ticket Sales:
- Ganapathy Food & Wine - Wembley
- Gana Resturant - Rayners Lane
- Best Foods - Croydon
- Western Jewelers - Tooting
- Seelans - Eastham

http://www.southbankcentre.co.uk/alchemy

Tickets: VIP £100 £75 £60 £50 £40 £30 £10



நண்பர்கள் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்

இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

Cooking Essentials | Drinks | Health Care | Pickles And Chutneys

Ready to Eat | Other Dry Foods | Vegetables In Brine | Spices | Biscuits

UP TO 70% OFF!
Selected Items

USL
UNIVERSAL SUPPLIERS LIMITED
QUALITY PRODUCTS

UNIVERSAL SUPPLIERS LIMITED
Producing Opportunity, Releasing Quality, Achieving Proficiency

Access Business Centre, Unit 1000, First Way, Wembley, HA9 0JD, London, Tel: 0208 7955 224

உறுதியுடன் போராடுவதற்கு உதாரணமான சம்பூர் நிலப்போராட்டம்

தீபச்செல்வன்

ஈழம் அபகரிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் தேசம். ஈழத் தமிழர்கள் தங்கள் தாயகபூமியான வடக்கு கிழக்கை அபகரித்தலுக்கு எதிராகவும் அதன் சுய ஆட்சிக்காகவும் போராடுகின்றனர். தமிழர்களின் விடுதலைப்போராட்டத்தை ஒடுக்க தமிழ் இனத்தை அழிப்பதற்கு நிகராக தமிழர் நிலத்தை அபகரிக்கும் செயற்பாட்டை இலங்கை அரசு திட்டமிட்டு முன்னெடுத்துவருகிறது. ஈழம் எங்கும் நிலம் அபகரிக்கப்படுகிறது. இராணுவத்திற்காகவும் சிங்களக்குடியேற்றங்களுக்காக அபகரிக்கப்படுவதுடன் நிலத்திற்கான மக்களின் உரிமையை பறித்து அந்நிய நாடுகளுக்கும் தனியார் நிறுவனங்களுக்கும் நிலங்கள் தாரைவார்க்கப்படுகின்றன. அவ்வாறு பல வகையிலும் ஆக்கிரமிப்பையும் அபகரிப்பையும் சந்தித்து அதற்கான இடையறாத போராட்டத்தை சம்பூர் நிலத்து மக்கள் முன்னெடுத்தனர்.

2006ஆம் ஆண்டில் நான்காம் ஈழ யுத்தம் தொடங்கியவேளையில் முதன் முதலில் இலங்கை அரசின் வசம் வீழ்ந்த முதல் நிலப்பகுதியாக சம்பூரைக் குறிப்பிடலாம். காலம் காலமாக மகிழ்ச்சியோடும் நிறைவோடும் வாழ்ந்த சம்பூர் மக்கள் அந்த இடம்பெயர்வினால் மாபெரும் துயரத்திற்கு முகம் கொடுக்க நேரிட்டது. விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்பதாக தெரிவித்து அந்த நிலம் மக்களிடமிருந்து பறிக்கப்பட்டது. 2006ஆம் ஆண்டு சம்பூரைவிட்டு இடம் பெயர்ந்த மக்களை மகிந்த ராஜபக்ச அரசு மீள் குடியேற அனுமதி மறுத்தது. நான்காம் ஈழ யுத்தத்தின் முதல் அகதிகளை தொடர்ந்தும் அகதிகளாக வைத்துக்கொண்டே இந்த நாட்டில் அகதிகள் எவருமில்லை என்றனர்.

மூதூரில்கிளிவெட்டி,கட்டைப்பறிச்சான்,மணற்சேனை, பட்டித்திடல் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்ட நான்கு முகாங்களில் ஆயிரத்து ஐந்நூற்றுக்கு மேற்பட்ட சம்பூர் மக்கள் அகதிகளாக்கப்பட்டு தங்க வைக்கப்பட்டனர். உலகின் அவலம் மிகுந்த அகதிமுகாங்களில் இவற்றையும் உள்ளடக்கலாம். தகரங்களால் ஆன கூடாரங்கள். வெயிலில் கடும் வெக்கை அடிக்க மழையில் கடும் குளிர். முகாங்கள் அமைக்கப்பட்ட இடங்களோ மக்கள் குடியிருப்பதற்கு ஏதுவற்ற இடங்கள். நிம்மதியற்ற சூழலில்தான் ஒவ்வொரு கணங்களையும் பெரும் நெருக்கடியுடன் வலியுடன் அந்த மக்கள் கடந்தனர். மனிதர்கள் வசிக்க முடியாத தகரச் சிறைகளுக்குள் எங்கள் மக்கள் அடைக்கப் பட்டார்கள்.

இந்த மக்கள் இவ்வாறான நிலையில் வசித்துக் கொண்டிருக்க இவர்களின் நிலத்தை மகிந்த ராஜபக்ச அரசு கூறுபோட்டு ஆக்கிரமித்தது. முதலீட்டுச் சபைக்கு விற்றது. சம்பூரில் சுமார் இருநூறு ஏக்கரில் கடற்படைக்கு இராணுவமுகாம் அமைக்கப்பட்டு அந்தக் காணிகள் உயர்பாதுகாப்பு வலமாக ஆக்கிரமிக்கப்பட்டது. அத்துடன் இந்தியாவின் அனல் மின்னிலையம் அமைப்பதற்கும் காணி பகிர்ந்தளிக்கப்பட்டது. அத்துடன் முதலீட்டுச் சபைக்கு சுமார் எண்ணூறு ஏக்கர் காணிகள் வழங்கப்பட்டது. சம்பூர் மக்கள் அகதிகளாக முகாங்களில் அல்லல்பட இந்த அறிவிப்புக்கள் வர்த்தமானியில் இடம்பெற்றது.

சம்பூர் பிரதேசம் இந்தியாவின் அனல் மின்னிலையத்திற்காக வழங்கப்பட்டுவிட்டது என்றும் இந்தியாவின் அனல் மின்னிலையம் அமைக்கப்படுவததால் அதை மீளப் பெற வாய்பில்லை என்ற தோற்றமும் ஏற்படுத்தப் பட்டது. குறிப்பாக தமிழ் தலைவர்கள் இந்தியாவை எதிர்க்க தயங்குவார்கள் என்பதனாலும் இவ்வாறு இந்தியாவுக்கு அனல் மின்னிலையம் அமைக்க இடமளிக்கப்பட்டதுடன் அதனுடன் இணைந்து சம்பூரை அபகரிக்கும் திட்டம் தீட்டப்பட்டது. கடற்படைமுகாமுக்கான காணி அபகரிப்பையும் முதலீட்டுச் சபைக்கான காணி அபகரிப்பையும்விட அனல் மின்னிலையம் அமைத்தல் பற்றிய செய்தியே முன்னணியாக இருந்தது. அதன் பின்புலத்தில் சம்பூர் கூறுபோட்டது.

தமிழர்களின் நிலத்தை அபகரிக்க கடற்படைமுகாமை அமைத்தது இலங்கை அரசு. அந்தக் கடற்படை முகாமுக்கு பாதுகாப்பாக அனல்மின்னிலையம் அமைக்கப்பட்டது. அனல் மின்னிலையத்திற்காக கடற்படை முகாம் அமைக்கப்படுவதுபோல் காட்டப்பட்டு அங்கு இராணுவ ஆக்கிரமிப்பு நிறுவப்பட்டது. ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்த வகையில் இராணுவ ஆக்கிரமிப்பையும் அரசியல் பாதுகாப்பையும் இலங்கை அரசு ஏற்படுத்தி சம்பூர் மக்களை மாபெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கியது. இவ்வாறான அரசியல் இராணுவச் சூழல் ஏற்படுத்தப்பட்டு அந்த மக்களின் நிலம் முதலீட்டுச் சபையின் வணிகத் தேவைக்கு விற்கப் பட்டது. மிக தந்திரமாகவும் நுட்பமாகவும் மகிந்த அரசு இதை செய்தது.

திருகோணமலை நகரத்தின் பாதுகாப்பிற்காக சம்பூரை விடுதலைப் புலிகளிடமிருந்து கைப்பற்றுவதாக கூறிய மகிந்த அரசு நாட்டின் பாதுகாப்புக்காக சம்பூர் மக்கள் தங்கள் நிலங்களை தியாகம் செய்ய வேண்டும் எனக் கூறியது. தமிழர் நிலத்தை ஆக்கிரமிக்கும் யுத்தம் எதற்காக மேற்கொள்ளப்படுகின்றது என்பதற்கும் தமிழர்களுக்கும் அவர்களின் நிலத்திற்கும் எப்போது பாதுகாப்பு இருந்தது என்பதற்கும் சம்பூர் ஆக்கிரமிக்கப்பட்டு அபகரிக்கட்ட கதை உணர்த்துகிறது. கடற்படை முகாமை அகற்ற மகிந்த அரசு மறுத்தது. அதை நாட்டின் பாதுகாப்பு சார்ந்த விடயமாகவும் மீண்டும் புலிகள் உருவாகிவிடுவார்கள் எனப் புலிப்பூச்சாண்டி காட்டியும் அந்த நிலத்தை அபகரித்தனர்.

சம்பூர் மக்கள் வார்த்தைகளால் விவரித்து விட முடியாத ஒரு வாழ்வை வாழ்ந்தனர். தமது சொந்த நிலத்திற்குச் சொல்வதற்காய் மகிந்த அரசால் பின்னப்பட்ட கொடுமையான அகதி முகாம் வாழ்வை ஒரு தவத்தைபோல எதிர் கொண்டனர். நெருப்பாற்றில் நிகழ்த்திய தவம். கணந்தோறும் மக்களை துன்பப்படுத்தும் சூழலுக்குள் தள்ளி அவர்களால் வாழ முடியாது என்கிற நிலையை ஏற்படுத்தி அவர்களை மாற்றிடங்களில் குடியமர்த்த இலங்கை அரசு திட்டமிட்டது. சம்பூர் விடுவிக்கப்படமாட்டாது என்றும் மாற்றிடங்களில் குடியேற வேண்டும் என்றும் மகிந்த அரசு கூறியது. மக்களை மாற்றிடங்களில் குடியேற்ற தொடர்ந்தும் இராணுவத்தையும் அரச அதிகாரிகளையும் அரசியல்வாதிகளையும் வைத்து பல்வேறு நடவடிக்கைகளை நேரடியாகவும் குறுக்குவழிகளிலும் மேற் கொண்டது. நிலப்போராட்டத்தை ஒடுக்கும் நடவடிக்கையில் இராணுவப் புலனாய்வாளார்கள் கண்காணிப்பில் ஈடுபடுத்தப்பட்டனர்.

சம்பூர் மக்களின் இடையறாத போராட்ட வாழ்வும் இந்த மக்களின் நிலத்தை மீட்டல் குறித்து உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்குமே இந்த மக்களின் நிலத்தை விடுவிக்க உதவியது. ராஜபக்ச காலத்திலேயே சம்பூர் மக்களை அவர்களின் சொந்த இடத்தில் மீள்குடியேற்ற உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஆனாலும் ராஜபக்ச அதை நடைமுறைப்படுத்தவில்லை. தற்போதைய இலங்கையின் ஜனாதிபதி மைத்திரிபால முதலீட்டுச் சபைக்கான காணி உரிமத்தை இரத்துச் செய்யும் வர்த்தமானியில் கையெழுத்திட்டு சம்பூர் மக்களின் அகதிவாழ்வுக்கு ஓர் முடிவை ஏற்படுத்தியுள்ளார். அத்துடன் சம்பூரில் அமைக்கப்பட்டுள்ள கடற்படை முகாமையும் அகற்றுவதாக கிழக்கு மாகாண ஆளுனர் கூறியுள்ளார்.

சம்பூர் மக்களின் நிலப் போராட்டம் இன்னும் முடிவடையவில்லை. ஆனால் அவர்கள் முக்கியமானதொரு கட்டத்தை அடைந்துவிட்டார்கள். அடுத்த கட்டப்போராட்டம் இலங்கை அரசு ஒப்புக்கொண்டபடி சம்பூரிலிருந்து குறிப்பிட்ட கால அவகாசத்தில் கடற்படைமுகாமை அகற்ற வேண்டும். முழுமையாக இராணுவச் சூழல் நீக்கப்பட்டுமக்கள் இயல்பாக வாழும் சிவில் சூழல் உருவாக வேண்டும். மிக முக்கியமாக சம்பூர் என்ற அழகிய கிராமத்திற்கும் அதன் சனங்களுக்கும் அக் கிராமத்தின் எதிர்கால பிரசைகளுக்கும் அச்சுறுத்தலாக அமைந்துள்ள அனல் மின்னிலையம் அகற்றப்பட வேண்டும். அதற்கான அடுத்த கட்டப் போராட்டங்களில் அந்த மக்கள் விரைவில் ஈடுபடவுள்ளனர். அந்தப் போராட்டத்தின் வெற்றியுடன்தான் சம்பூர் உண்மையில் விடுவிக்கப்பட்டிருக்கும்.

ஒன்றல்ல இரண்டல்ல பத்து ஆண்டுகள் அகதிவாழ்வு சம்பூர் மக்களை பலவித்திலும் பாதித்துள்ளது. அதனால் அவர்கள் சந்தித்த இழப்புக்கள், வேதனைகள் சொல்லி மாளாதவை. ஊரைப் பார்க்க வேண்டும், ஊரில் சாகவேண்டும் என காத்திருந்து அகதிமுகாங்களில் இறந்தவர்கள் பலர். அகதியாய் பிறந்து ஊரைப் பார்க்க காத்திருந்த குழந்தைகள் பலர். ஊருக்காய் காத்திருந்து ஏங்கிய தருணங்கள் பல. அகதிமுகாமில் வசித்தமையால் நோய் வாய்பட்டு இறந்தவர்கள் பலர். ஒரு சமூகத்தின் வாழ்வுத் தளமான நிலத்தை பறிக்கும் போது அவர்கள் இப்படிப் பல இழப்புக்களுக்கு முகம் கொடுக்க நேரிடுகிறது. இதுதான் ஈழமெங்கும் நடக்கிறது. இந்த உயிரிழிவும் உள அழிவும் இன அழிப்பிற்கானதே.

பத்து வருடங்களின் பின்னர் சம்பூர் மக்களின் முகங்களில் இப்போதுதான் புன்னகை பூக்கிறது. அகதிவாழ்வால் நலிந்துபோனவர்கள் தங்கள் சொந்த மண்ணில் காலடி எடுத்து வைப்பதன் ஊடாகவே மறு பிறப்பை அடைகின்றனர். வாழ்தல் பற்றிய புதிய நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. எல்லாம் அழிந்து உருக்குலைந்து காடு பற்றிப் போன பூர்வீக நிலத்தை அந்த மக்கள் துப்புரவு செய்து அதில் ஒரு பாயை விரித்து படுத்துறங்கினர். தங்கள் சொந்த நிலத்தில் வாழ வேண்டும் என்ற கனவை வென்று சம்பூர்கள் மீள்குடியேறுவதைப் பார்க்கும்போது ஈழத்தில் நிலத்தை இழந்து தவிப்பவர்கள் நிச்சயம் ஒரு நம்பிக்கையை உணர்வார்கள்.

சம்பூரை விடுவிக்கும் புதிய அரசின் நடவடிக்கையைபராட்டலாம். நில உரிமையைகேட்டால் நிலத்தை பறிக்கும் ஒரு அரசியல் சூழல் இலங்கையில் ஈழத் தமிழர்களுக்கு எதிராகபிரயோகிக்கப்படுகிறது. இதுவே சம்பூரிலும் நடந்தது. என வே எதிர்காலத்தில் இவ்வாறான ஒரு நிலை ஏற்படாத வகையில் ஈழத் தமிழர் நிலத்திற்கான பாதுகாப்பு அவசியமானது. தமிழர் நிலத்தில் தமிழர் வாழவும் ஆளவும் உரிமை அவசியமானது.

ஈழத்தில் அபகரிக்கப்பட்ட கிராமங்களுக்காய் போராடும் மக்களுக்கு சம்பூர் மக்களின் நிலப் போராட்டம் ஊக்கத்தை அளிக்கும். அத்துடன் அபகரிக்கப்பட்ட ஈழ நிலத்திற்காய் போராட வேண்டிய அவசியத்தையும் சம்பூர் நிலப் போராட்டம் வலியுறுத்துகிறது.

- நன்றி: குளோபல்தமிழ்நியூஸ்

Immigration | Asylum | Family | Criminal Defence | Civil Litigation

Expert in Criminal Defence Services.
24 Hour Police Station Attendance
Magistrates' & Crown Court Representation

Contractual Disputes
Matrimonial - Divorce ancillary relief matters
Emergency Injunction

Immigration Law Specialists
Asylum & Immigration
Bail Application (Immigration Detention)
Removals, Deportation
Judicial Review & Emergency Injunction

Civil Litigation

We offer Legal Aid (FREE) in Crime, Immigration and Asylum matter

அகதி விண்ணப்பம், குடிவரவு, குற்றச்சாட்டு போன்றவற்றுக்கு இலவசமான சட்ட உதவிக் கொடை கொடுக்கப்படும்

Criminal Defence Service
Community Legal Service
THE LAW SOCIETY ACCREDITED Immigration & Asylum

RAJ LAW SOLICITORS

169, Tooting High Street, London, SW17 0SY Tooting Broadway
Tel: 0203 133 0000 | Fax: 0203 133 0092 | www.rajlaw.co.uk
We are authorised and regulated by the Solicitors Regulation Authority (No. 421 980) Mail : info@rajlaw.co.uk

Emergency
079 4764 1876
079 1225 3418

குந்தியிருந்தது போய்..

சுகி

(ஒரு பேப்பருக்காக)

வெள்ளைக்காரருக்கு பொதுவாகவே ஏதும் மாற்றங்கள் செய்ய வேண்டும் என்றால், நன்றாக யோசித்து எங்கிருந்து தொடங்கினால் அது எப்பிடிப்போய் முடியும் என்று சிந்தித்து. அந்தந்த சமூகத்தில் செல்வாக்கு உள்ளவர்களை பிடித்து, அவர்கள் ஊடாக, அவர்களை மாற்றுவதன் மூலமோ அல்லது அவர்களை நாம் விரும்பியதை பின்பற்ற வைப்பதன் மூலமோ தாம் விரும்பும் மாற்றங்களை அச்சமூகங்களில் கொண்டுவருகிறார்கள். இதற்கு எமது சமூகமும் விதிவிலக்கல்ல. அவர்களின் மதம், நடை உடை பாவனை, மொழி, பழக்க வழக்கம் என்று பலவற்றைக்குறிப்பிடலாம். அவர்கள் நன்றாக மொழி, சமயம் என்று விருத்தியடையாத சமூகங்களில், இனங்களில் இப்படியான மாற்றங்களை கொண்டுவர முற்பட்டு அதில் பெரும் வெற்றியும் கண்டுள்ளார்கள். அந்த சமூகங்கள் தமது தனித்தன்மையை எப்பவோ இழந்து, மொழியையும் இழந்து நூற்றுக்கு தொண்ணூற்று ஒன்பது விகிதம் ஆங்கிலோரைப் பின்பற்றும் இனமாக மாற்றம் அடைந்துள்ளன. இந்தவகையில் பார்க்கும் போது எமது தமிழ் இனம், மிகவும் பழமை வாய்ந்த அதே நேரம் மொழி, கலை. பண்பாடு, உணவு வகை என பலவிதத்திலும் விருத்தியடைந்த இனமாக இருந்தமையால், மாற்றங்கள் நிகழ்தாலும் நாம் முற்றாக எமது தனித்தன்மையை இழந்து விடவில்லை.

உண்மையில் இப்போது ஆழமாக சிந்தித்து பார்த்தால் சில மாற்றங்கள் எமது சூழ்நிலைக்கும், காலநிலைக்கும், வாழ்கை முறைக்கும் ஏதுவானதல்ல. அந்தோடு எமது முன்னோர்கள் ஒரு காரணத்தின் பொருட்டு கடைபிடித்த முறைகளை நாம் ஒரு காரணமும் இல்லாமல், வெள்ளைக்காரர் செய்கிறார் என்று கண்ணை மூடிக் கொண்டு பின்பற்ற வெளிக்கிட்டு அரையும் குறையுமாவும், சில எமது உடல்நிலைக்கு ஆரோக்கியமான முறைகளையும் கைவிட்டு எங்கையோ போய்கொண்டு இருக்கிறோம்.

உதாரணத்திற்கு காலையில் இருந்து தொடங்கினால் வேப்பங்குச்சாலோ, உமிக்கரியாலோ பல்லுவிளக்குவதுகூடாது என்றுயாரும் சொல்லவில்லை. நாம் அந்த செலவு குறைந்த முறையை இப்போது முற்றாகக் கைவிட்டு, பலவிதமாக பற்பசைகளை வைத்து கொண்டு இதைவிட அதில் இரசாயனப்பொருட்கள் கூட என்று தலையை பிய்த்து கொள்வதோடு மற்றுமல்லாது, இரசாயனம் குறைந்த இயற்கை பற்பசைகள் என்று வேப்பமர பற்பசை உள்பட அதிக விலை கொடுத்து வாங்குகிறோம். எனக் கென்னவோ அம்மாச்சியின் உமிக்கரியால் பல்லுவிளக்கியபின், நாக்கால் பல்லைத்தடவும் போது வந்த தூய்மையான உணர்வு, அதன் பிறகு இதுவரை வரவில்லை என்றே கூறலாம்.

அடுத்து காலைக்கடனின் போது குந்தியிருந்ததுபோய், கதிரையில் இருப்பதுபோல் காலைக் கடனை கழிக்கும் மேற்கத்தைய வழக்கத்தை பின்பற்ற முயலுகிறோம். அது எமது நாட்டிலும் மூலைமுடுக்கிலும் வெளிநாட்டில் பிள்ளைகள் இருந்தால் அவசரம் அவசரமாக குளியல் அறை கட்டி அவர்களுக்கு உகந்தது போல மாற்றுகிறார்கள். ஏனெனில் அவர்கள் குந்தியிருக்க மாட்டார்களாம்! ஆனால் குந்தியிருப்பது உடம்புக்கு எவ்வளவோ நல்லது. முழங்காலுக்கு கீழே உங்கள் இடுப்பு பாகம் வருமாறு ஒருநாளைக்கு ஒரு பத்து நிமிடம் குந்தியிருப்பதால் உங்கள் உடம்பில் உள்ள முதுகு, தோள் பட்டை, கால் எனப்பல தசைகள் ஒரேநேரத்தில் வேலை செய்து உங்கள் உடம்பை அந்த நிலையில் நேராக இருக்க வைக்கின்றன. எமது வாழ்க்கைமுறையில் குந்தியிருந்து காலைக் கடன் கழிப்பது மிகவும் அர்த்தமுள்ள, எமது உடலுக்கு உகந்த ஒருமுறை. உண்மையில் வெளிநாட்டு உடல்பயிற்சியில் பணத்தை செலவழித்து இந்த குந்தியிருக்கும், உடற் பயிற்சியில் தலைமைப்பயிற்சி என்று அழைக்கப்படும் பயிற்சியை பழகுகிறோம்!!

பின்பு சுடுதண்ணீரில் குளிக்காமல், நன்றாக கிணற்றுத்தண்ணியில் குளிப்பது உடம்புக்கு மிகவும் நன்று. குளிரான வெளிநாடுகளில் கூட சுடுதண்ணீரில் குளிப்பதை விட குளிர்தண்ணியில் குளிப்பதுவும், அதன் நன்மைகள் பற்றி, அதை ஒருசிகிச்சை முறையாக, முக்கியமாக உடல்பயிற்சியின் பின் சிபார்சு செய்கிறார்கள். எமது நாட்டுக்கு சுடுநீர் குளியல் அறை வசதியுடன் கூடிய தங்குமிடவசதி என்று விளம் பரம் செய்கிறார்கள். எமது காலநிலைக்கு சாதாரண தண்ணியில் குளித்தாலே போதுமானது. இன்னும் கிணற்றில் தண்ணியை இறைந்து குளிப்பது அடுத்த உடல்பயிற்சியை சாரணமாக செய்வதும் போலகின்றது. அதிலும் ஒருவர் துலாவில் ஏறி துலா ஓட இன்னெருவர் வரும் தண்ணியை தொட்டியில் நிறைக்க, தொட்டியை சுற்றியின்று பிள்ளைகள், பெண்கள் குளிக்க அக்குளித்த தண்ணி வாய்கால் வழியே பக்கத்தில் உள்ள மரங்செடிகளுக்கு போக என்று காட்சியை நினைத்தாலே அற்புதமாக உள்ளது. இப்ப துலாவை கழற்றி விட்டு, கப்பி போட்டு இறைத்து அதையும் விட்டு, குளியல் அறையில் முடங்கிவிட்டோம்.

பிறகு சாப்பாடு என்று வரும்போது எமது சிவப்பு பழங்சோற்றுக் கஞ்சியை போல இயற்கை உணவு இல்லை. அது போல ஆவியில்அவியும்இட்லியும், பலமரக்கறிகள்கொண்ட சாம்பாரும் நல்ல திறமான உணவு என வெள்ளைக்கார் அடையாளம் கண்டுள்ளனர். அவர்களால் சொல்லப்படாத குரக்கன், தினை, ஒடியல்மா என்று நாம் அடுக்கிக்கொண்டே போகலாம். அங்கிருக்கும் போது பாண், பூசுவதற்கு வெண்ணை, கோதுமைமா என்று அலைந்து விட்டு, அங்கு வாங்காத தினை, வரகு, சாமை, குரக்கன், ஓடியல் என்பன இப்ப வெளிநாடுகளின் அதிக விலை கொடுத்து வாங்கி உண்ணுகிறோம்.

இங்கு குளிருக்கு தேவையுடன் கழுத்தை இறுக்கிஅணியும்கழுத்துப்பட்டியையும், கோட்டு சூட்டையும், அங்கு நாம் அங்கு வெய்யில் வெக்கைக்கு போட்டுக்கொண்டு அலைகிறோம். தேவையில்லாமல், எமது காலநிலைக்கு ஏற்காத ஒன்றை, நாகரீகம் என்று ஒரு பொய்யான பிரமையில், எல்லோரும் செய்கிறார்கள் என்று நாமும் செய்கிறோம். வெள்ளை வேட்டி, சீலை, சட்டை என்பன காற்றோற்றமானவை, வேலை செய்யும் போது கோவணம், குறுக்குக்கட்டு என்பன அந்த காலநிலைக்கு உகந்தன. ஆனால் நாம் அதை நாகரீகம் இல்லை என்று கைவிடுவது மட்டும் அல்லாது, இப்பவும் அணிபவர்களை அப்பு, ஆச்சி நீங்கள் இதைப்போடுவது எங்களுக்கு வெக்கமாக உள்ளது என்று, அணிபவர்களையும் கைவிடச்சொல்கின்றோம்.

இதைவிட சம்பந்தம் சம்பந்தம் இல்லாமல் தமிழ் சடங்குகளுக்குள், வெள்ளையர்களின் முறைகளையும் புகுத்துகின்றோம். பத்து மணிக்குதாலிகட்டு, பன்னிரண்டுமணிக்கு கேக் வெட்டு! பன்னிரண்டு மணிக்கு சாமத்திய வீடு, மூன்றுமணிக்கு கேக்வெட்டு! மத்தியானம் கோயிலுக்கு போய் ஐயரைக்கூப்பிட்டு தொட்டில்போடும்வைபவம், மரக்கறிசாப்பாடு. அன்றே பின்னேரம் மச்சச் சாப்பாட்டோடு மதுகுடி வகையயுடன் கொண்டாடம் என்று, என்ன செய்கிறோம் எதுக்கு செய்கிறோம் என்று ஒரு முறை தலை இல்லாது, எல்லாவற்றையும் கலந்து ஒரு சாம்பார்போல் சடங்குகளைச் செய்கிறோம்.

எமது தலைமுறையும் ஒன்றுமே விளங்காது எம்மைப்பின்தொடர்கிறார்கள். அவர்களும் இது தான் தமிழ்சடங்கு, பழக்கவழக்கம் என்று தமக்கு தெரிந்த மட்டும் விளங்கிக்கொள்கிறார்கள். எல்லாச்சடங்குகளிலும்வீடியோக்காரரும், போட்டோ எடுப்பவரும் என்ன சொல்கிறாரோ அதை சிர மேற்கொண்டு நிறைவேற்ற முயலுகிறோம்.

நாம் தமிழ்இனம், எமது மூதாதைகள் சில வற்றை ஏன்செய்தார்கள், எதுக்கு செய்தார்கள் அது சரியா? அது பிழை என்றால் கைவிடலாம், சரி என்றால் ஏற்றுக்கொள்ளலாம். அதை விடுத்து வெள்ளைக்காரர் செய்கிறார் என்று பல வற்றை அப்பிடியே ஏற்றுக்கொண்டு செய்யும் போது தான் சிக்கல் வருகிறது.

கருத்துக்களுக்கு -
www.facebook.com/orupaper
@orupaper

nathan & co
...a good deal better

We are a friendly & trustworthy
pawnbrokers in Tooting Broadway specialising in 22ct Gold.

Come and get a Hassle Free Loan on your Gold Today. We always offer competitive rates per gram and

with this advert get 5% extra on your loan!!!

NPA
NATIONAL PAWNBROKERS ASSOCIATION

Your goods are safe and secure with us and money is always available.
We are a member of
National Pawnbrokers Association.

We also offer foreign currency and pre-owned jewellery at competitive prices.

Vacation money

Nathan and Co,
6 Tooting High Street, SW17 0RG
Tel: 0203 441 2202

New and used shop shelving
For all your shop shelving and refrigeration needs please call or visit our show room for a free quote and see how we can help

Gondola shelving
Wall shelving
Magazine shelving
Veg displays
Shopping baskets

Shelving4Shops.co.uk

01455 221512

New and refurbished refrigeration

Cold freeze specialise in the installation of new and refurbished refrigeration

Bottle fridges
Dairy cabinets
Multideck chillers

coldfreeze refrigeration .co.uk

with lots to choose from our Hinckley site or visit our web site
Unit A1, Asfare Business Park, Hinckley Road, Wolvey, Leicestershire LE10 3JG

எப்படியிருக்கிறார் ஜெயக்குமாரி அக்கா ?

ஜெரா

ஊடகப்பரப்பிலும், காணாமல் போனவர்களைத் தேடியலையும் போராட்டக்காரர்கள் மத்தியிலும் ஜெயக்குமாரி அக்கா என அறியப்பட்டவர்தான், ஜெயக்குமாரி பாலச்சந்திரன். இப்போதெல்லாம் எப்போதாவது நடக்கும் காணாமல் போனவர்களின் உறவுகள் நடத்தும் போராட்டங்களில் கூட ஜெயக்குமாரி அக்காவை காணமுடிவதில்லை.

"தர்மபுரம் பள்ளிக்கூடத்துக்கு முன்னால் போற ஒழுங்கையில இறங்கினா பக்கத்தில தான் வீடு. யாரைக் கேட்டாலும் காட்டுவினம்" ஜெயக்குமாரி அக்காவின் இருப்புபற்றியாரைக் கேட்டாலும் இப்படித்தான் சொல்வார்கள்.

"தர்மபுரம் பள்ளிக்கூடத்தடியில இறங்கி, அதுக்கு முன்னால போற காபெட் றோட்டால நேர வாங்கோ. காபெட் றோட் கொஞ்சத்தூரந் தான். பிறகு மண்றோட்டால வளைஞ்சுவளைஞ்சு வாங்கோ. இடையில கடைக்காரரிட்டயோ, ஆட்டோக்காரரிட்டயோ, சனங்களிட்டயோ விசாரிச்சிப்போடாதையுங்கோ" முன்னெச்சரிக்கையோடு ஜெயக்குமாரி அக்கா இப்படித்தான் தன் வீட்டுக்கு வழிசொல்கிறார்.

உண்மையில் ஜெயக்குமாரி அக்காவின் வீட்டுக்கு முகவரி சொன்னது போல, தருமபுரம் பள்ளிக்கூடத்துக்கு முன்னால் எல்லாம் அவரின் வீடு இல்லை. பள்ளிக்கூடத்திலிருந்து 5 கிலோ மீற்றர் தொலைவில், பற்றைக்காடுகளுக்குள்ளால் போகும் மண் வீதியின் முடிவிடத்தில் இருக்கும் மக்கள் குடியிருப்பில்தான் அவரின் வீடு இருக்கிறது. புளியம்பொக்கணை கிராமத்தின் தொடக்கம் அது. புவியியலமைப்பின் படி வறண்ட பற்றைக்காடுகளும், உவர் வெளியும் கலந்த நிலம். கடல் சூழலும், காட்டுச் சூழலும் சந்தித்துக்கொள்ளும் பறட்டை நிலம். அப்படியானநிலத்தில் இருக்கும்,"குருகுலராஜா (வடக்கு மாகாண சபை கல்வி அமைச்சர்) திருத்திக் கொடுத்த வீட்டின்" தகரக் கதவடியில் நின்று தான் ஜெயக்குமாரி அக்கா வரவேற்கின்றார்.

காணாமல் போனோர் தொடர்பிலான எத்தகைய போராட்டமாக இருந்தாலும் ஜெயக்குமாரி அக்காவையும், மகள் விபூசிகாவையும் பார்க்க முடியும். கையில், கறுப்பு - வெள்ளை நிறத்திலான புகைப்படம் ஒன்றைத் தாங்கியபடி, போராட்டக்காரர்களின் முன்னிலையில் நின்று கதறுவர். சர்வதேசத்திடம் நீதி கோருவர். அவர்கள் இருவரின் புகைப்படங்களையும் பிரசுரிக்காத ஊடகங்கள் இல்லை. பிரபலமான ஜனநாயக வழிப் போராட்டக்காரர்கள் அவர்கள். கடந்த ஆட்சிக்காலத்தில் அவர்களின் கண்ணீர் ஐ.நா. வரையில் பிசுபிசுத்தது.

"இந்தா இந்த இடம்தான். இதிலதான் அது நடந்தது. என்ர பிள்ளை அவன். அவனும் அப்பிடித்தான் சொல்லுவான். நான் உங்கட மகன் அம்மா. தங்கச்சிய பள்ளிக்கூடத்தால ஏத்திவர, பரந்தனில் நிக்கிறன், இந்தா வாறன் எண்டு ஓடி வந்து, என்ர மகள ஏத்திக்கொண்டு வந்துவிடும் என்ர பிள்ள. அவன நினைச்சா நெஞ்சு வெடிக்குது. தாய்க்குக்கூட அவ்வளவு கவனமா இருந்திருக்கமாட்டான். எனக்கு அப்பன மட்டும்தான் தெரியும். கோபி பற்றி ஒருநாள் கூட கதைச்சதோ, வந்ததோ, சாப்பாடு - தேத்தண்ணி குடுத்ததோ கூட இல்ல. பிரச்சினைக்குப் பிறகுதான் கோபி பற்றி தெரியும். புலிகள், அது இது எண்டுதான் பிடிச்சவ, ஆனால் வேலையால வந்து கழற்றி போடுற சேட்டு ஜீன்ஸ தவிர அப்பனிட்ட ஒண்டுமே இருக்கேல்ல. நீங்கள் ஆர் எவரோ தெரியேல்ல. நீங்க ஆரெண்டா எனக்கென்ன. உண்மையத்தானே சொல்றன் நம்பியும், நம் பாமலும் கண்டவுடனே கதையைச் சொல்லும் ஜெயக்குமாரியிடம், அனைவரின் மீதும் அதீத நம்பிக்கையீனம் தொற்றியிருக்கிறது. ஆனாலும் அவர் கடந்திருக்கும் துயரத்தின் அழுத்தம் மனதுடைத்துப் பொங்கியழ வைக்கிறது. வார்த்தைகளைத் தன்போக்கில் சிதறச் செய்கிறது.

ஜெயக்குமாரி அக்கா குறிப்பிடும் அப்பன், 2009 போர் முடிவின் பின்னர் அறிமுகமான ஏதேச்சயான உதவியாளர்களில் ஒருவர். 2011 ஆண்டில் மீள்குடியேற்றத்துடன், ஜெயக்குமாரி அக்கா இப்போதிருக்கின்ற வீட்டில் குடியேறுகின்றார். அங்கு குடியேறிய பின்னர் 2012இல் ஜெயக்குமாரி அக்காவின் கணவன் நோய்வாய்ப்பட்டு இறந்து போகின்றார். மிஞ்சியது ஜெயக்குமாரி அக்காவும், விபூசிகாவும்தான்.

அதன்பின்னர் ஒருநாள் பயண வழியில், எங்கேயோ பார்த்தவர் போன்ற சாயலுடைய வரை ஜெயக்குமாரி அக்கா சந்திக்கிறார்.

'நீங்கள் அப்பன் தானே தம்பி?'.

'ஓம் அம்மா நான் அப்பன்தான்'.

'அப்பாவும் செத்துப்போனாரடா. நானும் தங்கச்சியும் தனிச்சிப்போனம். கஸ்ரப்படுறமடா'.

'நான் இங்கதான் அம்மா டிப்பர்ல மண், கல் ஏத்த வாறனான். நீங்கள் இங்க இருக்கிறது தெரியாது'.

'ஓமடா தம்பி, இங்கால வரேக்க இனி அம்மாவ பாத்திட்டுப்போ'

இதுவே அப்பனுக்கும் ஜெயக்குமாரி அக்காவுக்கும் இடம்பெற்ற முதல் உரையாடல் என நினைவுவைத்து சொல்கிறார் அவர். அதன் பின்னரான நாட்களில், மேலும் வறுமையையும், மகனைத்தேடியலையும் போராட்டங்களையும் ஜெயக்குமாரி அக்கா எதிர்கொண்டார்.

அப்படியான நாட்களில் அடிக்கடி அப்பன் ஜெயக்குமாரி அக்காவின் வீட்டுக்கு வந்து உதவிசெய்தார். வரும் நாட்களின் அங்கு தங்கி நின்றார். மூத்தமகனாகக் குடும்பத்தைப் பார்த்துக்கொண்டார். விபூசிகாவின் பாசமிகு அண்ணனாக இருந்தார். தன் மகன்கள் திரும்பிவந்துவிட்ட பெருநிம்மதியை ஜெயக்குமாரி அக்கா உணர்ந்தார்.

இப்பிடியிருந்த பொழுதொன்றில் தான் இலங்கை முழுவதும், தேடப்படும் 'பயங்கரவாதிகளாக' அப்பன் மற்றும் கோபி ஆகியோர் அறிவிக்கப்பட்டார்கள். சுவரொட்டிகளில் அவர்களின் படங்கள் வந்தன.

"இந்த நேரம்தான் இருக்கும். இந்த இடம் தான். இந்தா இந்த இடம்தான். இதிலதான் அது நடந்தது...என்னை இந்த இடத்திலயே வச்சி சுட்டுப்போடுவம் எண்டு மிரட்டினாங்கள். அண்டைக்கு காலமதான் அப்பனையும் பிடிச்சதோ, சுட்டதோ எண்டாங்கள். எனக்கு என்னைச் சுற்றி என்ன நடக்குதெண்டே தெரியேல்ல. இந்த இடம் எல்லாம் ஒரே ஆமி. என்னைப் பரந்தன் பொலிஸ்காரர் கைதுசெய்து கொண்டு போயிற்றினம். மீண்டும் பயங்கரவாதம் தலையெடுக்க உதவிய குற்றச்சாட்டில் என்னைக் கொண்டு போனவ. இவ்வள பிரச்சினைக்கு பிறகும் யாரும் மீள உருவாக்குவினமா? எனக்கு மட்டும் ஏன் இப்பிடியெல்லாம் செய்யினம்?"

'அதுக்குப் பிறகு விசாரண'.. நான் சொல்லத் தேவயில்ல. மகிந்த என்ர குடும்பத்துக்கு செய்த அநியாயங்கள் எத்தின?. எல்லாம் உங்களுக்குத்தெரியும்தானே. 362 நாள் சிறைவாழ்க்க. என்ர மகள்?. !? நீண்ட பெருமூச்சுடனாக அமைதியில் உறைந்திருக்கிறார் ஜெயக்குமாரி அக்கா. அவரின் நினைவுகள் விசாரணை அறைகளுக்குள் சென்றிருக்க வேண்டும். அந்த அறையின் நினைவுகளை, அந்த 362 நாள் வாழ்க்கையை அவர் பகிர்ந்துகொள்ள விரும்பவில்லை.

'விடுதலைக்குப் பிறகு வீட்டுக்கு வந்தன். வீட்டில ஒண்டும் இருக்கேல்ல. மகள் சிறுவர் இல்லத்தில. என்னோட இருந்த நாய்க்குட்டி, பூனைக்குட்டி கூட காணாமல் போயிட்டுதுகள். எல்லாமே வெறுமையாகிட்டு. பாய் தலையணையக் கூட சனங்கள் விட்டுவைக்கேல்ல. எல்லாத்தையும் களவெடுத்திட்டுதுகள். பொலிஸ்காரன் வந்து கணக்குப் பாத்தவன். 4 லட்சம் பெறுமதியான சாமனுகள களவுபோயிருக்கு. இதைப்பற்றியெல்லாம் யார் கேட்கிறது? 'ம்'

மூச்சை நன்றாக உள்ளே இழுத்து வெளிவிடுகிறார். உற்சாகம் பெறுவதற்காக அல்ல. கடந்தவைகள் அனைத்தையும் மறக்க மூச்சைப் பயன்படுத்துகிறார். ஆனாலும் அவரின் பெருமூச்சு படும் தொலைவில் இருக்கும் சுவரில் இரண்டு மகன்களின் படங்கள் மேலும் மேலும் நினைவைக் கிளறுகின்றன. அந்தப் புகைப் படங்களில் தெரிபவர்களின் முகங்கள் மிகுந்த பிஞ்சுத்தனத்துடன் இருக்கின்றன. அதையே பார்த்துக்கொண்டிருந்த ஜெயக்குமாரி அக்கா,

"இந்தப் பிள்ளைகளில் ஒண்டு என்னோட இருந்தாலும் இந்த நிலை எனக்கு வந்திருக்காது. மேல படத்தில இருக்கிறவன்தான் மூத்தவன். அப்ப நாங்கள் திருகோணமலையில் இருந்தனாங்கள். நான் யாழ்ப்பாணத்திலிருந்து கலியாணம்கட்டித்தான் திருகோணமலைக்குபோனனான். தகப்பன் ஒரே குடி. குடிச்சிட்டு வந்து பிள்ளைகளுக்கு அடிக்கும். அப்பிடி அடிச்ச கோவத்தில மூத்தவன் இயக்கத்துக்கு போயிற்றான். அங்க போய் 5 நாள் நிண்டான். வயசு காணாது எண்டு திருப்பி அனுப்பீற்றாங்கள். வீட்டுக்கு வந்து கூலி வேலைகள்தான் செய்து கொண்டிருந்தவன். வேலைக்கு போகேக்கதான் மகன சுற்றி வளைச்சு சுட்டிட்டாங்கள்"

"..அது நடந்து கொஞ்ச நாளில இளைய மகன கருணா குழு கடத்த வந்திட்டாங்கள். இரவுபகல மறைச்சிவச்சிருந்தன். பொலிஸ்காரனே சொன்னான், இங்க உன்ர மகன வச்சிருந்தால் கடத்திப் போடுவாங்கள் எண்டு. அதுக்குப் பிறகுதான் 2007ஆம் அண்டு குடும்பத்தோட வன்னிக்கு வந்தன்."

வந்தாரை வரவேற்றது வன்னி. ஜெயக்குமாரி அக்காவுக்கும் இடம்கொடுத்தது. ஆனாலும், போர் நெருங்க நெருங்க வறுமை பீடித்தது. ஒவ்வொரு நாளும் சாப்பாட்டுக்கான போராட்டமே நீடித்தது.

ஆனாலும் இளையவன் படிக்க ஆசைப்பட்டான். எப்பிடியாவது படிச்சி என்ர குடும்பத்த பாக்க வேணும் எண்டு சொன்னான். கல்விக்கழகத்தில நிண்டு படிச்சவன். ஏ.எல் எடுத்திட்டு வீட்டுக்கு வந்து நிண்டான். அப்ப சரியான கஸ்ரம். என்ர பிள்ளைக்கு சாப்பாடு குடுக்கவே படாத பாடு படுவன். ஒருநாள் அவன் வீட்ட வீட்டு போயிற்றான். நானும் எல்லா இடமும் தேடி அலைஞ்சன். அதோட சண்டையும் வந்து முள்ளிவாய்க்காலுக்கு இடம்பெயர்ந்து போயிற்றம். காணுற இடம் எல்லாம் சனம் சொல்லும், என்ர மகன கண்டனாங்கள் எண்டு. அவன கடைசி வரைக்கும் கண்டிருக்கினம். நான் நேரில காணவேயில்ல.

ஆனா.. அந்தப் புத்தகத்தில மகனின்ர படம் இருக்கு...

உலகம் கொடுத்த அழுத்தத்தின் காரணமாக, மகிந்த அரசாங்கம் வெளியிட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் குறித்த

(தொடர்ச்சி 26ம் பக்கம்)

அனைவருக்கும் எமது சித்திரைப் புதுவருட நல்வாழ்த்துக்கள்

- ✓ Accountancy & Auditing
- ✓ Business Start up Advice
- ✓ Business Plans & Cash Flow Forecasts
- ✓ Personal tax Affairs & Self Assesment
- ✓ Company Tax Affairs & Company Tax Return (CT 600)
- ✓ Preparing VAT, Payroll for the Sole Trader, Patrnership & Limited Companies
- ✓ Company Formation
- ✓ Attending VAT & PAYE visits
- ✓ Tax Investigations
- ✓ Solicitors Accounts & Accounts Reports

TAMSONS
Accounting & Tax Consultancy Ltd.
65 Southlands Road, Bromley, Kent, BR2 9QR
Tel: 020 8313 0800

பனாமா பத்திரக் கசிவும் பன்னாட்டு அரசியலும்

வேல் தர்மா

(ஒரு பேப்பருக்காக)

உலகெங்கும் உள்ள அமெரிக்காவின் தூது வராலயங்களில் இருந்து அமெரிக்க வெளி யுறவுத் துறைக்கு அனுப்பப்பட்ட மின்னஞ்சல் களை வெளிவிட்டது விக்கிலீக்ஸ் என்னும் பெயரில் உலக அரங்கில் பெரும் பரபரப்பை ஏற் படுத்தியது. பின்னர் அமெரிக்க உளவுத்துறைக் காகப் பணிபுரிந்த எட்வேர்ட் ஸ்நோடன் அமெரிக் கப் பாதுகாப்புத் துறையினதும் உளவுத் துறை யினதும் பல இரகசியங்களை அம்பலப்படுத் தினார். இவற்றை எல்லாம் மிஞ்சும் அளவிற்கு உலக வரலாற்றில் என்றுமில்லாத அளவு அதிக அளவிலான இரகசியத் தகவல்களை மொஸ் ஸாக் பொன்சேக்கா அம்பலப்படுத்தியுள்ளார். பனாமா நாட்டில் இரகாசியமாக தமது நிதிகளை மறைத்து வைத்திருப்பவர்கள் வரி ஏய்ப்புச் செய்தவர்கள் பற்றிய தகவலகளை அவர் அம்பலப் படுத்தியுள்ளார். விளையாட்டுத் துறையினர், சினிமாத் துறையினர், அரசியல் வாதிகள் எனப் பலதரப் பட்டவர்கள் சிக்கலில் சிக்க வைக்கப் பட்டுள்ளனர். 78 நாடுகளைச் சேர்ந்த அனைத்துலகப் புலனாய்வுச் செய்தியா ளர்களின் இந்த இரகசியங்களை வெளிக் கொண்டு வருவதில் முன்னின்று உழைத்தது. 7.6 ரில்லியன் அல்லது 7.6 இலட்சம் கோடி அமெரிக்க டொலர்கள் பெறுமதியான சொத்துக் கள் வருமானவரிப் புகலிடங்களில் ஒளித்து வைக் கப் பட்டுள்ளன.

◆ வருமானவரிப் புகலிடம்

பனாமா என்றால் புகையிலையும் கால் வாயும் தான் எம் நினைவிற்கு வரும். அது வரு மானவரிப் புகலிடமாக இருப்பது பலருக்குத் தெரியாது. பலருக்கு வருமானவரிப் புகலிடம் என்றால் என்னவென்று தெரியாது. ஒரு நாட் டிலோ அல்லது ஒரு நாட்டின் ஒரு பகுதியிலோ வருமானவரி குறைவானதாகவும் இரகசியம் பேணும் சட்டங்களும் இருந்தால் அது வரு மானவரிப் புகலிடமாகும். அவை மட்டும் போதாது அந்த நாட்டில் ஒரு நீண்டகால அடிப் படையில் அரசியல் உறுதிப்பாடு இருப்பதும் நிதித் துறையில் அரச தலையீடு இல்லாமல் இருப்பதும் அவசியமாகும். பனாமாவில் செயற் படும் வெளிநாட்டு நிறுவனங்கள் தமது பன் னாட்டு நடவடிக்கைகளுக்கு வருமானவரி, விற் பனை வரி போன்றவை அரசுக்குச் செலுத்தத் தேவையில்லை. வெளிநாட்டு நிறுவனங்களின் பெயர் கொடுக்கத் தேவையில்லை, தங்கள் நட வடிக்கைகள் பற்றிப் பதிவுகள் வைத்திருக்க வெண்டும் என்ற அரச கட்டுப்பாடும் இல்லை. அவர்களுடைய பதிவுகளை வெளிநாட்டு வரு மான வரித் துறையினருக்கு வெளிவிட வேண் டும் என்ற கட்டுப்பாடும் இல்லை. உலக வெளிப் படைத் தன்மை உடன்படிக்கையில் பனாமா கையொப்பமிடாத படியால் அது மற்ற நாடுக ளுக்கு தனது நாட்டில் முதலீடு செய்பவர்களின் நிதி நிலைமை தொடர்பான தகவல்களைப் பரி மாறிக் கொள்வதில்லை. பனாமாவின் வாங்கி கள் தகவல்களை வெளியிட்டால் அது ஒரு இலட்சம் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான தண்டப் பணத்தை பனாமிய அரசுக்குச் செலுத்த வேண்டும். பொருளாதாரத் தடைகளில் இருந்து தப்ப முயற்சிப்பவர்களும் ஊழல் மூலம் பெரும் நிதி பெற்றவர்களும் வரி ஏய்ப்புச் செய்ப வர்களும் விவாக இரத்துக் கோரும் மனைவியி டமிருந்து சொத்தை மறைப்பவர்களும், சட்ட விரோத நிதியை)அதில் பெரும்பாலானவை போதைப் பொருள் விற்பனையால் பெற்ற வையாக இருக்கும்) மாற்றீடு செய்ய அல்லது முதலீடு செய்ய முயல்பவர்களும் வருமான வரிப் புகலிடத்தைப் பெரிதும் விரும்புகின்றார் கள். பனாமா உலகின் மிகப் பழமையான வரு மானவரிப் புகலிடமாகும். 1919-ம் ஆண்டில் இருந்தே பனாமாவில் பல நிறுவனங்களும் தனி நபர்களும் தமது கப்பல்களைப் பதிவு செய்யும் முறை உருவாக்கப்பட்டது. பனாமாக் கொடியு டன் உலகக் கடலெங்கும் வலம் வரும் கப்பல் களால் கிடைக்கும் வருமானத்தின் மீதான வரி ஏய்ப்பிற்கு வழிவகுக்கப்பட்டது. 1927-ம் ஆண்டு ஐக்கிய அமெரிக்காவின் முன்னணி வங்கிகள் பனாமாவில் வெளிநாட்டு நிறுவனங்கள் வரி தவிர்ப்பிற்காக தம்மைப் பதிவு செய்யும் முறை மையையும் சட்டங்களையையும் உருவாக்கு வதற்கு உதவி செய்தன. 1970-ம் ஆண்டு பனாமா அரசு இரகசியக் காப்புச் சட்டங்களை நடைமுறைக்குக் கொண்டு வந்தது. இதனால் உலகில் நிதி தொடர்பான இரகசியம் பேணும் நாடுகளின் பட்டியலில் பனாமா 11-ம் இடத்தில் இருக்கின்றது. இப்பட்டியலில் சுவிஸ் முதலாம் இடத்தில் இருக்கின்றது. சர்வாதிகாரி மானு வேல் நொரியேகாவின் ஆட்சியில் உலகின் பெரும் மோசடிக்காரர்களின் சொர்க்கமாக பனாமா உருவானது.

◆ பணச்சலவையும் வருமானவரிப் புகலிடமும்.

உலகில் அதிக அளவு வெளிநாட்டு வர்த்தக நிறுவனங்கள் பதிவு செய்த பிராந்தியமாக ஹொங் கொங் இருக்கின்றது. பிரித்தானியா வின் முடிக்குரிய பிராந்தியாமான வேர்ஜின் தீவு கள் இரண்டாம் இடத்திலும் பனாமா நாடு மூன் றாம் இடத்திலும் இருக்கின்றன. பனாமாவில் தற் போது 350,00இற்கும் அதிகமானா நிறுவனங் கள் பதிவு செய்யப் பட்டுள்ளன. பனாமாவில் சட்ட விரோத நிதிகளை சட்டபூர்வ நிதியாக மாற் றுவதை பணச் சலவை (money laundering) செய்தல் என்பர். பனாமா புவியியல் ரீதியாக உலகின் பெருமளவு போதைப் பொருள் உற் பத்தி செய்யும் லத்தின் அமெரிக்க நாடுகளுக் கும் உலகில் முதலீட்டுக்குப் பாதுகாப்பான இட மான ஐக்கிய அமெரிக்காவிற்கும் இடையில் இருக்கின்றது. பனாமாவில் வருமான வரி தொடர்பாகவும் நிதிச் சட்டம் தொடர்பாகவும் வல்லுனர்களைக் கொண்ட பல நிறுவனங் கள் வெளிநாடுகளைச் சேர்ந்தவர்களுக்கும் நிறுவனங்களுக்கும் ஆலோசனைகளும் உதவி களும் செய்து பிழைப்பு நடத்துகின்றன. அவற் றில் ஒன்றுதான் மொஸ்ஸாக் பொன்சேக்கா வினுடையது. அதுதான் இப்போது பெருமளவு இரகசியங்களை அம்பலப்படுத்தியுள்ளது. 11.5 மில்லியன் பத்திரங்கள், 2000,000இற்கு மேற் பட்ட நிறுவனங்கள் மற்றும் தனி நபர்கள் தொடர்பான தகவல்கள் மொஸ்ஸாக் பொன் சேக்காவினால் வெளியிடப்பட்டுள்ளன. 1977-ம் ஆண்டில் இருந்து 2015-ம் ஆண்டின் இறுதி வரை இத்தகவல்கள் செல்கின்றன. இதில் இடைத் தரகர்களாகச் செயற்பட்ட 14,000 ஆலோசனை நிறுவனங்களின் பெயர்களும் அம்பலமாகியுள்ளன.

◆ அம்பலத்திற்கு வந்தோர்

பனாமாப் பத்திரக் கசிவினால் இதுவரை அம் பலத்துக்கு வந்த பெயர்கள் ஐஸ்லாந்தில் பதவி யில் இருந்து விலகிய தலைமை அமைச்சர் சிக்மண்டுர் டேவிட் குன்லக்சன், உலக காற் பந்தாட்டக் கழகத்தின் தலைவர் ஜியன்னி இன் பன்ரினோ, உக்ரேனின் சொக்லட் அரசர் பெற்றோ பொரசெங்கோ, பிரித்தானியத் தலைமை அமைச்சரின் (காலம் சென்ற) தந்தை இயன் கமரூன், எ.எஸ்.பி.சி உட்பட பல முன்னணி வங்கிகள், அமெரிக்காவின் தடையை யும் மீறி சிரிய அதிபர் அசத்திற்கு எரி பொருள் வழங்கும் அமெரிக்க நிறுவனங்கள், சீன அதி பரின் மனைவியின் உடன்பிறப்பு உட்பட பல முன்னணித் தலைகள், காற்பந்தாட்ட வீரர் லயனல் மெஸ்ஸி, இந்திய நடிகை ஐஸ்வர்யா ராய், இந்தியத் தலைமை அமைச்சருக்கு நெருக் கமான செல்வந்தக் குடும்பமான அதானி குடும் பத்தில் ஒருவர், ஹொங் கொங் நடிகர் ஜக்கி சான். மேலும் கிளறப்படும் போது இலங்கை, இந்தியா உட்பட பல நாடுகளின் அரசியல் வாதிகளின் பெயர்களும் வெளிவரும். இந்திய நிதியமைச்சர் அருண் ஜெட்லி மொஸ்ஸோ பொன்சேக்காவின் அம்பலப் படுத்தல் தொடர் பாக விசாரிக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார். பல நாடுகளில் விசாரணை என்ற சொல்லுக்கு இழுத்தடித்தல் எனலாம். சிரிய அதிபர் பஷார் அல் அசாத்தினது பெயரும் உண்டு.உலகின் முன்னணி செல்வந்தரான இரசிய அதிபர் விளாடிமீர் புட்டினின் பெயர் இல்லை. ஆனால் அவரது நெருங்கியநண்பரான ஒரு பெரும் செல் வந்தரின் பெயர் வெளி வந்துள்ளது.

◆ சீனா

ஊழல் ஒழிப்பிற்கு எதிராகப் குரல் கொடுத்து வரும் சீன அதிபர் ஜிஜின்பிங்கின் மைத்துனரின் பெயரும் வந்தது பெரும் பரபரப்பை ஏற் படுத்தியுள்ளது. சீன வெளியுறவுத் துறை அடிப்படையற்ற குற்றச்சாட்டுக்கள் என அதை விபரித்தது. ஜி ஜின்பிங் பதவிக்கு வர முன்னர் சீனப்பொதுவுடமைக்கட்சியின் முன்ன ணித் தலைவர்கள் பலர் தாம் ஊழல் மூலம் சம்பாதித்த நிதியை பெருமளவில் வெளிநாடு களில் முதலீடு செய்திருந்தனர். சீனாவின் முன் னாள் தலைமை அமைச்சரின் சொத்து விபரங் களை வெளிவிட்ட அமெரிக்க ஊடகமான நியூ யோர்க் ரைம்ஸ்ஸின் இணையத்தளம் இணைய வெளி ஊடுருவிகளால் முடக்கப்பட்டது. அது சீனாவின் பழிவாங்கல் எனவும் குற்றம் சாட்டப் பட்டிருந்தது. இப்போது பனாமா பத்திரங்களின் அம்பலப் படுத்தல் தொடர்பான எல்லாத் தகவல்களும் சீன இணைய வெளியில் தடை செய்யப் பட்டுள்ளன. சீனத் தேடு பொறிகள் பனாமா என்ற சொல்லுடைய எல்லாத் தகவல் களையும் அழித்துக் கொண்டிருக்கின்றது. அனைத்துலகப் புலனாய்வுச் செய்தியாளர்க ளின் சேர்ந்தியம் மெஸ்ஸோ பொன்சேக்காவிட மிருந்து திரட்டிய தகவல்களை ஜேர்மனிய ஊட கம் ஒன்றிற்குப் பகுதி பகுதியாக அனுப்பியது. ஆனால்

அனைத்துலகப் புலனாய்வுச் செய்தியாளர் களின் சேர்ந்தியத்தை உருவாக்கி அதன் பின் னால் நின்று செயற்படுவது ஐக்கிய அமெரிக் காவில் உள்ள பொதுத்துறை நேர்மைக்கான நிலையம் என்னும் தன்னார்வத் தொண்டு அமைப்பாகும். ஐக்கிய அமெரிக்கா தன்னார் வத் தொண்டு அமைப்பு ஆகிய இரண்டு பதங் களையும் சேர்த்துப் பார்த்தால் வருவது அமெரிக்காவின் உளவுச் சதி என்பதாகும். இதனால் பனாமாப் பத்திரிகைப் பகிரங்கத்தின் பின்னால் அமெரிக்க உலக ஆதிக்கச் சதி இருக் கின்றதா என்ற ஐயம் எழுவது இயல்பே. 2008-ம் ஆண்டு உருவான உலகப் பொருளாதார் நெருக்கடியின் பின்னர் பல மேற்கு நாட்டு அரசுகள் வரி ஏய்ப்புச் செய்வோரால் தமது வரி வருமானங்களை இழந்து கொண்டிருக்கின் றன. மேலும் அண்மைக்காலங்களாக உலக அரங்கில் அமெரிக்காவிற்குத் தலை குனிவை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் இரசிய அதிபர் விளடிமீர் புட்டீன் சிரிய அதிபர் பஷார் அல் அசாத் ஆகியோருக்கு வைத்த பொறியில் பலரும் மாட்டிக் கொண்டனரா?

கடன் சுமையால் கஸ்டப்படுகிறீர்களா?

தனிநபரோ... வியாபாரமோ...

- கடன்/Credit Cardக்கு மாதாந்தம் கட்டும் பணத்தை குறைக்க...
- Bankruptcy யை தழுவ அல்லது தவிர்க்க...
- வியாபாரத்தை பலப்படுத்த...
- TAX / VAT / PAYE போன்றவற்றில் தகுந்த ஆலோசனையைப் பெற...

BBK PARTNERSHIP

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்

உங்களுக்கு உதவி செய்யக் காத்திருக்கிறோம்

www.bbkca.com

Email: admin@bbkca.com

THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS IN ENGLAND AND WALES

Chartered Accountants and Business Recovery Professionals

- Accountancy / Audit
- Tax Solutions
- Company Formation
- Confidential Tax Consultancy
- Investigations / Tax Mitigation
- Bankruptcy / IVA
- Liquidations
- Business Startup & Consultancy
- Solicitors Rules Audit
நேரம்: மாலை 05:00 மணி முதல்
இடம்: 10, Downing Street, London SW1A 2AA.
அருகாமைத் தொடருந்து நிலையம் : Westminster
தொடர்புகளுக்கு : தமிழர் ஒருங்கிணைப்புக் குழு 020 3371 9313



SKY TRUST UK PROUDLY PRESENTS

VETHANTHIRI MAHARISHI'S

SIMPLIFIED KUNDALINI YOGA FOR HOLISTIC HEALTH

Web : www.vethanthri.edu.in www.vethanthiri.org.uk

Foundation Course

Simplified Kundalini yoga for health course providers a through grounding in meditation, kayakalpa yoga, introspection and physical exercise. It totally transforms a person, giving him a new perspective on life and equips him with necessary tools to handle the mounting pressure that the Morden day society bestows upon him

Introspection Course

The Process of analysing and getting a total understanding of oneself

Introspection is a practice methodology for sublimating the negative emotion of greed, anger, vengeance, etc. Between Thuriam and thuriateetham the aspirant has to put himself through practice under the process of introspection in order to have his character reformed, to get enlightenment and to enjoy peaceful and happy life.

Venue : Victoria Hall, Sheepcote Road, Harrow, HA1 2JE

Weekly : Saturday - Time 8:00 am till 10:00 am

- Harrow – Uthayanan - **07785 241 435**
- Ilford - Gupta - **07947 229 264**
- Luton - Jayakumar - **07882 119 334**
- Bristol & Rugby - Manick - **07515 108 086**
- UK & General - Ganga - **07766 442 273**
- Birmingham - RA Thangarajan- **07983808895**

facebook join our group + Simplified Kundalili Yoga (SKY)UK Facebook.com/SKYTRUSTUK

Synopsis

- Practical self-analysis tools designed to take stock of positive and negative characteristics in your personality
- Eliminate the unnecessary and incompatible aspects of your character
- Strengthen the hobbits of good though, word, deed, and discerning and rejecting the habits unwanted

skyuk@vethanthiri.edu.in skyogauk@aol.com

Affiliated to
the world community service centre, A non-profit organisation – promoting world peace
26, Second Seaward street, Thiruvanmiyur, Chennai 6000041, India

GK ALARMS LTD

SECURITY SYSTEMS INSTALLATION AND MAINTENANCE SPECIALIST

CCTV, BURGLAR ALARM, CARD ACCESS & DOOR ENTRY SYSTEMS

WISH TO REDUCE YOUR RISK OF BURGLARY?

We have various burglar alarm and CCTV system packages available for domestic and commercial customers to meet your budget, security and insurance requirements.

Languages spoken by our team :
English, Tamil, Hindi, Punjabi and Malay.

Call us on 020 8240 1114 / 07944 541 881
or email us info@gkalarms.co.uk
for a FREE no obligation burglary risk assessment and quotation.

Member of SSAIB–Our work is approved by insurance companies.

வன்னியில் ஒரு காலத்தில் தன்னிறைவு கொண்டு விளங்கிய மூன்று கிராமங்களின் கதை

மகாலிங்கம் பத்மநாபன்

பெரிய பரந்தன், குஞ்சுப்பரந்தன். செருக்கன் கிராமங்களின் பொற்காலமும் நீலனாறு, கொல்லனாறுகளால் சூழப்பட்டு பொறிக் கடவை அம்பாளின் அனுக்கிரகத்தால் வாழ்ந்த மக்களின் வரலாறும்.

யானைக்குழிகள்

ஆதியில் யானை பிடிப்பதற்காக வெட்டப்பட்ட பாரிய யானைக் குளிகள் இன்றும் உள்ளன. மாரிக்காலத்தில் இக்குளிகளும் சூழ உள்ள இடங்களும் நிரினால் நிரம்பிவிடும். முழு இடமும் கடல் போல காட்சியளிக்கும். காட்டிற்கு மாடுகள் கட்டச் செல்பவர்களுக்கான பாதையும் இக்குளிகளினருகே காணப்படும். காட்டிற் குள் போய் வருபவர்கள் இக்குளிகளினருகே செல்லும் போது மிகவும் அவதானமாக நடந்து செல்வர்.

காட்டில் செல்பவர்கள் இசகு பிசகாக யானைக்கூட்டத்தைக் கண்டால் ஓடி அருகே உள்ள நீர் நிலைகளில் விழுந்து ஒளித்து விடுவர். நீருக்குள் ஒளித்தவரின் வாடை வீசாத காரணத்தால் யானைகள் அருகே சென்றாலும் ஒளித்தவரைக் காண்பதில்லை. ஒரு நாள் செருக்கனைச் சேர்ந்த ஒரு தந்தையும் மகனும் யானைக் குளிக்கருகே சென்று கொண்டிருந் தனர். அது ஒரு மாரி காலம். தந்தை தவறி யானைக்குளிக்குள் விழுந்துவிட்டார். யானைக் கூட்டத்தைக் கண்டு தான் தந்தை ஒளிக்கிறார் என்று கருதிய மகன் தானும் நீர் நிலைக்குள் படுத்துவிட்டான். மகனின் உதவி கிடைக்காது என்பதைப்புரிந்து கொண்ட தந்தை ஒருவாறு காலைக் கையை அடித்து குளியிலிருந்து தப்பி வந்துவிட்டார். அந்த மகனின் அறியாமையைப் பற்றி இப்போதும் செருக்கன் மக்கள் கதைத்து சிரிக்கின்றனர்.

சுட்டதீவுக் கோவிலின் அருகே பல்லாண்டு களாக வீசுகின்ற காற்றினால் அடித்து வரப்படும் மணல்கள் சேர்ந்து ஒரு மணல் அணை இயற் கையாகவே உருவாகி இப்போதும் காணப்படு கின்றது. செருக்கனில் தன்னைப்பற்றி சுய புராணம் பாடும் ஒருவன் இருந்தான். அவன் தான் யானைகளையும் பிடித்து கயிற்றால் கட்டி விடுவேன் என்று தன் வயதை ஒத்த தோழர் களிடம் கதை அளப்பது வழக்கம். அவன் ஒரு நாள் தன் தோழர்கள் சிலருடன் அந்த அணை யின் ஒருபக்கத்தில் சென்று கொண்டிருந்தான்.

அப்போது அணையின் மறு பக்கத்தில், காட்டுக்குள்ளே யானைகள் நடமாடும் சத்தம் கேட்டது. உண்மையில் யானைக் கூட்டத்திலி ருந்து பிரிந்து வந்த ஒரு சிறிய முன்னோடி யானைக்கூட்டம் அணையின் மறுபக்கத்தில் நின்றன. இதையறியாத புழுகு சிகாமணி திடீ ரென்று நான் ஒரு யானை பிடித்து வருகிறேன் என்று பெரும்குரலில் கத்தியபடி அணையில் ஏறி ஓடினான்.

அணையில் ஏறிக்கொண்டிருந்த அந்தச் சிறிய யானைக்கூட்டம் வெருண்டு எதிர்த்திசை யில் ஓடியது. அப்போது அக்கூட்டத்தில் வந்த ஒரு வளர்ந்த குட்டி யானை கால் தடுமாறி விழுந்து மணலில் உருண்டது. பின் அது ஒரு வாறு எழுந்து நோண்டியபடி ஓடி தன் கூட்டத் துடன் இணைந்து கொண்டது.

யானைகளை திடீரென்று கண்டு திகைத்து நின்ற புழுகு சிகாமணி யானைகள் ஓடிவிட்ட தைக் கண்டு மனம் தேறி, ஒரு யானை விழுந்த நிகழ்வைப் பயன்படுத்த எண்ணி, "யானை யைப்பிடித்துவிட்டேன், கட்டுவதற்கு கயிறு கொண்டு வருங்கள்" என்று கத்தினான். தலைமை யானை மட்டும் அன்று அவ்விடத்தில் இருந்திருந்தால் அன்றே புழுகுசிகாமணியின் கதை முடிந்திருக்கும்.

அக்கில் வேலி

ஆதியில் நெல் வேளாண்மையை, யானை, மான், மரை, குழுமாடு முதலிய மிருகங்களிட மிருந்து காப்பாற்ற கிராமத்தின் எல்லையில், ஊர் மக்கள் யாவரும் ஒன்றுசேர்ந்து அக்கில் வேலிகளை அமைத்தனர். காட்டிலே மரங்க ளைத் தறித்தனர். எருமை மாடுகளில் கட்டி இழுத்துவந்தனர். கிராமத்தின் எல்லை முழுவ தும் மரங்களைக் கொண்டு சிறு இடைவெளி கூட இல்லாது அணை போல அடுக்கினர்.

ஆதியில் யானை பிடிப்பதற்காக வெட்டப்பட்டபாரிய யானைக் குளிகள் இன்றும் உள்ளன. மாரிக்காலத்தில் இக்குளிகளும் சூழ உள்ள இடங்களும் நிரினால் நிரம்பிவிடும். முழு இடமும் கடல் போல காட்சியளிக்கும். காட்டிற்கு மாடுகள் கட்டச் செல்பவர்களுக்கான பாதையும் இக்குளிகளினருகே காணப்படும். காட்டிற்குள் போய் வருபவர்கள் இக்குளிகளினருகே செல்லும் போது மிகவும் அவதானமாக நடந்துசெல்வர்.

இது பல வருடங்களுக்கு மிருகங்களை ஊருக் குள் வராது தடுத்து நிறுத்தும், அக்கில் வேலி என்று அழைத்தனர். இவர்களின் அக்கில் வேலி உடன் தொடர்ந்து பெரியபரந்தன் மக்களும் தங் களுக்கான அக்கில் வேலியை அமைத்துக் கொண்டனர். ஒருமுறை ஒரு முரட்டுத்தமான யானைக்கூட்டம் அந்த அக்கில் வேலியை உடைத்துக்கொண்டு உள்ளே வந்து பயிரழிவு செய்த கதையையும், தாங்கள் யாவரும் சேர்ந்து மீண்டும் வேலியை திருத்தி அமைத்தமை பற் றியும் முதியவர்கள் கூறி, அந்தக்காலத்தில் மக் களிடையே நிலவிய ஒற்றுமையையும் நினைவு கூர்ந்து பெருமூச்சு விட்டனர். இப் போது நெல் வேளாண்மையுடன், மந்தை வளர்ப்பும், மீன் பிடியும் பிரதான தொழிலாக இருப்பதை நாங் கள் அவதானித்தோம்.

முற்றும்

ஈழத்தமிழர் இன அழிப்பின் 18 வலைவீசம்பாடல் (03)

நான்கரை லட்சம்
மண்மானத் தமிழர்களை
நான்கரை சதுரமைல் பரப்பளவிற்குள்
பாதுகாப்பு பிரதேசமென்று
பச்சைப் பொய் கூறி
அடக்கியும் ஒடுக்கியும் விட்டு
பயங்கரவாதிகள்
என்ற குறிசூட்டுப் பெயருடன்
நச்சுக் குண்டுமழை பொழிந்து
நட்டநிசியிலும் சுட்டுத்தள்ளிய
சிங்கள அரச பயங்கரவாதத்தை
ஐ.நாவே அன்று நீ ஏன்
பொய்நாவாகி
கண்ணிருந்தும் குருடராய்
காதிருந்தும் செவிடராய்
நீதியும் நியாயமற்று பக்கச்சார்பாய்

குஞ்சு குருமன்கள் பெண் புரசுகள்
கிழடுகட்டைகள் என்றும் பாராமல்
வஞ்சகமாய் நச்செறிந்து கொன்று
கொள்ளிவைத் தெரித்த
முள்ளிவாய்க்கால்
கோரப்படுகொலை மே 18ம்
முடிந்த ஒரு முடிவல்ல
முடிவிற் தோன்றும் ஈழவிடுதலையின்
விடிவும் விமோசனமுமேயிது

பச்சைப் படுகொலைகளாய்
பாலச்சந்திரன்கள் – காம
இச்சைக்காய் குரல்வளை நசுங்கிய
இசைப்பிரியாக்கள்
பிணமேடைகளை மண மேடைகளாக்கிய
குணக்கேடுகளான சிங்கள
பிணந்தின்னிக் கழுகுகளுடன்
தமிழினந்தின்னி கூலிக்குழுக்கழும்

பெத்தவள் முலைகசிந்த
இரத்தத்துளியதனை – தாய்
செத்ததும் தெரியாமற்
குடித்ததங்கே எங்கள் சிசு
எத்தர்கள் கூடி இரண்டகஞ் செய்து
ஈழக்குழந்தைக்கும் கருவழிக்கும்
மருத்துவிச்சியானதேன் ?

பிணக்குடல் மாலைகளைச்
சூடிய நாய்நரிகளுடன்
குணக்கேடுகளான மனிதப் பேய்களும்
தாண்டவமாடிய மாண்டவர் பூமியாய்
மே 18 முள்ளிவாய்க்கால்
கொலைக்களம் 2009

ஆனந்தபுரமெரிந்து
அத்தினபுரமாய் கரிந்து
ஒன்றல்ல இரண்டல்ல
லட்சோப இலட்சங்கள்
பூவோடு பிஞ்சுகளும் பட்டமரமாய்ச் சாய
கன்றோடு தாய்ப்பசுவும் கதறுமொலி
கேட்குதின்னும்

தொடரும்...

– கவிஞர் க.சிவசுப்பிரமணியம்

• தோசை
• இட்லி
• வடை

Dosa – Idly - Vada

• தோசை
• இட்லி
• வடை

CERTIFICATE of EXCELLENCE 2015 Winner
tripadvisor

Prepared by our new Dosa Chef with over 40 years experience in South Indian Cuisine.

Exclusive offer for our Takeaway customers. If you order your takeaway meal through our new website www.fushia-restaurant.co.uk

Award winning Fushia Restaurant
Daily opening from 5 pm to 11 pm
(Sunday 12 Noon to 11.00 pm)

FUSHIA

Fushia Restaurant and Banqueting Hall
TEL - 020 8680 8833 / 07958424222
3, Brighton Road, South Croydon, Surrey, CR2 6EA
web : www.fushiauk.com Mail : info@fushiauk.com

ஒரு பேப்பர் ORU PAPER

உங்கள் வாசல் தேடி வர,
ஒரு வருடத்திற்கு **£35** மட்டுமே!

SUBSCRIPTION FORM

Name: _____

Address : _____

_____

_____

Postcode: _____

Telephone: _____

மேலுள்ள விண்ணப்ப படிவத்துடன், £35 க்கு "Oru Paper Ltd."" ன் பெயரில் காசோலை யினையும்,
G11, Lombard House, PURLEY WAY, CROYDON, CR0 3JP என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

அகத்தி ஆயிரங்காய் காய்த்தாலும்..

பாகம் 192

அலசுவாரம்

அலசுபவர் : **மட்டைக்களப்பான்**

இந்த அலசுவாரம் தொடரில் எவ் வளவு முடியுமோ அவ்வளவு நிதானத் துடனும், நடுவுநிலைமையுடனும், எமது தமிழர் தாயக, தமிழர் தேசியக் கோட்பாட்டிற்கு எவ்விதத்திலும் முரண் படாதவாறு பல கட்டுரைகள் என்னால் எழுதப்பட்டுள்ளன. தற்போது புதிதாக உருவாகியுள்ள அரசியற் சூழல் சற்றுச் சார்பு நிலையெடுக்க வேண்டிய அவசியத்தை எற் படுத்தியுள்ளது.

தமிழ் நாட்டில் மாநில சட்டசபைக்கான தேர்தல் பிரச்சாரங்கள் சூடு பிடிக்க ஆரம்பித்து விட்டன. திமுக, அண்ணா திமுக, வைக்கோ வின் மறுமலர்ச்சிதிராவிட முன்னேற்றக் கழகம், விஜயகாந்தின் தேசிய முற்போக்குத் திராவிட கழகம் என்றெல்லாம் திராவிட மாயையை முன் னிறுத்திப பல்வேறு கட்சிகள் களத்தில் செல் வாக்கோடு நிற்கும்போது, தமிழர் தேசி யத்தை முன்னிறுத்தி சீமானை தலைமை ஒருங் கிணைப்பாளராகக் கொண்ட 'நாம் தமிழர்' கட்சியும் தன்னால் முடிந்தளவு வெற்றி வாய்ப் பைக் கூட்டிக்கொள்ளப் பாடுபடுகிறது. பாக்கு நீரிணைக்கு இருபுறங்களிலுமுள்ள தமிழர் தேசியத்தை அடிப்படையாகக் கொண்டு, சோஷலிச சித்தாந்தங்களையும், பாரம்பரிய தமிழர் வாழ்வியலையும் முதன்மைப்படுத்தி ஒரு ஏற்றத்தாழ்வற்ற சமுதாயத்தை உருவாக் கும் குறிக்கோளோடு பல படித்த இளைஞர்கள் நாம் தமிழர் கட்சியை வளர்த்தெடுக்கப் பாடு படுகிறார்கள்.

கடந்த பல தசாப்தங்களாக திராவிட மாயை யில் ஊறிக்கிடந்து தங்களுக்கு நன்கு தெரிந்த திராவிடக் கட்சிகளின் சின்னத்திற்கே வாக்களித் துப் பழக்கப்பட்டுப்போன தமிழக மக்களின் கைகள், நாம் தமிழர் கட்சியின் சின்னமான எரியும் இரட்டை மெழுகுவர்த்திச் சின்னத்திற் குச் சடுதியாக மாறி வாக்களிக்குமா? அல்லது மாற்றமொன்றைத் தேவையற்றதாகக் கருதி உதாசீனம் செய்துவிடுமா என்பது இன்றுவரை தெளிவில்லாமலேயே இருக்கிறது.

போதிய பணபலமிக்க ஆட்பலம், பத்திரிகை, ரிவி, இணையம் போன்ற ஊடகங்களின் மூல மான பிரச்சார பலம் தேர்தல் கால அனுபவபலம் உட்பட அனைத்து வளங்களையும் வைத்துக் கொண்டு, தேர்தலை வெகு அனாயாசமாக சந்திக்க முன்னிற்கும் திராவிடக் கட்சிகளைத் தமது பிரச்சார பலத்தாலும், உண்மையும், நேர் மையும் கொண்ட அரசியல் பொருளாதார அணுகுமுறைகளாலும் தோற்கடிக்க வேண் டிய பெரும் சிரம சாத்தியமான நிலைக்குள் நாம் தமிழர் கட்சி தனது தேர்தல் பிரச்சாரத்தை நடத்திக்கொண்டிருக்கிறது.

மக்களைக் கவரும் நடனங்கள், நிகழ்ச்சிகள், கூட்டம் சேர்க்கும் கவர்ச்சி நடிகைகள் உட்பட மக்களை எப்படியெல்லாம் ஒன்றுதிரட்டிப் பெருந்தலைவர்கள் வரும்போது கூட்டத்தைப் பிரமாண்ட நிகழ்ச்சியாக்கி மக்கள் மத்தியில் பிர மிப்பூட்டி எவ்வளவு வாக்குச் சேர்க்க முடி யுமோ அவ்வளவு சேர்க்கும் தந்திரங்களை திரா விடக் கட்சிகள் மேற்கொள்ளும். அதற்கு அவர் களிடம் தேர்தல்கால முதலீட்டுக்கான போதிய பணபலமுள்ளது. காசு அவர்களுக்குப் பெரிய விடயமேயில்லை. ஆனால் தெரு முனைகளில் நின்று மக்கள் மத்தியில் வாக்குக் கேட்கும் நாம் தமிழர் கட் சிக்கோ அத்தகைய பணவலு இல்லை. அத்துடன் இத்தகைய இழிவான செயல் முறைகளின் மூலம் மக்களை அரசி யலில் ஓர் மாயச்சுழலுக்குள் (விசியஸ் சேக்கிள்) கொண்டு சென்று அரசியல் ஆதா யம் பெற அவர்கள் விரும்பவுமில்லை. காத்திர மான பொருளாதார, சமூக, கலை, பண்பாட்டு, அறிவியல், ஆரோக்கிய நலத்திட்டங்களை மக் கள் முன் வைத்து மிகவும் ஆரோக்கியமான வழி முறையூடாக மக்களிடம் நாம் தமிழர் கட்சியின் புத்திஜீவிகள் வாக்குக் கேட்கின்றார்கள்.

சமூகத்தால் ஒதுக்கி வைக்கப்பட்ட அரவாணி கள், மாற்றுத்திறனாளிகள், சாதிப்பிரிவுகள் உட் பட அனைவருக்கும் சமூகத்தில் சம சந்தர்ப்ப மும், பங்கும் வழங்கப்படவேண்டும் என்ற உயர்ந்த நோக்கின் அடிப்படையில் நாம் தமிழர் கட்சியினர் ஒரு புரட்சிகர விஞ்ஞான சோஷலிசக் கோட்பாட்டுக்குச் சொந்தக்காரர்களாக, பாக்கு நீரிணைக்கு இருபுறங்களிலுமுள்ள தமிழ்நாடு, தமிழீழம் என்னும் இரண்டு தமிழர் தேசியங்க ளையும் முன்னிறுத்தி மக்களிடம் வாக்குக் கேட் கிறார்கள்.

உண்ட களைப்பில் வந்து நின்று புளிச்சல் ஏப்பம் விட்படி பல லட்சக்கணக்கான மக்கள் முன்னே சில நிமிடங்கள் பேசிவிட்டுப் போகும், பெருந்தலைவர்களுக்குச் சவாலாக மக்க ளோடு மக்களாக நின்று உள்ளத்தின் அடியி லிருந்து வரும் உணர்ச்சிப் பெருக்கில் தமிழர் தேசியத்துக்காகவும், திராவிட மாயையை உடைத்தெறிவதற்காகவும், ஓர் புதிய வள மிக்க தமிழர் சமுதாயத்தைக் கட்டியெழுப்பு வதற்காகவும், உலக அரங்கில் தமிழர் தேசி யத்தின் வலுவை அரசியல் ராஜதந்திர ரீதியில் ஸ்தாபிப்பதற்காகவும், நெஞ்சுடையப் பாடு படும் சீமான் தலைமையிலான எமது உறவுக ளைக் கைதூக்கி விடவேண்டியது எமது அனை வரினதும் கடமையாகும். புலம் பெயர்ந்த தமி ழர்கள் தங்களால் முடிந்த அளவு உதவிகளை அவர்களுக்காகச் செய்து தமிழரின் பலத்தை சர்வதேசரீதியில் உறுதிப்படுத்த வேண்டியது அவர்களின் தார்மீகக் கடமையாகும்.

நாம் ஐம்பதாண்டுகளுக்கும் மேலாக பெரியார் ஈவேரா அடித்தளமிட்ட திராவிட மாயைக்குள் சிக்குப்பட்டு மீளமுடியாமல் தவிக்கிறோம். துரதிஸ்டவசமாக கன்னடரான ஈவேராவின் திரா விடக் கொள்கை, ஏனைய திராவிட மாநிலங் களில் அணுவளவு கூட வரவேற்பைப் பெறவு மில்லை, வெற்றியடையவுமில்லை. இளிச்ச வாயன் தமிழன்தான் அதற்கு எடுபட்டான். சந்தர்ப்பம் சாதகமாக இருந்ததால் ஆந்தி ராவிலிருந்து ரிக்கற் இல்லாமல் ரயிலேறி வந்த தட்சணாமூர்த்தி என்னும் கருணாநிதி அண் ணாவின் மறைவோடு தலைமைக் கதிரையில் ஏறிக்கொண்டார். இன்று கோடிக்கணக்கான பெறுமதியுடைய சொத்துக்களைச் சுருட்டி ஆசி யாவிலேயே பெரிய பணக்காரராகித் தள்ளாத தனது 93ம் வயதிலும் அரசியலை விடாமல், தனது குடும்பவாரிசுகளுக்கு தமிழ் நாட்டின் தலைமையைக் கையளித்துவிட்டுச் செல்ல முயன்று கொண்டிருக்கிறார் கலைஞர். அம்மா ஜெயலலிதாவுக்கு இருந்தால் எழும்ப முடி யாது, ஏழுந்தால் இருக்க முடியாது. வருடத்தில் முக்கால்வாசியை நீலகிரிப்பகுதியிலுள்ள கொடாநாட்டு எஸ்டேட்டில் ஓய்வெடுத்தே கழிக்க வேண்டிய நிலைமைக்கு வந்து விட்டா. விஜேகாந்திற்கும் வாக்குமாறத் தொடங்கி விட்டது.

ஈழத் தமிழர்களுக்காக ஆரம்பத்திலிருந்தே குரல் கொடுத்ததோடு தேசியத் தலைவருடன் மிகவும் நெருக்கமாக இருந்த மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகத்தலைவர் வை. கோ. விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலை வர் திருமாவளவன் போன்றோரும் கருணாநிதி யையும், அம்மா ஜெயலலிதாவையும் வீழ்திவிட வேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்டு விஜயகாந்த் அழகர்சாமி நாயுடு அவர்களின் தேசிய முற்போக்குத் திராவிடக் கழகத்துடன் தொகுதிப்பங்கீட்டைச் செய்தே தேர்தலில் போட்டியிடுகின்றனர். இவர்களுடன் சில கம்யூ னிஸ்டுகளும் சேர்ந்து அமைத்துள்ள மக்கள் நலக் கூட்டணி தமிழ்நாட்டில் பல நையாண்டி களுக்கு ஆளாகிவருகின்றது. ஆரம்பத்தில் திரு வை.கோ விஜயகாந்த் தான் முதலமைச்ச ரென்றார் பின்னர் அதை மறுத்தார். இவ்வா றான குழறுபடிகளால் இந்தக் கூட்டணிமீதும் பெரிய நம்பிக்கையை மக்கள் இழந்துவிட்டனர் என்றே தோன்றுகின்றது.

அதற்கும் மேலாய் தமிழர் தேசியத்தை வளர விடக்கூடாது. தமிழ்நாடு திராவிடநாடு, திராவிட இயக்கங்கள் அரசியலதிகாரத்தைப் பிடிக்கப் பிரிந்து நின்று போராடினாலும் தமிழர் தேசி யத்தை ஒழிக்கும் விடயத்தில் ஒன்று சேர்ந்து நிற்கவேண்டுமென்று தனது சுயரூபத்தை திரு வை. கோ அவர்கள் வெளிக்காட்டிவிட்டார். அவ ரைச் சொல்லிக் குற்றமில்லை. அவரொரு தெலுங்கர். திராவிடத்திற்குள்ளிருந்து அவரால் வெளியேறமுடியாது. அதற்குள்ளிருந்துகொண்டு தான் அவரால் அரசியல் செய்ய முடியும். ஆத லால் தன்னையும் தன்னையொத்த திராவிடர் களையும் பாதித்துத் தங்களைத் தமிழ்நாட்டு அரசியலிலிருந்து முற்றாக ஓரங்கட்டிவிடக் கூடிய தமிழர் தேசியத்தை முன்னெடுக்கும் நாம் தமிழர் இயக்கத்தை அழித்து விடவேண்டு மென்று கொக்கரிக்கிறார். அவருக்கு இப் போது தமிழர் தேசியம் பெரிதாகத் தெரிய வில்லை. தன்னையொத்தவர்கள் தமிழ்நாட்டில் அரசியல் செய்து தமிழர்களின் தலையில் தொடர்ந்து மிளகாயரைக்க இடமில்லாமற் போகத் தமிழர் தேசியம் வைத்துவிடும் என்பது தான் பெரிய கவலையைக் கொண்டுவருகிறது. ஆரம்பத்தில் கருணாநிதி எப்படி தமிழ் இனம், தமிழ் நாடு என்று கதையளந்துவிட்டுப் பின்னர் தமிழர்களைக் காட்டிக்கொடுத்தாரோ அதே வேலையை வைகோ செய்வதற்கும் நெடுநாளா காது என்பதை ஈழத்தமிழர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

'அகத்தி ஆயிரங்காய் காய்த்தாலும் புறத்தி புறத்தியே!' என்பார்கள். திராவிடர்களைப் பொறுத்தவரை இது அச்சொட்டாகப் பொருந்து கின்றது. இங்கு மறைந்த மக்கள் திலகம் எம்ஜீஆர் அவர்களை ஓர் புறநடையாகவே கருத வேண்டும். அந்த மாமனிதன் ஓர் மலையாளத் திராவிடனாக இருந்தாலும், தமிழ்த் தேசியத் தின்மீது பற்றுக்கொண்டு தேசியத் தலைவரின் வேண்டுகோளையேற்று கைம்மாறு கருதாது பேருதவி புரிந்தார். அதனை தமிழ்கூறும் நல்லு லகம் என்றும் மறக்காது மறக்கவும் கூடாது.

ஆனால் காலம் மாறிவிட்டது. வெளிமாநிலத் திராவிடர்களிடம் திராவிட உணர்வு அற்றுப் போய்விட்டது. அவர்கள் தங்களை மலையாளி களாக, கன்னடர்களாக, தெலுங்கர்களாக அடையாளப்படுத்தி அரசியலில் பரிணாமம் பெற்று விட்டார்கள். தமிழர்கள் மட்டும் தான் நாம் திராவிடர்கள் என்னும் மாயையில் நெடுங் காலமாக உழன்று இன்றுவரை அதிலிருந்து விடுபட முடியாமல் தவிக்கிறார்கள். நாம் தமிழர் என்று தனித்து நிற்பதற்குத் தயங்குகிறார்கள். இந்த நிலையை எப்படியும் மாற்ற வேண்டியது உலகத் தமிழர்களின் பெருங்கடமையாகும்.

கடந்த பல தசாப்தங்களாக திராவிட மாயையில் ஊறிக்கிடந்து தங்களுக்கு நன்கு தெரிந்த திராவிடக் கட்சிகளின் சின்னத்திற்கே வாக்களித்துப் பழக்கப்பட்டுப்போன தமிழக மக்களின் கைகள், நாம் தமிழர் கட்சியின் சின்னமான எரியும் இரட்டை மெழுகுவர்த்திச் சின்னத்திற்குச் சடுதியாக மாறி வாக்களிக்குமா? அல்லது மாற்ற மொன்றைத் தேவையற்றாகக் கருதி உதாசீனம் செய்துவிடுமா என்பது இன்றுவரை தெளிவில்லாமலேயே இருக்கிறது.

"தமிழனென்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா" என்கிறார் நாமக்கல் கவிஞர் ராம லிங்கம் பிள்ளை. அந்தத் தலைநிமிர்வை இனியாவது நாம் பெறவேண்டுமானால் 'நாம் தமிழர்' என்னும் கோஷத்தோடு எவ்வித தயக்க மும்மில்லாமல் திராவிடர்களின் மாயப் பொறியி லிருந்து நாம் விடுபட்டேயாகவேண்டும். தமிழ னுக்கென்றோர் நாடு பாக்கு நீரிணையின் வடக் கிலோ தெற்கிலோ உருவாகியே ஆகவேண்டு மென்ற ஆதங்கமுள்ள எந்தவொரு தமிழனும் இனிமேல் எந்தத் தாமதமுமில்லாமல் தமிழர் தேசியத்திற்காகப் பாடுபடத் துணிவோடு முன் வந்திருக்கும் 'நாம் தமிழர்' இயக்கத்தை ஆதரிக் கவேண்டியது மிக அவசியமாகும்.

உதவாதினி ஒரு தாமதம்
உடனே விழி தமிழா - பாரதிதாசன்

தொடருவம்..

கருத்துக்களுக்கு - facebook.com/orupaper @orupaper

பிரித்தானியா
TEL: 020 7043 4315 FAX : 020 7043 4312
உங்கள் வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுக்க வேண்டுமா?

TEL: 647 724 4188 FAX : 416 438 7855
கனடா
www.orumanam.com

நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
சித்திரைப் புதுவருட நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக..

BRINGING GREAT FOOD TO LIFE...

NO 1 Brand

BRAND Niru®

Quality you can taste

Niru Europe Ltd,Unit11,Mitcham Industrial Estate, 85 Streatham Road,Mitcham,Surrey CR42AP.
T: 020 8640 8228 F: 020 8640 8423 E:sales@niru.co.uk W: www.niru.co.uk

தமிழ் நாட்டின் அடுத்த முதல்வராக யார் வரவேண்டும் ?

கலைஞரை, ஜெயலலிதாவை, வைகோவை இன்னும் மற்றும் பிறத்தாரை அவர் இன்னார் என்று தெரிகின்ற பக்குவம் வந்துவிட்டது. அவர்கள் என்ன செய்வார்கள் என்று தெரிகிறது. என்ன செய்ய மாட்டார்கள் என்றும் தெரிகிறது. இவர்கள் எவரும் தமிழ் நாட்டு மக்களுக்கு உருப்படியாக எதுவும் செய்யவில்லை. செய்யப் போவது மில்லை. தமிழ் நாட்டு மக்கள் மீது படர்ந்திருக்கின்ற இருள் இப்பொழுது விலகுவதாக இல்லை. அந்த விளக்கத் துடனும், தெரிதலுடனும், புரிதலுடனும், அறிதலுடனும் ஒரு கருத்தை முன் வைக்கின்றேன். தமிழ்நாட்டு ஆட்சிக் கட்டிலில் ஏறி அமரப் போவது யார்? இருவர் மீது மாத்திரமே அனைத்து சுட்டு விரல்களும் நீள்கின்றன. கருணாநிதி, ஜெயலலிதா. மற்றவர்களுக்கான சந்தர்ப்பம் இல்லை என்பது வெளிப்படையாக தெரிந்த ஒன்று.

சரி, கருணாநிதி, ஜெயலலிதா இவர்களில் யார் முதல் வராக வரவேண்டும். என்று என்னைக் கேட்டால் ஜெய லலிதா முதல்வராக வரக்கூடாது என்றே என்பதில் வெளி வரும். கருணாநிதியே முதல்வராக வரவேண்டும் என்பதே என்பதிலின் உட்கிடக்கை என உங்களைப் போல நானும் புரிகின்றேன். ஆனால், தவிர்க்க முடியாதது, அது. கருப்பு, வெள்ளை என்ற வண்ணங்களே தமிழ்நாட்டில் உள்ளன. இடையில் சாம்பல் நிறம் தமிழ் நாட்டு அரசியலில் இல்லை.

ஒரு விபத்தின் மூலம் அரசியல்வாதியாகி, இன்னொரு விபத்தின் மூலம் முதலமைச்சரானவர் தான் ஜெயலலிதா. ராஜீவ்காந்தியின் கோர மரணத்தின் அநுதாப வாக்குகளே கொங்கிரஸ் கட்சி அறுவடை செய்யாமல் அப்படியே ஜெய லலிதாவிடம் தாரைவார்த்தது. அது மாத்திரம் நடந்திரா விடின், ஜெயலலிதா இப்போதும் முதலமைச்சராகவும் இல்லை அரசியலிலும் இல்லை. ஆனால், அதுவும் ஒரு விதத்தில் நல்லது தான். ஒரு கீரைக்கடை, புல், புழு, பூச்சி நிறைந்து அழுகல் கீரைகளை விற்றுக் கொண்டிருக்கும். அதேசமயம் ஜெயலலிதா அரசியலில் இருந்து ஒதுங்கி யிருந்தால் கருணாநிதிக்கு ஒரு மாற்று பலமானதாகவும் அமைந்திருக்கும். யார் கண்டார்கள், அது வைகோவாக வும் இருந்திருக்கலாம். அந்த அரிய சந்தர்ப்பத்தை தவற விட்டனர் தமிழ் நாட்டு மக்கள்.

சந்தர்ப்பத்தை தவறவிட்டது தமிழ் நாட்டு மக்கள் மாத் திரமல்ல, வைகோவும் கூடத் தான். நியாயமான காரணங் களுக்காக வைகோ தி.மு.க.வை விட்டு நீங்கினார் அல்லது நீக்கப்பட்டார். தன் மகனுக்கு முடி சூட்டுவதற்காக கருணா நிதியால் காட்டுக்குத் துரத்தப்பட்டவர் வைகோ. ம.தி.மு.க. வை வைகோ ஆரம்பித்தது எல்லாம் சரிதான். கறை படியாக் கரங்கள் அவருடையவை. கடும்உழைப்பு, தொண்டர்களுடன் அணுக்கம், கம்பீரம் யாவும் இணைந்து தமிழ் நாட்டை கட்டியாளக்கூடியவர் வைகோ என்ற கற்பனையை எம்மிடையே விதைத்தது. கருணாநிதி மீதான எமது அவநம்பிக்கைகளினால் வைகோ மீது பெரும்நம்பிக்கை கொண்டோம்.

வைகோ அப்படியே இருந்திருக்க வேண்டும். அதே கம் பீரத்துடன் விட்டுக் கொடுக்கா வீரத்துடன். நிச்சயமாக தமிழ் நாட்டில் மகத்தான சக்தியாக வளர்ந்திருப்பார் வைகோ. எப்போது அவர் ஜெயலலிதாவிடம் சரணாகதி அடைந்தாரோ, எப்போது அவர் எதையும் புரட்டாத ஒரு வரை புரட்சித் தலைவி என்று அழைத்தாரோ அந்தக் கணம் அவர் தமிழ் மக்களின் நெஞ்சிலிருந்து இறங்கத் தொடங் கினார். அவரது கம்பீரம் உருக்குலைந்து போனது, உண்மையில் அக்கணம் நான் நம்பினேன் நமது தேசியத் தலைவரை உச்சியில் வைத்துக் கொண்டாடுவது எல் லாம் நடிப்போ என்று. தலைவர் பிரபாகரனை புகழ்ந்த அதே வாய் தானே. ஜெயலலிதாவை புரட்சித் தலைவி என்றது.

இப்போது வைகோ இன்னும் இறங்கிப் போவதனைப் பார்க்க மிகமிக அசிங்கமாக இருக்கின்றது. "கப்டன் விஜய காந்த் நமது முதல்வர் வேட்பாளர்" என்று அறிவிக்கிறார் வைகோ. ஒரு சிங்கம் சிறு எலியின் முன் பவ்வியமாக எதிரில் குனிந்து நிற்கும் மர்மம் எனக்குப் புரியவில்லை. தம்பி பிரபாகரன் என்று ஆசை தீர அழைத்த வாய், கப்டன் விஜயகாந்த் என்று முழங்குவதைப் பார்க்கிறபோது என்னளவில் சிற்றெலியாகக் குன்றிப் போகிறார் வைகோ. அந்தக் கம்பீர மனிசனை எப்போது காண்பேன் இனி?

ஈழமக்கள் மத்தியில் கருணாநிதிக்கு இருக்கும் அவப் பெயர் இப்போதைக்கு நீங்குகிறபாடாக இல்லை. 2009 மே மாத ஈழத்தமிழர் இனப்படுகொலை நிகழ்ந்தவேளை கருணாநிதி நடந்துகொண்ட விதமே அதன் காரணம். யாவரும் சொல்கின்ற ஒரு விடயம், தனது கட்சியின் அத் தனை பாராளுமன்ற உறுப்பினர்களையும் பதவி விலகச் செய்திருக்க வேண்டும் என்பது. இந்திய மத்திய கூட்டாட்சியில் இருந்து விலகியிருந்திருக்க வேண்டும் என் பது மற்றையது. கருணாநிதியின் உண்ணாவிரத நாடகம் தான் யாவரையும் எரிச்சலும் அசூயையும் அடையச் செய்தது. தமிழ்நாட்டில் எழுந்த அனைத்துவகைப் போராட்டத்தையும் இரும்புக்கரம் கொண்டு அடக்கியமை போன்றன கருணாநிதி மீது படர்ந்த கழுவப்பட முடியாத கறை எனலாம்.

யாவற்றுக்கும் ஒற்றைக் காரணம் உண்டு. கருணாநிதி தன குடும்ப நலன்மீது கொண்ட அதீத அக்கறை.

இரவி அருணாசலம்

எழுதுவது என்னவெனில்

ஆனால் நாமும் ஒன்றை மறந்தும் மறுத்தும் விடுகி றோம். கருணாநிதி சாகும்வரை உண்ணாவிரதம் இருந் தாலும்கூட, மத்திய அரசு, சிங்கள அரசுடன் இணைந்து தமிழர் மீது இனவழிப்புப் போரை நிகழ்த்தியே இருக்கும். நாம் எமது கையாலாகத்தனத்தினை கருணாநிதிமேல் சுமத்தி ஒதுங்கிப் போகிறோம்.

மறுபுறம், இனவழிப்புப் போர் நிகழ்ந்த சமயம் ஜெய லலிதா சொன்ன ஒன்றை நாம் மறந்துவிடலாகாது. 'போர் ஒன்று நிகழ்ந்தால் பொதுமக்கள் கொல்லப்படத்தானே செய்வார்கள்' இந்த வாக்கியம் ஹிட்லர், முசோலினி போன்றோர் உரைக்கும் வாக்கியத்துக்கு ஒப்பானது. பிராமணியக் கருத்துநிலை கொண்ட ஒரு பெண்ணால் அவ்வாறுதான் உரைக்க முடியும். சோ, இந்து ராம், மாலன் போன்றோர் உரைக்கும் வார்த்தை அது. அதற்கு முன்னால் கருணாநிதி 'பாதி உண்ணாவிரதம்' இருந்தது ஒன்றும் மோசமானது அல்ல. யாவும் இருக்கட்டுமன்.

தமிழ்நாட்டின் அடுத்த முதல்வராக யார் வரவேண்டும்? வைகோவோ சீமானோ முதல்வர் ஆக வரப் போவ தில்லை. விஜயகாந்த் வரவே வேண்டாம். கருணாநிதி, ஜெயலலிதா யார் வரவேண்டும்? அல்லது யார் வரக் கூடாது? ஜெயலலிதா வரக்கூடாது என்பேன். காரணம்:

பிராமணிய சக்திகளின் கூட்டு உரு அவர்.

(தொடர்ச்சி 26ம் பக்கம்)

கி.பி.அரவிந்தனின் முதலாமாண்டு நினைவேந்தல் !

ஈழ விடுதலைப் போராட்டத்தின் முன்னோடிகளில் ஒருவரான கி.பி. அரவிந்தன் (கிறிஸ்தோபர் பிரான்சிஸ்) அவர்களது முதலாம் ஆண்டு நினை வேந்தல், முகம் கொள் நிகழ்வாக முன்னெடுக்கப்பட்டுள்ளது. சமூக அரசியற் விடுதலைப் போராளியாக திகழ்ந்த கி.பி.அரவிந்தன் அவர்கள் எழுத்து, ஊடகம், பண்பாடு, என பன்முகத்தளங்களில் ஆளுமைமிகுந்தவராக இயங்கி யவர். பிரான்ஸ் தலைநகர் பரிசில் இவரது முதலாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றிருந்தது.

நினைவு மலர், நினைவுரைகள், நினைவுத்திரையிடல், வில்லிசை, பாடல், கவிதை என பல்வகையிலும் கி.பி.அரவிந்தன் அவர்களது ஆளுமைகளை பற் கோணங்களில் வெளிக்காட்டும் வகையில் நிகழ்வு அமைந்திருந்தது.

ஆய்வாளர் பி.ஏ.காதர், புலவர் குமரன், நாச்சிமார் கோவிலடி ராஜன், குணா கவியழகன், றூபன் சிவராசா, முன்னைநாள் கிழக்குப் பல்கலைக் கழக நுண் கலைப் பீடத் தலைவர் பாலசுகுமார் ஆகியோர் உரை நிகழ்த்தியிருந்தனர். கி.பி.அரவிந்தன் அவர்களது கவிதைகளை இந்திரன் குழுவினர் பாடல்களாக இசைத்திருக்க, நாடோடிகள் எனும் சிறுகதையினை வில்லிசைக் கலைஞர் நாச்சிமார் கோவிலடி ராஜன் கதை சொல்லியாக வெளிக்கொணர்ந்திருந்தார். பிரென்சு மொழிக் கவிதைகளும் வாசித்தளிக்கப்பட்டன. இதேவேளை கி.பி.அர விந்தன் அவர்களின் நினைவாக காக்கைச் சிறகினிலே இதழ் சார்பில் முன் னெடுக்கப்பட்டிருந்த சிறுகதைப் போட்டி முடிவுகளும் இந்நிகழ்வில் அறிவிக் கப்பட்டிருந்தன.

இ. பத்மநாப ஐயர் அவர்களது வழிகாட்டுதலுடன் உலகளாவிய தமிழ் எழுத் தாளர்களான அ. முத்துலிங்கம் (கனடா), மு புஸ்பராசன் (இங்கிலாந்து), இளவாலை விஜயேந்திரன் (நோர்வே), அ. யேசுராசா (இலங்கை), ஜோ டி குருஸ் (தமிழ்நாடு) ஆகியோர் நடுவர்களாக பங்காற்றியுள்ளனர்.

பரிசில்களும், சான்றுதல்களுக்கும் தேர்வாகியுள்ள சிறுகதைகள் மற்றும் அதன் எழுத்தாளர்களது விபரங்கள் பின்வருமாறு :

முதற்பரிசு : குருவிகளின் வீடு - சாந்தினி வரதராஜன் (ஜேர்மனி) , இரண்டாம் பரிசு : ஒற்றை யானை - ஜோசப் அமுதன் டானியல் (மன்னார் முதன் - இலங்கை), மூன்றாம் பரிசு : முன்னும் பின்னும் சில நாட்குறிப்புகள் - சோ. சுப்புராஜ் (தமிழ்நாடு - இந்தியா), ஆறுதல் பரிசுகள் : ஒரு கதையும் கரு மாந்திரங்களும் - வேலாயுதம் கிருபதாசன் (நெற்கொழுதாசன் - பிரான்சு), அலு வாக்கரை - எஸ்.ஏ.உதயன் (இலங்கை), நீள் பயணம் - இராசு தம்பையா (மணி தாசன் - ஜேர்மனி)

அரங்கேற்ற மலர்கள் | விழா மலர்கள் |
அழைப்பிதழ்கள் | நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள் | தமிழ் தட்டச்சு மற்றும்
அனைத்து அச்சு வேலைகளுக்கும்....

seven | zero
graphic designers
020 7043 4310
G11, LOMBARD HOUSE | 2, PURLEY WAY | CROYDON | CR0 3JP

creative artwork from **concept to design**

கீரிமலைக் கேணி

கீரிமலைக் கேணியில் நீந்துவோர், நீந்தாதார் கூவிலடி சேராதார் என்பது அந்தக் கால தெருக்குறள். வடக்கே பாக்கு நீரிணையை எல்லையாகக் கொண்டு காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை அருகாமை உள்ளது கீரிமலை. கீரிமலைக் கேணி ஒரு வற்றாத நன்னீர் ஊற்று, சில அடிகள் தள்ளி அலைபாயும் உப்புக் கடல். கீரிமலைக் கேணி பிரசித்தி பெற்ற பண்டைய ஐந்து ஈஸ்வரங்களில் ஒன்றான நகுலேஸ்வரத் திருத்தலத்தை தன்னகத்தில் கொண்டது. மூன்று மைல் தூரத்தில் மாவிட்டபுரம் திருத்தலம், குறுக்காக கடல் எல்லையாக காங்கேசன் துறைமுகம். கீரி என்ற பிராணியின் முகத்தைக் கொண்ட நகுலமுனிவர் என்பவர் இந்தக் கேணியில் முழுகி ஈஸ்வரனை வழிபட அந்தக் கீரி முகம் நீங்கப்பெற்றதாகவும் அதனால் நகுலேஸ்வரம் என்ற பெயர் இந்த சிவன் கோவிலுக்குச் சூட்டப்பட்டதாகவும் வரலாறு கூறுகிறது.

இதேபோல் மாருதப்புரவீக வல்லி என்ற சோழ இளவரசி குதிரை முகத்தோடு பிறந்தவள், அந்தக் குதிரை முகம் நீங்கியதால் மாவிட்டபுரம் கந்தன் ஆலயத்தை சூழ 7 ஆலயத்தை கட்டுவித்தாள் என்பதும் வரலாறு. இந்தக் கீரிமலைக் கேணி தான் நாங்கள் நீச்சல் பழக குளித்து கும்மாளம் அடிக்க லீவுநாட்களில் அடிக்கடி குதூகலித்து உல்லாசமாக குளிக்க மையமாக திகழ்ந்தது. தச்சன் காட்டு சந்தியை தாண்டினால் சைக்கிளிலில் முன்னாள் இருப்பவர் பெடல் போட ஏறிமிதித்து ஏற்றத்தை கடக்க வேண்டி இருக்கும்.

நாங்கள் குளிக்கப் போகும் போது குறுக்காக கருகம்பானையூடாகவும் ஒரு பாதை இருந்தது. 768 பஸ் இலக்க வண்டிகள் யாழ்ப்பாண பட்டினத்திலிருந்து கீரிமலை நோக்கி ஒவ்வொரு மணி நேரத்திற்கும் ஒன்று போகும். எங்கள் வீட்டு முன்னாள் இவை பயணிக்கும். தனியார் வாகனங்களும் பஸ்ஸோடு வேகமாக ஓடும். விடுமுறை நாட்களில் நீண்ட லீவுகளில் யாழ்ப்பாண ஊர்களிலுள்ள பெடியள் கூட்டமாக சைக்கிளில் வருவார்கள். போகும் போது கூவில் கள்ளு உசார் வர கூவிக் கூவித் தான் வீதியில் போவார்கள். கூவில் என்பது கீரிமலைக்கு பக்கத்திலுள்ள ஊர். பனை அதிகம் கொண்ட பெரும் தோப்புகள் கொண்ட ஊர் இது. குடிசைக்கு குடிசை கள்ளுக் கொட்டில் இருக்கும். கள்ளுத் தவறணை வர முந்திய காலம் இது. சுன்னக்கற்கள் கொண்ட இந்த மண்ணில் முளைத்து நெடுத்து வளர்ந்த பனைகளில் ஊறும் கள்ளு தனி ருசியான சோம பானம் என்று ருசி கண்ட குடியாளர்கள் கூறுவார்கள். இதற்காக கீரிமலைக்கு படையெடுக்கும் இளைஞர் அணியும் அதிகம். கள்ளு உற்சாகத்தில் அவர்கள் உயர் படியிலிருந்து கேணிக்குள் குதித்து விழ கேணி ஒரு கலக்கு கலங்கும். அதிகாலை நேரத்தில் அடி மணல் தெரிய கேணி நீர் பளிங்குபோல் தெறிக்கும். மீன்கள் ஓடித் திரிவதையும் அவதானிக்கலாம்.

ஊரின் வாசம்

சுவாசிப்பவர்: **ப.வை. ஜெயபாலன்**

சிறுவயதில் நாங்கள் காலையில் தான் குளிக்கப் போவோம். தண்ணீரும் மட்டாகத் தான் இருக்கும். துவாய் மற்றும் ஒல்லித் தேங்காயோடு சைக்கிளில் அண்ணாமார், பக்கத்து வீட்டுப் பெடியளோடு கீரிமலைக்குப் போவோம். இடுப்பில் ஒல்லித் தேங்காய் தொங்க குளத்துக்குப் போய் நீந்தப் பழகுவோம். ஆரம்பத்தில் அண்ணார் உதவி செய்வார். சற்று நேரத்திற்குப் பின்னர் இடுப்பிலிருக்கும் ஒல்லித் தேங்காயை எடுத்து விடுவார் பயத்தில் கொஞ்சம் கொஞ்சமாய் நீந்தப் பழகுவோம்.

கீரிமலை குளத்தின் நீளம் 50 யார் அளவு தான் இருக்கும். அகலம் 35 யார், பெரும் சுவருக்கு மறுபக்கம் பெண்களுக்குரிய கேணி. ஆண்கள் கேணிக்கு சின்னத்துரை அண்ணார் தான் வாச்சராக இருந்தார், பெண்கள் கேணிக்கு அவர் மனைவி தான் வாச்சர். ஆள் நல்ல கறுவல், அரைக்கை சேட்டுடன் தன் பெரிய வண்டிக்கு மேல் சாரத்தை மடித்துக் கட்டிக் கொண்டு சின்னத்துரை அண்ணார் கேணியை கண்காணிப்பார். பெடியல் அத்துமீறினால் மட்டும் தான் தலையிட்டு நிறுத்துவர். கலங்கி தண்ணீர் கேணியில் அழுக்கானால் துருசை கழட்டி கேணி நீரை கடலுக்குள் விடுவார். துருசுக்கும் கடலுக்குமிடையே ஓடையாக இருக்கும் பகுதியில் சின்னபெடியளை பெற்றோர் குளிப்பாட்டுவார்கள்.

இரண்டு அரை அடி தண்ணீர் தான் அதிலிருக்கும். துருசுக்கு பக்கத்தில் தான் நகுல முனிவர், சோழ அரசி நாரதபுரகவள்ளி ஆகியோரின் சிலைகள் இருந்தன. 1968இல் அமைச்சரான பிரேமதாச கீரிமலைக் கேணிக்கு சின்ன இளைப்பாற கட்டிடம் ஒன்றை கட்டிக் கொடுத்தார். தானே வந்து திறந்தும் கொடுத்தார். சுற்ற வர மணல் பரவல், பழைய கால தடித்த பருமனுள்ள பூவரச மரங்கள் சுற்ற வர நிறைய இருந்தது. நிழல் வந்து கொண்டிருந்தது. அப்பால் அந்தியெட்டி மடம். ஒரு மைல் தள்ளித் தான் கடற்கரைப் பக்கம் கீரிமலைச் சுடலை. எதிர்ப் பக்கத்தில் கேணியை விட்டு வெளியே வந்தால் ஒரு பிள்ளையார் கோவில். 3-4 தேநீர்க் கடைகள். அந்தப் பக்கத்தில் மரக்கறிக்கடை, பஸ் நிலையம் இடையே சிறாப்பர் மடம், நடுவே நகுலேஸ்வரர் கோவில் எல்லாம் இருந்தன, இருக்கின்றன.

கூவில் கள்ளோடு உசார் காணாது என்று நினைப்போர், வியாழி அக்காவின் கடைக்கு உள்ளே போய் வெளியே வரும்போது முகத்தைக் கூனிக் கொண்டு தோள்த் துண்டால் வாயைத் துடைத்துக் கொண்டு வருவார்கள். வந்த உடனேயே தானாக உசார் புகும். பழைய சினிமாப் பாடல்கள் அவர்கள் வாயில் ஒலிக்கும். சிறாப்பர் மடத்தில் ஒரு சிறிய மண் பாண்டத்தில் மோர்த் தண்ணீர் எந்த நேரமும் இருக்கும். அதில் படுத்து ஆற பெரிய விறாந்தைகள், திண்ணைகள் இருந்தன. விசேட நாட்களில் அன்னதானமும் அங்கு நடக்கும். ஆடு, மாடு தண்ணீர் குடிக்க சிறாப்பர் மட வெளிச்சுவருக்குக் கீழே தண்ணீர் துறவும் பெரியளவில் கட்டப்பட்டிருந்தது. கேணியில் சுமார் இரு மணி நேரமாகக் குளிப்போம். குளித்து முடிய அருகேயிருக்கும் குளக்கட்டில் கல் வைத்து காற்றில் பறக்காமல் இருக்க வைத்த துவாயால் துடைத்து வெளிப்பிள்ளையார் கோவிலுக்கு வருவோம். அதில் கல்லில் சந்தனக் கட்டையை தண்ணீர் அரைத்து பொட்டு வைத்து கும்பிட்டால் தான் கீரிமலைக்கு போன அடையாளம். அருகே சைவ அய்யர்மாரின் தேனீர்க்கடை. உள்ளே போய் தேனீர் வடை என்று சாப்பிட்டு விட்டு வெளியே கடலைக் காரரிடம் பால்ப் பேணிக் கணக்கில் கடலை, கோதோடு கச்சான், சோழம் என்று சீமெந்துப் பையில் அதை வாங்கிக் கொண்டுவீட்டுக்குஎடுத்துக்கொண்டுபோவோம். இன்னும் கொஞ்சம் கிள்ளிப் போடம்மா என்று சொன்னால் போட்டுத் தருவார்கள்?.

வீட்டுக்கு சைக்கிளில் வர நல்ல களைப்பு களைக்கும். சுடச்சுட கறிசோறு அம்மா சமைத்து வைத்திருப்பார். குசினிக்குள், நாலு சகோதரர்களாக பலகையில் இருந்து ஒரு பிடிபிடித்து எழும்புவோம். குளித்த களை சாப்பிட்டவுடன் ஒரு தூக்கம் வரும். தூங்கி எழுந்து அம்மா கையால் மூக்குப்பேணியில் தேநீர் வாங்கிக் குடித்தால் உடம்பில் சூடு பறக்கும். அந்தக் கேணி, பூவர நிழல், சந்தனப் பொட்டு, சிறாப்பர் மட மோர் எல்லாம் போனது போனது தான்.

ஆனாலும் அந்த நினைவுகள் இன்றும் நெஞ்சில் இனித்துக் கொண்டு தான் இருக்கின்றது.

ஆழிசூழ் தீவின் அரசியல் - சமூகம் - பண்பாடு

ஓரினத்தை அழிக்கும் யுத்தத்தில்
சுற்றி வளைக்கப்பட்ட களமொன்றில்
ஈற்றில் நஞ்சை ஆயுதமாக்க
உயிரை வேலியாக நிலத்தில் ஊன்றி
தடுத்து நின்றனர் போராளிகள்

வெற்றியடைந்த எண்ணற்ற
சமர்களின் கதைகளை
அலங்கரிக்கும் கனவு வீரர்களின்
கருணையான முகத்தை
அன்புறைந்த வார்த்தைகளை
சனங்களுக்காய் களமாடும் வீரத்தை
கடக்க முடியா நஞ்சு

தன்னலமற்று நஞ்சருந்திய
போராளிகளின்
கனவுகளால் பச்சை நிறமானது
நிலம்.

பொறிக்குள் வைக்கப்பட்டிருந்த
எல்லா வகையான
தந்திரங்களையும் முறியடிக்க
நெடுநேரம் போராடினார்
சூழ்ச்சியால் அபாயமாக்கப்பட்ட
நஞ்சு வலயத்தில் காற்றுக்குத்
தவித்தனர் குழந்தைகள்

மரணத்தின் நிழல் வீசியது எங்கும்

பறவைகள் முட்களுக்குள் மாட்டுண்டு
துடிப்பதுபோல
குழந்தைகள் கிடங்குகளில் விழுந்து
மீள முடியாது தவிப்பதுபோல
மான்குட்டிகள் பொறிக்குள்
பரிதாபமாக சிக்குண்டு
உயிரை இழப்பதுபோல
நஞ்சுக் குண்டுகள் எல்லாவற்றையும்
உறிஞ்சியது

உயிர்கள் எரிய
காடு துடித்தது.

நஞ்சுப் பொறியில் நிலம்
அகப்பட்டிருக்க
கனவு நிரம்பிய விழிகளோடிருந்த
குழந்தைகளுக்கு
நஞ்சை பருக்கையில்
அதை தாமருந்தினர் கனவு சுமந்த
போராளிகள்

கனவு மிகுந்த புன்னகையில்
இலட்சியம் நிறைந்த பார்வையில்
விடுதலையின் பேராவலில்
வளர்த்தெடுக்கப்பட்ட வீரத்தில்
சூழ்ச்சியால் வீசப்பட்ட நஞ்சு
நனைத்தது உடலை மாத்திரமே

– தீபச்செல்வன் (04/2010)

அனைவருக்கும் இனிய சித்திரைப் புதுவருட நல்வாழ்த்துக்கள்!

SRI KANTH & CO SOLICITORS

We practise in the following areas of law:

- Immigration
- Wills & Probate
- Conveyancing - Residential
- Conveyancing – Commercial
- Landlord & Tenant
- Property Sale & Letting
- Liquor Licensing
- Matrimonial / Family
- Employment Matter
- Consumer Problems
- Civil Litigation
- Housing Matters
- Welfare Matters

557 High Road, Wembley, Middlesex, HA0 2DW
www.srikanthsolicitors.co.uk
Tel: 020 8795 0648 Mob: 07831 195 979
Fax: 020 8795 0649

Science Tuition

Cambridge Exam board Examiner, 15 years Experience in teaching

- GCSE - Biology, Chemistry, physics
- GCE A/L - Chemistry
- KS3 - Science (Year 6 to Year 9)
- 11 Plus Exam Preparations
- Exam preparation
- Pass Paper classes
- Mock Exam and Evaluation



Place: 180C Cranbrook Road IG1 4LX
Day: On Sundays, Please call for time and Places

Dr R Prabaharan BSc (Hons), PhD (UK), MRSC
Tel: 07904 653 968

வற்றாது எம் வன்மம்!

சில நினைவுகள் நம் வாழ்நாளில் மறக்க முடியாததாக மாறிவிடும். பிஸ்கெட் சாப்பிட்டபடி அமர்ந்து வெறித்து பார்க்கும் பாலச்சந்திரனின் கண்கள்.. முத்துகுமாரின் கடிதம்.. கர்ப்பிணி தாயின் வயிறு கிழிந்து வெளியே தொங்கும் சிசுவின் கால்பாதங்கள் என்று மங்காத சில நினைவுகள் எனக்குண்டு.

அதில் ஒன்று மே 19 அன்று வெளியான தினத்தந்தியின் இந்த முதல் பக்கம். முதல் பக்கத்தில் இரண்டே இரண்டு முக்கியச்செய்திகள் இடம் பெற்றிருந்தன. இரண்டுமே தமிழினத்திற்கு மறக்க முடியாத செய்திகள்.

பிரபாகரன் உள்ளிட்ட முக்கிய தளபதிகளின் வீர மரணத்தை சொல்லும் செய்தி தலைப்பு செய்தியாக இடம்பெற்றிருந்தது. முள்ளிவாய்க்காலில் ஒரு இனத்தின் பெரும் கனவு கலைக்கப்பட்ட செய்தி அது.

அதற்கு கீழ் ஒரு செய்தி இருக்கிறது. அது அந்த இனத்தின் பெரும்கனவு கலைக்கப்பட துணை நின்றதற்காக கிடைக்கப்போகும் எலும்பு துண்டை பொறுக்க குடும்பத்துடன் டெல்லி சென்ற ஒரு ஈனத்தலைவனின் பதவி வெறி பற்றிய செய்தி.

ஆளும் கட்சிக்கு ஏற்ப மாறிக் கொள்வதுதான் தினத்தந்தியின் பாலிஸி என்று பொதுவாக தினத்தந்தி குறித்து சொல்வார்கள்.

ஆனால் தமிழின வரலாற்றில் முக்கியத்துவம் பெறும் இவ்விரு செய்தியையும் முதல் பக்கத்தில் வெளியிட்டதற்கு அப்போதைய தினத்தந்தியின் செய்தி ஆசிரியரின் மன உணர்வுகள் முக்கிய காரணமாக இருக்கும்.

ஒரு இனம் அழிக்கப்பட்டு நிற்கும்போது பதவிவெறிக் கொண்டு டெல்லியில் முகாமிட்ட கருணாநிதியை அம்பலப்படுத்த தனக்கு கிடைத்த வாய்ப்பாக இந்த செய்தியை முதல் பக்கத்தில் பயன்படுத்தியிருப்பார் என்று நான் உறுதியாக நம்புகிறேன். தினத்தந்தியின் இந்த முதல் பக்கம் ஒரு வரலாற்றுச்சுவடு.

ஆண்டுகள் கடந்துவிட்டால் கருணாவின் கண்ணீர் நாடகங்கள் எல்லாம் மறந்துபோகுமா என்ன.

என்ன செய்தாவது போரை நிறுத்திவிட முடியாதா என்று ஒவ்வொருவரும் ஏங்கி தவித்த போது, கண்ணீர் அஞ்சலி.. மனிதசங்கிலி என்றெல்லாம் நடித்துப்பார்த்தும் முடியாமல் முதுகு வலி என்று மருத்துவமனைக்குள் ஓடி ஒளிந்து கொண்ட கபட நாடக நயவஞ்சகர் கருணா அவர்களே.. கவலைப்படாதீர்கள்.. உங்களை அத்தனை எளிதில் தமிழர்கள் நாங்கள் மறந்துவிட மாட்டோம்.

எந்த நாற்காலிக்காக எமது இனத்தை பலி கொடுத்தீர்களோ.. அந்த நாற்காலி உமக்கு எத்தனை கடைசித் தேர்தல் வந்தாலும் கன வாகவே போகும்.

பலரும் என்னை நோக்கி வைக்கும் குற்றச் சாட்டு கருணாநிதியை அதிகம் விமர்சிக்கிறேன் என்பது. உண்மைதான்..

நள்ளிரவு இரண்டு மணிக்கு மூலகொத்தளம் சுடுகாட்டில் எரிந்து கொண்டிருந்த முத்துகுமார் உடலின் வாசனையை நுகர்ந்து கொண்டிருந்த போது எடுத்த முடிவு அது. என் கோடுகள் இருக்கும் வரை வற்றாது அந்தவன்மம்

- கார்ட்டூனிஸ்ட் பாலா (2-4-16)

எப்படியிருக்கிறார்..

(11ம் பக்கம் தொடர்ச்சி)

அறிக்கையில், "எல்.ரீ.ரீ.ஈ. போராளிகளுக்கு புனர்வாழ்வு வழங்கப்படுகின்றது" என்ற தலைப்பின் மேலான புகைப்படத்தில் ஜெயக்குமாரி அக்காவின் இளைய மகன் இடம்பெறுகின்றான் என்கிறார். உடனடியாகவே அந்தப் புத்தகத்தையும் எடுத்து வந்து காட்டுகின்றார். அவர் காட்டும் படமும், வீட்டில் வைத்திருக்கும் படமும் முகச்சாயலளவில் ஒத்துப்போகின்றது. "எனக்கு இவ்வள அநீதி நடந்திருக்கு. இதுக்கெல்லாம் இந்த அரசாங்கமும் ஒரு தீர்வு தராதா எண்டு அண்டைக்கு சிறீதரன் எம்பியிட்ட கேட்டன். அது போனது போனதுதான். வராதாம்."

"இப்ப எனக்கு நடக்கவே முடியாதளவுக்கு நோய்வாய்ப்பட்டிருக்கிறன். முன்னம்போல எந்த வேலையும் செய்ய முடியேல்ல. அதுக்குள்ள கூப்பிடுற நேரமெல்லாம் கொழும்புக்கும், பதவியாவுக்கும் வழக்குக்கு வேற போக வேணும். கொழும்பில பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ வழக்கு நடக்குது" இனியும் ஏன் பயங்கரவாதத் தடைச்சட்டம்"

"பதவியா வழக்கு ஏன் நடக்குது, என்ன கதைக்கிறாங்கள் எண்டே எனக்குத் தெரியேல்ல. ஏதோ வெடிபொருள் எடுக்கிற சாமான கெப்பற்றிக்கொல்லாவயில வச்சி நான் கள வெடுத்திட்டன் எண்டு பிடிச்சாங்கள். அது என்ன எண்டே எனக்குத் தெரியாது. என்னைய மட்டும் ஏன் இப்பிடி சோதிக்கிறாங்கள்"

"இப்ப எல்லாம் யாரும் கதைக்கக் கூடப் பயப் பிடுகினம். போன்ல கதைக்கக்கூட பயப்பிடுகினம். வீட்டுக்கு வரவே ஆக்கள் பயப்பிடுகினம். முதல் உதவி செய்தவ எல்லாம் இந்தப் பிரச்சினைக்குப் பிறகு பாங்குக்கு (வங்கிக்கு) காசு போடக்கூட பயப்பிடுகினம். எனக்கு உதவிசெய்தா தங்களுக்கு பிரச்சினை வரும் எண்டு சொல்லுகினம். எனக்கு உதவி வேணும் தம்பி." நோய் - வறுமை - வெறுமை - களைப்பு - சலிப்பு - விரக்தி - துயரம் - ஏமாற்றம் என அனைத்து இடர்களோடும் போரிட்டுத் தோற்ற மனதோடு தன் வீட்டு தகரக் கதவடி வரைக்கும் கதைத்துக்கொண்டே வருகிறார் ஜெயக்குமாரி அக்கா.

தமிழ்நாட்டின்..

(24ம் பக்கம் தொடர்ச்சி)

எதேச்சதிகாரி. தமிழ்த்தேசியத்தின் முக்கிய எதிர்சக்தி. பெரும் ஊழல்வாதி. ஜனநாயக அரசியலைக் காலில் போட்டுமிதிப்பவர். மக்கள் வழங்கும் நம்பிக்கைக்குத் துளியும் பொறுப்பாளி ஆகாதவர். பிராமணிய சக்திகளைத் தவிர வேறெவரையும் மதியாதவர். மத்திய அரசாங்கத்துடன் போராடியோ ஒத்துழைத்தோ தமிழ் நாட்டுக்கான உரிமைகளைப் பெறாதவர். பொதுமக்கள் மீது கிஞ்சிற்றும் அக்கறை அற்றவர். மக்களின் மூடநம்பிக்கைகளையும் சீரழிவுக் கலாசாரங்களையும் நிறுவனரீதியாக வளர்ப்பவர். கட்சியில் திராவிடத்தின் பெயரை வைத்துக்கொண்டு திராவிடத்திற்கு எதிரான பணி புரிபவர். 'தான்' எனும் தனிஒருத்திக் காகவே 'இந்த உலகம்' எனும் இறுமாப்புக் கொண்டவர். மேலாக, அனைத்து மக்கள் திரளுக்கும் மேல் அடக்குமுறையினை ஒடுக்கு முறையினை ஏவி விடுபவர்.

இனியும் அவர் முதல்வரானால் இந்தக் குற்றச்சாட்டுக்கள் இன்னும் பன்மடங்காகப் பெருகும்.

இந்தக் குற்றச்சாட்டுக்களில் பல கருணா நிதிக்கும்பொருந்துகின்றன. கவனியுங்கள், முழுமையும் அல்ல் பல என்றே சொன்னேன். அப்போ யார் முதல்வராக வரவேண்டும் ?

பதட்டப்படாத என் பதில் இதுதான்: கலைஞர் கருணாநிதி.

- மண் -

என்னை
என் மண்ணில்
புதைத்தாய்..

பகைவனே

என் மண்ணை எங்கே
புதைப்பாய்

காசி ஆனந்தன்

BRITISH TAMIL CHAMBER OF COMMERCE

Proudly Presents with nachiyar events

Official Partner

London Tamil Market 2016

Lebara

Sponsors

LINKS LEGAL SOLICITORS

RUBY'S CATERING

CARLTON LEISURE Worldwide Travel & Tours

Official Media Partner IBC தமிழ்

TAMIL SHOPPING AND ENTERTAINMENT FESTIVAL

APRIL 09th & 10th | 10:00 AM - 8:00 PM

சித்திரைத் திருவிழா விசேட விலைக் கழிவுகள்!
இரு நாட்களும் கோலாகல வர்த்தகப் பெருவிழா!!

- ஒரே கூரையின் கீழ் முதலீட்டாளர்களையும் வாடிக்கையாளர்களையும் சந்திக்கும் அரிய வாய்ப்பு
- 150 க்கும் மேற்பட்ட தமிழ் வர்த்தக நிறுவனங்கள் பங்குபற்ற உள்ளனர்
- 8000 க்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொள்ள உள்ளனர்
- தமிழ்க் கலைஞர்கள் வழங்கும் குதூகல கொண்டாட்டம்
- விசேட மலிவு விற்பனை நடைபெற உள்ளது
- சிறுவர் கொண்டாட்ட விளையாட்டுக்கள்

Raffle Ticket for 2 Days Sponsored by

SUGUN sugun.mobi
alpha alphatelecom.co.uk
£250
சமகளம் samakalam.com
Tamil Diplomat tamildiplomat.com
£250
cartec Graphics cartecgraphics.com

Free Gifts to Kids (10am-11am) | Free Parking | Free Transport

Between LTM Venue and Harrow-on-the Hill Station

Byron Hall, Harrow Leisure Centre, Christchurch Avenue, Harrow HA3 5BD

Tel: 0207 706 1122 , 0208 885 2933 Mob: 079 6658 0977, 079 5184 7840

Fund raised through the ticket sale goes towards supporting our Charitable Partners

வாழ்க்கைத் துணை

இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக **ஒரு பேப்பர்** நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பி வையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பிரித்தானியா:
Tel: 020 7043 4315
Fax: 020 7043 4312

கனடா:
Tel: 647-724-4188
Fax: 416-438-7855

email: **info@orumanam.com**

மணமகள் தேவை

1. 54 வயது, 5’9’’ Divorced, German citizen, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 2835.

2. 29 வயது, 5’6’’ work permit visa Graduate engineer, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 2837.

3. 50 வயது, 5’10’’ British citizen, Divorced, Graduate working as a research scientist in central london, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 2838.

4. 26 வயது, 5’10’’ british citizen, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 2843.

5. 38 வயது, 5’6’’ Temporary visa, Living in France, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 2850.

6. 32 வயது, 5’5’’ British citizen, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 2851.

7. 34 வயது, 5’8’’ Born & brought up in UK. Doctor, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5805.

8. 36 வயது, 5’6’’ Work permit, Finished master degree, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5396.

9. 50 வயது, 5’9’’ Norway citizen, Graduate working in a company as a sales executive, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5781.

10. 32 வயது, 5’7’’ British citizen, graduate, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5783.

11. 26 வயது, 5’6’’ British citizen, Working in a company as a Manager, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5784.

12. 34 வயது, 5’4’’ British citizen, Finished degree in computer engineer working as an accounts manager, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5788.

13. 28வயது,5’10’’Graduate,Working as a software engineer, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5789.

14. 39 வயது, 5’5’’ British citizen working as a electronic engineer, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5793.

15. 30 வயது, 6’0’’ British citizen, RC, Working as compliance & development manager for a company, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5735.

16. 39 வயது, 5’6’’ Temporary visa, Living in France, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5768.

17. 31 வயது, 5’8’’ Temporary visa, Finished MSc in Software Engineering, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5132.

18. 35 வயது, 5’1’’ Temporary visa, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5766.

19. 27 வயது, 5’8’’ Born & brought up in Uk. Graduate working as a Medical sector, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5771.

20. 31 வயது, 6’1’’ Divorced, Born & brought up in UK. Graduate in Bsc & Msc. working as a senior transport planner, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5772

21. 32 வயது, 5’7’’ Temporary visa, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5769.

22. 28 வயது, 5’9’’ work permit visa, graduate, working as an IT sales executive, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5777.

23. 48 வயது, 5’0’’ Divorced, Living in colombo, working in a press, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5729.

24. 33 வயது, 5’3’’ Temporary visa, graduate in electrical & electronic engineer, working as a engineer, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5472.

25. 36 வயது, 5’7’’ British citizen, Divorced, Doctor, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5780.

26. 50 வயது, 5’5’’ British citizen, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5738.

27. 34 வயது, 5’7’’ Graduate in Bsc & Msc (Business & information), தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5739.

28. 34 வயது, 5’9’’ Business visa working as an IT Consultant, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5743.

29. 32வயது,5’9’’PR.GraduateinMsc working in a project manager construction company as a civil engineer, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5746.

30. 37 வயது, 5’6’’ Temporary visa, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5749.

31. 32 வயது, 5’9’’ British citizen, working in a supermarket, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5181.

32. 47 வயது, 6’0’’ British citizen Machine operator working in a company, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5334.

33. 31 வயது, 5’6’’ British citizen. Doctor, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5406.

34. 33 வயது, 5’6’’ Work permit Graduate in Bsc computer science, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5753.

35. 29 வயது, 6’0’’ student visa Graduate, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5721.

36. 44 வயது, 5’11’’ Divorced self employed, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5725.

37. 44 வயது, 5’8’’ British citizen Graduate Now working in Investment bank as an Accountant, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 4558.

38. 46 வயது, 5’8’’ MBA holder Divorced working as a representative marking, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 3856.

39. 35 வயது, 5’8’’ British citizen, Divorced, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5718.

40. 29வயது,5’5’’Born&broughtupin Uk, Graduate working as an Electronic engineer, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5498.

41. 31வயது,5’6’’GraduateEngineer, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5694.

42. 33வயது,5’7’’Studentvisaworking in a Business establishment, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5697.

43. 37 வயது, 5’6’’ British citizen working as a self employee, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5699.

44. 35 வயது, 5’7’’ British citizen Graduate working as a management sector in retails, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5701.

மணமகன் தேவை

1. 39 வயது, 5’1’’ Born & brought up in Uk, Graduate in Msc, working as a medical sector, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 2070.

2. 32 வயது, 5’4’’ Born & brought up in Uk. Graduate, Accountant., தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 2834.

3. 25 வயது, 5’5’’ British citizen, Graduate, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 2845.

4. 25 வயது, 5’6’’ born & brought up in Uk, Doctor, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 2848.

5. 33 வயது, 5’4’’ Divorced, Work permit, Graduate, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5798.

6. 37 வயது, 5’6’’ MBA & CIMA qualified accountant, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5799.

7. 32 வயது, 5’3’’ British citizen as a Lawyer, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5801.

8. 26 வயது, 5’2’’ British citizen, Graduate in accounts & finance, working as an accountant, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5803.

9. 30 வயது, 5’4’’ born & brought up in uk, Doctor, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5806.

10. 28 வயது, 5’6’’ British citizen, medical student final year, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5807.

11. 33 வயது, 5’2’’ British citizen, graduate in financial economic, working in property, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 4483.

12. 29 வயது, 5’2’’ European citizen, Doctor, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5809.

13. 26 வயது, 5’2’’ British citizen, graduate in Bsc clinical science. Working in a high school as a letting supervisor, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5808.

14. 26 வயது, 5’4’’ Born & brought up in uk, Graduate, working in a pharmaceutical company as a laboratory technician, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5530.

15. 26 வயது, 5’3’’ Born & brought up in Uk, Graduate Lawyer, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5785.

16. 32 வயது, 5’2’’ British citizen, Doctor, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5786.

17. 36வயது,5’0’’Born&broughtupin UK, Graduate in maths & computing. Working in a Investment Bank, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5790.

18. 25வயது,5’6’’Born&broughtupin Uk. Studied in a leading girls private school. Graduate in Biomedical. Now working as an acting manager, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5778.

19. 33 வயது, 5’3’’ British citizen, Graduate Bsc in IT, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5796.

20. 42 வயது, 5’5’’ Widowed, British citizen, Working as a teacher, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5797.

21. 35 வயது, 5’6’’ British citizen, Doctor, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 3423.

22. 45 வயது, 5’5’’ Finished degree in CEMA & MBA. Working as an accountant, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5757.

23. 26 வயது, 5’0’’ Born & brought up in Canada, graduate Now studying achieve maths, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5758.

24. 23 வயது, 5’4’’ British citizen, Graduate in finance working as a financial sector, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5435.

25. 31 வயது, 5’5’’ British citizen, Doctor, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5761.

26. 42 வயது, 5’8’’ Divorced, British citizen, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5774.

27. 28 வயது, 5’5’’ working in Singapore, Graduate in BSc, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5779.

28. 29 வயது, 5’3’’ DLR visa, graduate in Bsc maths Now studying Msc, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 282.

29. 30 வயது, 5’3’’ British citizen, Graduate working as a podiatrist in NHS. Christian (catholic), தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5400.

30. 31 வயது, 4’10’’ Divorced, British citizen Studying Nurse, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5731.

31. 26 வயது, 4’9’’ British citizen Graduate in Biomedical science working as a Lab technician, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5736.

32. 26 வயது, 5’4’’ British citizen Finished Bsc working in a headquarter as a IT support, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5748.

33. 23வயது,5’4’’Born&broughtupin UK. Lawyer, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5752.

34. 26வயது,5’4’’ Living in Sri Lanka, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5722.

35. 39 வயது, 5’4’’ Divorced, Living in Norway medical sector, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5723.

36. 26வயது,5’6’’Bornandbroughtup in UK, Graduate in Bsc & Msc. Working as a pharmacist, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5728.

37. 25 வயது, 5’3’’ British citizen Accountant now doing chartered accountant, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5730.

38. 31வயது,5’2’’Finished diploma in Preschool, Now working as a teacher, Living in sri lanka, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5705.

39. 29 வயது, 5’2’’ British citizen Graduate in Msc. Now studying Phd, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5710.

40. 29 வயது, 5’2’’ British citizen, Doctor, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5719.

41. 29 வயது, 5’4’’ British citizen, graduate working as a Finance project manager, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5720.

42. 26 வயது, 5’2’’ British citizen working as a Lawyer, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5693.

43. 22வயது,5’1’’ Living in Sri Lanka, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5695.

44. 29வயது,5’3’’Born&broughtupin UK, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5698.

45. 30 வயது, 5’4’’ Born in Germany brought up in Uk Graduate in Bsc. Now studying in medicine, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5700.

46. 29 வயது, 5’6’’ British citizen. Christian working as a Child care, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5505.

47. 29வயது,5’2’’ Living in Sri Lanka. working as a accountant, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5704.

48. 34வயது,5’4’’ British citizen graduate in Bsc mathematical computing. Working as a accountant, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5504.

49. 38 வயது, 5’5’’ British citizen, Doctor Consultant, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5673.

50. 33 வயது, 5’5’’ British citizen Doctor, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5677.

51. 25 வயது, 5’4’’ Born and brought up in UK, Finished degree in Sociology Bsc, Now working as a teacher, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5679.

52. 30 வயது, 5’2’’ British citizen Finished degree in Biomedical science and human resource, Now working as a administrator, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5680.

53. 30 வயது, 5’6’’ Born and brought up in Uk. Doctor Specialist, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5681.

54. 28 வயது, 5’6’’ Born & brought up in Uk. Doctor, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5683.

55. 35 வயது, 5’5’’ Born & brought up in Uk. Doctor consultant, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5688.

இணையத்தில் மேலதிக விபரங்கள்
www.orumanam.com

பிறக்கிறது துன்முகி!

(கலியுகம் 5118)



மாசிலாமணி

(ஒரு பேப்பருக்காக)

வருகிற சித்திரை முதலாம் திகதி துன்முகி ஆண்டு பிறக்கிறது. மாதத்தின் முதலாம் திகதிதான் ஆண்டுப்பிறப்பு என்பது ஒரு மாறாத, திடமான கூற்று. சித்திரை முதலாம் திகதி எப்போ என்பதில் எமக்கு ஒரு குழப்பத்தை ஏற் படுத்தி உள்ளார்கள் சில குழப்பவாதிகள். நாட் காட்டிகளைப் பாருங்கள். சிலவற்றில் ஏப்ரல் 13ம் திகதி புதன் கிழமையை சித்திரை ஒன்று என் கிறார்கள். சிலவற்றில் ஏப்ரல் 14ம் திகதி வியாழக் கிழமையை சித்திரை ஒன்று என்கிறார்கள். தமிழில் ஒரு பழமொழி உள்ளது. கையாலாகா தவன் பெண்டாட்டி..... வைப்பாட்டி என்று. அந் தளவுக்கு எமது ஆண்டுப்பிறப்பை நிர்ணயிக்க முடியாதளவு கையாலாகாத நிலையிலா உள் ளது எமது பாரம்பரியம். ஆண்டு என்றால் என்ன வென்று முதலில் பார்ப்போம் பின் நிதார்த்த மாகச் சிந்தித்து, எதிர்காலத்தில் இப்படியான சீர்கேடு ஏற்படுத்து பவர்களை விரட்ட வேண் டுமா இல்லையா என்பதை நீங்களே முடி வெடுங்கள்.

உலகில் ஆண்டுகள் பலவகை இருந்தாலும் சந்திரனின் சுற்றுக்களை மையமாக வைத்து கணிக்கப்படும் சந்திர ஆண்டு ஒன்றைத் தவிர மற்றைய எல்லா ஆண்டுகளும் பருவ காலங் களுக்கு ஒப்பவே கணிக்கப்படுகின்றன. எங்கள் ஆண்டை நாங்கள் தமிழ்ப் புத்தாண்டு என்று சொன்னாலும் அதை விண்மீன் சம்பந்த ஆண்டு என்று (வேதசோதிட ஆண்டு என்றும் அழைப்பு துண்டு) அழைப்பதே சிறந்த முறையாகும். உண்மையில் கதிரவனைத்தான் பூமி வலம் வருகிறது. எங்கள் கண்களுக்கோ கதிரவன் தான் பூமியைச் சுற்றுவதுபோல் தென்படுகி றான். புவியின் நடுக்கோட்டுக்கு அண்மையில் வாழ்ந்த எமக்கு, எமது தலைக்கு மேலே உள்ள வான் வட்டத்தில், (வட்டம் என்றாலே 360 பாகை என்பதை நாம் மறக்கக் கூடாது) அதன் ஒரு புள்ளியிலிருந்து தன் பயணத்தை தொடங் கும் கதிரவன் மாதம் 30 பாகையாக ஒரு ஆண் டில் 360 பாகையை அல்லது ஒரு வட்டத்தைச் சுற்றி புறப்பட்ட இடத்திற்கே திரும்பவும் வந்த டைகிறான். இதுவே ஒரு தமிழ் ஆண்டு. வானில் உள்ள புள்ளிகளை மையமாக வைத்துக் கணிக் கப் படுவதாற்றான் இதற்கு விண்மீன் சம்பந்த ஆண்டு என்ற பெயர் வந்தது.

கதிரவன் கிழக்கே தோன்றி மேற்கே மறை வதை நாளாந்தம் நாம் காண்கிறோம். ஆனால் அவன் ஒவ்வொரு மாதமும் ராசிகள் ஊடாக 30 பாகை கிழக்கு நோக்கி வருவதை பலர் தெரியாத வர்களாக உள்ளனர். இதைக் காண விரும்புவர் கள் ஒரு நாளில் கதிரவன் மறைந்ததும் 30 பாகை உயரத்தில் உள்ள நட்சத்திரங்களை அவதா னித்து வையுங்கள். ஏன் முப்பது பாகை உயரத் தில் என்று கூறுகின்றேன் என்றால் அடிவானம் தெளிவாகத் தெரியாது. 30 பாகையில் உள்ள நட்சத்திரங்களை அவதானிப்பது எளிதாக இருக்கும். அதேபோல் ஒரு மாதம் கழித்து கதிர வன் மறைந்ததும் அதே 30 பாகையில் வானத் தைப் பார்ப்பீர்களானால் கதிரவன் 30 பாகை கிழக்கு நோக்கி நகாந்த காரணத்தினால் அடுத்த ராசியின் நட்சத்திரங்களே உங்கள் கண் களுக்குத் தெரியும். இப்படித் தொடர்ந்து பார்த்து வந்தால் ஒவ்வாரு ராசியிலும் உள்ள நட்சத்திரங்கள் உங்களுக்கு வாய்பாடமாக வந்துவிடும். எடுத்துக்காட்டிற்கு பஞ்சாங்கம் பார்க்காமலே சந்திரன் நிற்கும் ராசியைப் பார்த்து அன்றைய நட்சத்திரம் என்னவென்று என்னால் கூற முடியும்.

ஒவ்வொரு 30 பாகையும் ஒவ்வொரு ராசியாக வகுக்கப் பட்டுள்ளது. 12 ராசிகள் உள்ளன. 0 பாகையிலிருந்து 30 பாகை வரையுள்ள பகு தியை மேட ராசி என்றும் 30 பாகையிலிருந்து 60 பாகை வரை உள்ள பகுதியை இடபராசி என்றும் மிகுதி உள்ள 10 பகுதிகளையும் முறையே மிது னம்(60-90), கற்கடகம் (90-120), சிங்கம் (120-150) கன்னி 150-180) துலாம் (180-210) விருட் சிகம் (210-240) தனு (240-270) மகரம் (270-300) கும்பம் (300-330) மீனம் (330-360) என்றும் வகுத்துள்ளார்கள். சைபர் பாகையும் 360 பாகை யும் ஒன்று என்பதை நான் சொல்லத் தேவை இல்லை.

இந்தப் 12 ராசிகளுள் ஒவ்வொரு ராசிக்குள் ளும் இரண்டேகால் நட்சத்திரங்கள் என்ற ரீதி யில் 27 நட்சத்திரங்களையும் அடக்கியுள்ளார் கள். அச்சுவி, பரணி, கார்த்திகையின் முதல் பாதம் மேட ராசிக்குள் என்றால் கார்த்திகையின் 3 பாதங்களும் ரோகினி மிருகசீரிடத்தின் இரண்டு பாதம் இடப ராசிக்குள். இதுதான் நட்சத் திரங்கள் ராசிகளுள் அடங்கும் ஒழுங்கு.

இந்த 12 ராசிகளுமே நிரந்தரமாக வானில் வரையப்பட்ட புள்ளிகள் என்பதிலும் பார்க்க கோடுகள் என்பதே தகுந்த பதம். 360 பாகையை யும் சைபர் பாகையையும் தொடுக்கும் கோடு தான் மேட ராசியின் தொடக்கம். இந்தக் கோட்டை கதிரவன் கடக்கும் நேரம்தான் மேட சங்கிராந்தி. இதையே நாம் சித்திரைப் புத்தாண் டின் பிறப்பு என்கின்றோம். 12 ராசிகள் உள்ள தால் ஆண்டில் 12 சங்கிராந்திகள் நிகழ்ந்தே ஆகவேண்டும். எடுத்துக் காட்டிற்கு மகர சங் கிராந்திதான் தை பிறக்கும் நாள், இதனால் கேரளத்தில் அனேக மாவட்டங்களில் தைப் பொங்கல் என்று அழையாது மகரப் பொங்கல் என்றே அழைக்கிறார்கள். கற்கடக சங்கிராந்தி தான் ஆடிப்பிறப்பு. ஒரே ஆண்டில் அடுத் தடுத்த நாட்களில் இரண்டு ஆடிக்கூழ் குடித்த அனுபவம்கூட இங்கு வந்த பின்பு எனக்கு ஏற்பட்டது.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு முக்கிய விட யத்தை வாசகர்கள் கவனத்திற்கு கொண்வர வேண்டி உள்ளது. சங்கிராந்தி நிகழ்ந்ததும் பாய்ந்தடித்துக்கொண்டு அன்றைய நாளை ஆண்டுப் பிறப்பாக அறிவிக்கும் பாரம்பரியம் இருந்ததில்லை. இந்திய இலங்கை நேரப்படி கதிரவன் மறைவதற்கு முன்பு சங்கிராந்தி நிகழ்ந்தால் மட்டும் அன்றையநாள் ஆண்டுப் பிறப்பாக அறிவிக்கப் படும். கதிரவன் மறைந்த பின்பு சங்கிராந்தி நிகழ்ந்தால் மறுநாள்தான் ஆண்டுப்பிறப்பாக அறிவிக்கப்படும். தேவை யை ஒட்டி இந்த ஆண்டு ஏப்ரல் 13 இரவு புதன் கிழமை நிகழ்ந்தது மேட சங்கிராந்தி. ஏப்ரல் 14 வியாழக்கிழமை தான் ஆண்டு பிறப்பு.

இப்பொழுது இங்கிருந்து கொண்டு சிலர் அங்கு சங்கிராந்தி என்று அறிவித்த நேரத்திலி ருந்து ஐந்தரை மணி நேரத்தைக் கழித்து விட்டு அங்கு பொழுது மறைந்து விட்டதால் நாளை ஆண்டுப்பிறப்பு, இங்கு இன்னும் பொழுது மறையாததால் இன்று ஆண்டுப் பிறப்பு என்கி றார்கள். இதைப் பச்சையாகச் சொல்வதானால் அங்கு நாளை முதலாம் திகதி. இங்கு இன்று முதலாம் திகதி என்கிறார்கள். ஒரு ஆண்டின் முதலாம் திகதியுடன் விளையாடுகின்றோம் என்பதைத் தெரிந்துதான் செய்கிறார்களோ அல்லது அறியாமையால் செய்கிறார்களோ என்று புரியவில்லை. கணிக்கும் திறன் கொண் டவர்களாக இவர்கள் இருக்கவேண்டிய அவசி யம் இல்லை. சில மணி நேரங்களைக் கழிக்கத் தெரிந்தால் போதும். நேர வித்தியாசத்தைப் பயன்படுத்தி உள்ளே நுழைந்து பெயர் வாங்கும் நோக்கில் இப்படி ஒரு விளையாட்டை விளை யாடலாம். பிறக்கும் புத்தாண்டையே, நாங்கள் ஏமாளிகளாக இருந்தால் கனடாவுக்கும் ஐரோப் பாவிற்கும் ஒருநாள் இந்தியா இலங்கைக்கு மறு நாள் என்று அறிவித்து பித்தலாட்டம் செய்ய லாம். ஒரு நாட்டில் ஒரு நாளும் மறு நாட்டில் மறு நாளும் மாதப் பிறப்பென்று அறிவிப்பது முட்டாள்தனம் மட்டும் அல்ல தமிழ்ப் புத்தாண் டின் மகத்துவத்தைக் குறைக்கும் செயலுமா கும். அவர்கள் அதைச் செய்கிறார்கள் என்றால், அதற்கு எடுபடும் நாங்கள்தான் முட்டாள்கள்.

அவர்கள் கடும் போக்கை நாங்களும் சில நிகழ்வுகளில் ஏற்கின்றோம். எடுத்துக்காட்டிற்கு தைப் பூசம், மறு நாள் கொண்டாடினால் அது தை மகமாக இருக்குமே அன்றி பூசமாக இருக் காது. அமவாசை மறுநாள் பிரதமையாகிவிடும். ஆகையால் (ஐந்து அங்கம்) பஞ்சாங்கத்தின் திதி, நட்சத்திரம், ராசி, யோகம், கரணம் ஆகிய வற்றில் அவர்கள் கணிப்பு நுணுக்கங்களைக் காட்டலாம். ராசியில் ஒருநாளை எளிதாக விட் டுக் கொடுக்கலாம். காரணம் ஒரு முழு மாதம் கதிரவன் அந்த ராசியில்தானே நிற்கப் போகின் றான். புத்தாண்டு தைப்பொங்கல் ஆடிப்பிறப்பு ஆகிய பண்டிகைகளைப் பொறுத்த மட்டில் அவர்களை நாங்கள் நம்பியுள்ளோம் என்ற ஒரே காரணத்தை வைத்து எம்மை ஏமாற்றக் கூடாது. மறுநாள் ஆண்டுப் பிறப்பு அறிவிக்கும் முறை ஒன்றும் புதிதல்ல. சித்திரை 1ம் திகதி எமது ஆண்டின் தொடக்க நாள். அது எப்படி இடத் திற்கிடம் மாறுபட முடியும் தைப் பொங்கல் ஒரு தமிழர் திருநாள். கண்டத்துக்கு கண்டம் திகதி மாறுவது அறிவிப்பவர்களுக்கே ஒரு சீர்கேடா கப் படவில்லையென்று அவர்கள் நெஞ்சில் கைவைத்துக் கூறட்டும்.

இஸ்லாமியரின் புத்தாண்டைப் பாருங்கள். பருவ காலங்களுக்கு ஒப்ப அவர்கள் ஆண்டு ஓடுவதில்லை. சந்திர ஆண்டாக அது இருந்தா லும் அதை எவ்வளவு சீராக உலகம் முழுவதற் கும் ஒரே நாளாக இருக்க சீர் செய்கிறார்கள். மெக்காவில் எப்போ பிறை தெரிகிறதோ, அந் நாளை மையமாக வைத்துத்தான் ஆண்டுப் பிறப்பு முடிவு செய்யப்படுகிறது. ஏன் ஆங்கில ஆண்டும் ஒரே திகதியின் அந்த அந்த இடத்தின் இரவு 12 மணிக்குத் தொடங்குவதாகத்தானே அறிவிக்கிறார்கள். நாங்களும் இலங்கை இந் தியா எடுக்கும் முடிவை வைத்தே மாதங்களின் முதலாம் திகதியை முடிவு செய்ய வேண்டும். தேவையென்றால் சங்கிராந்தி நிகழும் நேரத் தில் கோயில்களில் ஆராதனைக்கு ஏற்பாடு செய் யலாம். மாதப் பிறப்பின் நாளை மாற்றி எங்கள் ஆண்டின் மகத்துவத்தைக் குறைப்பதை அனு மதிக்க முடியாது.

தமிழ் ஆண்டும் அதன் மாதங்களும் எங்கள் உள்ளங்களில் மதிப்புடன் ஏற்றுக் கொள்ளப் பட்டவை. தமிழீழத்தின் தேசியப் பூவாம் கார்த்தி கைப் பூ என்றதும் கார்த்திகை மாதம்தானே எங்கள் கண்முன் வருகின்றது. புரட்டாதிச் சனி, ஐப்பசி வெள்ளி ஆகியவை புனித நாட்களாக எத்தனை உள்ளங்களில் பதிந்துள்ளது. மார்கழி மாதம் என்றால் பலரின் ஞாபகத்தில் வருவது திருவெண்பாவைதானே.

நவம்பர் மாதத்தை சிலர் கார்த்திகை என்கி றார்கள். இதுவும் திருத்திக் கொள்ள வேண்டிய ஒன்று. இதுபோல் ஆங்கிலப் புத்தாண்டை சிலர் தை முதலாம் திகதி என்று கூறும்போது, முட் டாள்களே எங்கள் உள்ளங்களில் நாங்கள் ஏற்றி வைத்திருக்கும் உழவர் திருநாளாம் தைப் பொங்கலை தை எத்தனையாம் திகதி என்று சொல்லப் போகின்றீர்கள் என்று கேட்கத் தோன்றும்.

கருத்துக்களுக்கு - facebook.com/orupaper @orupaper

ILC Tamil Radio
அனைத்துலக உயிரோடை தமிழ் மக்கள் வானொலி
0208 930 5341 - 07754 323969
தமிழ் மக்களின் உரிமைக்குரலாய் ஒலிக்கும் ILC தமிழ் மக்கள் வானொலி 2016 இல் புதுப்பொலிவுடன் .....
தாயக தேசிய அரசியல் நிகழ்ச்சிகள் மற்றும் சிறியவர் முதல் பெரியோருக்கான பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள்
நாள் தோறும் மதியம் 12 மதியம் முதல் இரவு 10 மணி வரை ஒலிபரப்பை கேட்டு மகிழுங்கள்

அனைத்துலக உயிரோடை தமிழ் வானொலி கேட்கும் முறைகள் | www.ilctamil.com | eurobird 11919 | smart phones
நிகழ்ச்சிகளில் பங்குபற்ற அழையுங்கள் | 020 3286 4959 | Skype : ilctamililctamil | Face Book : ILC Tamil Radio

மோகன் ஆட்ஸ்

எழுபதுகளின் நடுப்பகுதியில் பருத்தித் துறையில் மோகன் வரைந்த விளம்பரப் பலகை களே அதிகமாக இருந்தன. மோகனின் வரவுக்கு முன்னர் ஜெயம் ஆர்ட்ஸ்தான் நகரில் பிரபலம். அடிமட்டம் வைத்து எழுதியது போன்றிருக்கும் ஜெயம் ஆர்ட்ஸின் நேரான எழுத்துப் பாணியை மோகனின் வளைந்த நெளிந்த எழுத்துக்கள் மேவி நின்றன. மஞ்சள், சிவப்பு, நீலம், பச்சை என்று நேரடி வர்ணங்கள் இல்லாமல் வர்ணக் கலவைகளை தனது எழுத்துக்களில் மோகன் பயன்படுத்திக் கொண்டிருந்தார். இது அப் பொழுது ஒரு மாற்றமாகவும் புதுமையாகவும் இருந்ததால் பல வியாபாரிகள் மோகனின் வாடிக்கையாளர்களாக மாறி இருந்தார்கள்.

மோகன், தமிழ்நாட்டில் ஓவியர் மாதவனிடம் சித்திரக்கலையைப்பயின்றவர். ஓவியத்துறையை தொழிலாகவும் செய்யலாம் என்ற நம்பிக்கை யில் பருத்தித்துறையில் மோகன் ஆர்ட்ஸ் என்ற ஓவியக் கடையை நடத்திக் கொண்டிருந்தார். தமிழ்நாட்டிலும் மோகன் ஆர்ட்ஸ் என்ற பெய ரில் பிரபல்யமான ஒருவர் இருந்தார். கே. மோகன் என்ற சொந்தப் பெயர் கொண்ட அந்த மோகன் ஆர்ட்ஸ் ஒரு படத் தயாரிப்பா ளராகவும் ஓவியனாகவும் இருந்தார். வணங்கா முடி என்ற திரைப் படத்துக்காக எண்பது அடி யில் நடிகர் திலகம் சிவாஜியின் கட்அவுட்டை வைத்து தமிழ்நாட்டின் கட்டவுட் கலாச்சாரத் துக்கு அடிகோலியவர் அவர். அந்த தமிழ்நாட்டு மோகன் ஆர்ட்ஸ் கே.மோகனுக்கு, சளைத்த வரல்ல வல்வெட்டித்துறை ராமதாஸ் மோகன தாஸ் என்ற மோகன் ஆர்ட்ஸ். அறுபது எழுபது அடிகளில் கட்டவுட் செய்வது இந்த மோகனுக் கும் ஒரு பிரியமான வேலை.

வல்வெட்டித்துறையில் எனக்கு இரு மோகன் கள் நண்பர்களாக இருந்தார்கள். ஒருவர் மத வடி மோகன். மற்றையவர் வேம்படி மோகன். இதில் வேம்படி மோகன்தான் ஓவியர். சிஜடி பஸ்ரியாம்பிள்ளையினால் அன்று அதிதீவிரமா கத் தேடப்பட்ட முக்கியமானவர்களில் ஒருவர். சுங்கான் பத்மநாதன், கந்தசாமி (சிறி சபா ரத்தினத்தின் அண்ணன்), மு.பொ.வீரவாகு, ஸ்பீக்கர் செல்லையா எனப் பருத்தித்துறையில் பலர் சிஜடிபஸ்ரியாம்பிள்ளையின் அதிஉன்னத விசாரணையில் உட்படுத்தப் பட்ட பொழுதும் கடைசிவரை பஸ்ரியாம்பிள்ளையின் கையில் சிக்காத ஒருவராக மோகன் இருந்தார். இதில் ஸ்பீக்கர் செல்லையாவினுடனான நட்பே மோகனுக்கு பருத்தித்துறையில் ஓவியக் கடை தொடங்குவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத் திக் கொடுந்திருக்க வேண்டும் என்பது எனது ஊகம். பருத்தித்துறையில் மோகன் வசித்த வீடும் ஸ்பீக்கர் செல்லையாவின் வீட்டிற்கு இரு வீடுகளே தள்ளி இருந்தது.

ஓவியர் மார்க் மாஸ்ரருடன் ஒப்பிடுகையில் மோகனின் ஓவியப் பாணி வேறுபட்டிருந்தது. மார்க் மாஸ்ரருக்கு ஒரு படத்தைப் பார்த்து வரைவதிலும் பார்க்க, கற்பனையில் அதுவும் நவீனமாக வரைவதிலேயே அதிக நாட்டம் இருந்தது. அதுவே மார்க் மாஸ்ரரின் தனிச் சிறப் புமாக இருந்தது. மோகனுக்கு ஒரு படத்தை அப்படியே வரைவதுதான் கை வந்த கலை யாக இருந்தது. ஒருவிதத்தில் அந்தப் பாணி மோகனுக்கு அவரது ஓவிய ஆசான் மாதவ னிடம் இருந்து வந்திருக்கலாம். இரண்டாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் பொழுது ஓவியர் மாதவனின் கலைப் படைப்புக்களைப் பாராட்டி அறிஞர் அண்ணா ஓவியர் மாதவ னுக்கு தங்கமோதிரம் பரிசளித்ததை பெருமை யாகச் சொல்லி தனது திறமையை பாராட்டி யாராவது ஒருநாள் பரிசளிப்பார்கள் என்று மோகன் ஒரு தரம் என்னிடம் சொல்லியிருந் தார். அவரது அந்த நினைப்புக்கான தகுதி அவரி டம் நிறையவே இருந்தது. அதற்கான நேரம் நான் அறிந்த வகையில் ஒரு தடவை அல்ல இரு தடவைகள் அவருக்கு வந்திருந்தன. ஒரு தடவை நவீன சந்தை திறப்புநாளில் அன்றைய நகரபிதா திரு.ந.நடராஜா அவர்களை பெரிய அளவில் வரைந்ததற்கு நகரபிதாவிடம் இருந்து தங்கச் சங்கிலியையும், தந்தை செல்வாவினதும், ஜி.ஜி பொன்னம்பலம் அவர்களினதும் ஆளுயரப் படங்களை வரைந்ததற்கு நகரின் வர்த்தக சங் கத் தலைவராக இருந்த திரு.மு.பொ.வீரவாகு அவர்களிடம் இருந்து தங்க மோதிரத்தையும் பாராட்டுக்களுடன் பெற்றிருந்தார்.

பருத்தித்துறையில் முதன் முதலாக வைக்கப் பட்டிருந்த பெரிய அளவிலான கட்டவுட்டை வரைந்த பெருமை மோகனுக்கே உரியது. 1977இல் பருத்தித்துறை நவீன சந்தைக் கட்டிடத் திறப்பு விழாவில் கட்டிடங்களுக்கு மேலாக எழுந்து நின்ற மோகன் வரைந்த நகரபிதா திரு.ந.நடராஜாவின் கட்டவுட் இன்னும் கண்ணை விட்டு அகலாது இருக்கிறது. மோகனது அந்த கட்டவுட்டுக்கு இணையாக இதுவரை யாரேனும் ஒரு கட்டவுட்டை பருத்தித்துறையில் வைத்தி ருக்க வாய்ப்பே இல்லை.

ஒரு கட்டத்துக்கு மேல் ஓவியத்துறையில் சம் பாதிக்க முடியாது என்ற உண்மை மோகனுக் குத் தெரியத் தொடங்க வேறு வழியில்லாமல் "கப்பலிலை போய் கொஞ்சக் காலம் வேலை செய்யப் போகிறேன்" என்று புறப்பட்டு விட்டார். மோகன் கப்பலுக்குச் செல்வதற்கு வெளிநாடு போக அவரது மனைவியும் இரு மகன்களும் வல்வெட்டித் துறைக்கு இடம் பெயர்ந்து விட்டார்கள்.

கப்பலில் சில காலம் வேலை செய்து விட்டு ஊர் திரும்பியதும் மீண்டும் ஓவியத்துறையை கையில் எடுத்துக் கொண்டார். அதே கடையை தூசி தட்டி மீண்டும் தொழிலை ஆரம்பித்தார். அப்பொழுதுதான் கட்டவுட் செய்யும் நுணுக்கங் களை எனக்குச் சொல்லித் தந்தார். அவரிடம் இருந்து தெரிந்து கொண்டதை ஆத்தியடி என்ற கிராமத்தில் இருந்த பிள்ளையார் கோவில் திருவிழாவில் அரங்கேற்றினேன். மோகனைப் போல் அறுபது எழுபது அடிகள் என்று பெரிய ளவில் முயற்சிக்காமல் அந்தக் கிராமத்து இளை ஞர்களுடன் இணைந்து முப்பது அடியில் பிள் ளையாரின் கட்டவுட் செய்து வைத்தேன். கட்ட வுட்டை வந்து பார்த்த மோகன் பாராட்டி விட்டுப் போனார். என்னுடனான மோகனது பேச்சில் நகைச்சுவை கலந்து இருக்கும். அதற்கு உதார ணத்துக்கு இதைச் சொல்லலாம். நான் கட்ட வுட் வைத்த அந்தத் திருவிழா முடிந்ததும் மோகன் என்னிடம், "கட்டவுட் செய்ததற்கு சங்கிலி, மோதிரம் எதுவும் போட்டவையளோ?" என்று கேட்டு சற்று தாமதித்து விட்டுச் சொன்னார் "அரைகுறை ஓவியருக்கு அதெல்லாம் போட மாட்டாங்கள்".

என்னை அவர் செல்லமாக கோவித்துக் கொண்டதற்கு இதைச் சொல்லலாம். எனது அக்காவின் நண்பி ஒருவர் கேட்டுக் கொண்ட தால் மறுக்க முடியாமல் தொண்டைமானாறு என்ற இடத்தில் இருந்த பிள்ளையார் கோவி லுக்கு திரைச் சீலை ஒன்றை வரைந்து கொடுத் திருந்தேன். இதை அறிந்த பொழுது மோகன், "யோவ், என்னட்டையே திரைச்சீலை கீறுற தைப் படிச்சிட்டு எதுக்குய்யா என் பிழைப்பைக் கெடுக்கிறாய் இந்த இலவச ஓவியர்களாலை பெரிய தொல்லையா இருக்கு" என்று தனது வருவாயை குளப்பாதே என்று நாசூக்காக எச்சரித்தார்.

தமிழீழ விடுதலைக்கான இயக்கங்கள் துளிர் விட்ட நேரங்களில் இவரும் ஒரு விடுதலைக் குழு வைச் சார்ந்திருந்தார் என்பது அன்று பலருக் குத் தெரியாது. விடுதலை இயக்கங்கள் பற்றி ஏதாவது கதைகள் வந்தால், "கலியாணம் கட்டி னவங்களை, குடும்பமா இருக்கிறவங்களை எல்லாம் அவங்கள் சேர்க்க மாட்டாங்கள்." என்று சொல்லி அந்தக் கதையை எச்சரிக்கை யாக நிறுத்தி வைப்பார். ஆனால் ஒரு தலை வனையே பாசத்தோடு 'தம்பி' என்று அழைத்து உறவுகொண்டாடியவர் மோகன். அவரது அந்த பாசம்தான் பின்னாளில் 'சோழன்' என்ற பெயரில் உருவான அவர்களின் கப்பலில் மோகனை பணி செய்ய வைத்தது.

ஒரு தடவை ஒரு தேயிலை பெட்டியில் இருந்த ஒரு புலியின் படத்தைக் காட்டி, 'தங்களுக்கு ஒரு புலிச் சின்னம் கீறித் தரச் சொல்லி கேக்கிறாங் கள். இதை கீறலாம் எண்டு பாக்கிறன்' என்று என்னிடம் சொன்னார். அதையே அவர் வடி வமைத்துக் கொடுத்திருந்தார் என்பதை பின் னாட்களில் வந்த விடுதலை இயக்கத்தின் துண் டுப் பிரசுரங்களில் கண்டு கொண்டேன்.

அவர் எழுபதுகளில் வடிவமைத்த அந்தச் சின்னத்தின் சொந்தக்காரராக பின்னாளில் தமிழ்நாட்டில் ஒருவர் பாராட்டப் பட்டது வேத னையானது. ஆனாலும் "நான்தான் அந்த சின் னத்தை வடிவமைத்தேன்" என்று இவர் சண் டைக்கு வரவும் இல்லை குரல் எழுப்பி உரிமை கேட்கவும் இல்லை. 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்பதே இவரது பாணி. தன்னால் முடிந்த உதவிகளை இவர் அந்த விடு தலைக் குழுவிற்கு செய்து கொடுத்துக் கொண் டிருந்தார் என்பது மோகனுடன் நெருங்கிப் பழகியவர்களுக்கு மட்டுமே தெரியும்.

ஊரில் கண்ணி வெடித் தாக்குதல்கள், அதி ரடிக் குழுவின் அட்டகாசங்கள், குண்டுத் தாக் குதல்கள், தீ வைப்புகள், நகரத்தைச் சுற்றி வளைத்துக் கைதுகள் எனக் காலங்கள் மாறிய பொழுது மோகனின் ஓவியத்துறை வருமா னங்கள் மோசமாகிப் போனது. அப்பொழுது இருந்த தனது நிலையை மோகன் இப்படிச் சொன்னார், 'அரிசிக்கும், மாவுக்கும், சீனிக்கும் சனங்கள் ஓடித்திரியிற நேரம் படம் கீறுவிக்கிற துக்கு யார் வரப் போயினம்'

நானும் மோகனும் நிலைமைகளை அலசிப் பார்த்து, தமிழ்நாட்டுக்குப் புலம் பெயர்ந்து விடு வது என்று ஒரு முடிவு எடுத்தோம். மோகனுக்கு தமிழ்நாட்டில் பலரைத் தெரிந்திருந்தது. எனவே மோகன் தமிழ்நாட்டில் எல்லா ஏற்பாடுகளையும் செய்து விட்டு ஒரு மாதத்துக்குள் திரும்பி வந்து என்னையும் எனது குடும்பத்தையும் கூட்டிப் போவதாக முடிவாயிற்று.

மோகன் தமிழ்நாடு சென்று இரண்டு மாதங் களாக எந்தத் தகவல்களும் எனக்குக் கிடைக் கவில்லை. வல்வெட்டித்துறைக்குச் செல்லும் வழியில் அதிரடிப் படையின் நடமாட்டங்கள் அதிகமாக இருந்தன. ஆகவே மோகனின் உற வினர்களிடம் இருந்தும் தகவல்கள் எனக்குக் கிடைக்கவில்லை.

இறுதியாக மோகனின் கடிதம் எனக்குக் கிடைத்தது. இந்தியாவில் இருந்து வரவேண்டிய அவரது கடிதம் சிங்கப்பூரில் இருந்து வந்திருந் தது. நான் அவரது கடிதத்தை யேர்மனியில் இருந்து பெற்றுக் கொண்டேன். நாட்டில் நிலை மைகள் மோசமானதால் அங்கு இருக்க முடி யாமல் நான் யேர்மனிக்குப் புலம் பெயர்ந்துவிட் டிருந்தேன். மோகனின் கடிதம் ஊருக்குப்போய் அங்கிருந்து யேர்மனிக்கு வந்து சேர்ந்திருந்தது. மோகன் 19.11.1984 திகதியிட்டு அனுப்பிய அந் தக் கடிதத்தை இன்னமும் பாதுகாத்து வைத்தி ருக்கிறேன். மோகன் இந்தியாவிற்குப் போன பொழுது அவரது தம்பி வெளிநாட்டில் இருந்து அனுப்பிய காசோலை அவரது கைகளில் கிடைத்திருக்கிறது. அந்தக் காசோலையை வைத்து ஒரு சிறு வியாபாரம் செய்ய நினைத்து சிங்கப்பூர் சென்றிருந்தார். இந்த இடைப்பட்ட காலம் எங்களைப் பிரித்து விட்டிருந்தது.

ஆரம்ப காலங்களில் எங்களுக்குள் கடிதத் தொடர்புகள் இருந்தன. படிப்படியாக அவை குறைந்து நின்று போய் விட்டிருந்தது. எனக்கு எழுதிய கடைசிக் கடிதத்தில் இப்படி எழுதியி ருந்தார், "இலண்டனில் இருக்கும் எனது இரு மகன்கள் என்னையும், மனைவியையும் தங்க ளிடம் வரும்படிக் கேட்கிறார்கள். எனது தந்தை யின் இறுதிக் காலங்களில் அவருடன் இருக் கவே விரும்புகிறேன்"

நான் வேலையில் இருந்து ஓய்வு பெறும் பொழுது மோகனும் தனது வேலையில் இருந்து ஓய்வு பெற்று விடுவார் அந்தச் சமயத்தில் தமிழ் நாடு சென்று சிற்பக்கலையைப் பயிலலாம் என்று ஆர்வம் கொண்டிருந்தேன்.

09.11.2015 அன்று மோகன் நிரந்தரமாக ஓய்வு பெற்று விட்டார் என்று செய்தி வந்து என்னை தாக்கி இருக்கிறது. 'செல்வம்' என்று என்னை பாசத்தோடு அழைத்த நண்பனை நிரந்தர மாகப் பிரிந்து நிற்கிறேன்.

- மூனா

நன்றி : manaosai.com

www.tamilpages.com
தமிழ் ஓலைகள்
TAMIL PAGES
TO ADVERTISE CALL OR EMAIL
0770 319 0768 / 0771 800 3838
020 8543 2126
editor@tamilpages.com
52 Kingsley Road, Wimbledon London SW19 8HF
Tamil Pages readership is second to none and its advertising portfolio is comprehensive and innovative
We are now calling for advertisements from Businesses for the 2016 Directory - 23rd Edition
A box advert cost only £35 for a full year
THINK DIFFERENT AND GO FURTHER WITH TAMIL PAGES
New look, New Content , Same Market Penetration

கடந்த வருடம் வெளியான டார்லிங் படம் வெற்றி பெற்ற தால் அந்த வெற்றி அடையாளத்துடன் அதன் இரண்டாம் பாகம் என்கிற அடைமொழியுடன் அந்தப்படத்துக்கு துளியும் சம்பந்தம் இல்லாமல் வெளியாகி இருக்கிறது இந்த டார்லிங்-2.. முதல் பாகத்துக்கு கிடைத்த வரவேற்பு இதற்கும் கிடைக்குமா..? பார்க்கலாம்.

தற்கொலை செய்துகொண்ட ஒரு காதல் ஜோடி, தங் களது நண்பனின் துரோகத்தால் தான் தங்கள் காதல் தோற்றது என்று நினைத்து, ஆவியாக வந்து நண்பனைப் பழிவாங்கத் துடிப்பதுதான் 'டார்லிங் 2' படத்தின் அடிப்படை கதை.

கலையரசன், காளி, ரமீஸ், அர்ஜூனன், ஹரி, ராம் ஆகிய ஆறு நண்பர்கள் ஒன்றாக இருக்கிறார்கள். இவர் களில் ராம் காதல் தோல்வியால் தற்கொலை செய்து கொள்கிறார். ஒரு வருடத்திற்குப் பிறகு, கலையரச னுக்கு நிச்சயதார்த்தம் நடைபெற உள்ளது. எனவே 'பேச்சலர் பார்ட்டி' கொண்டாட நண்பர்கள் வால் பாறைக்கு சுற்றுலா செல்கிறார்கள். அங்கு அவர்கள் தங்கியிருக்கும்போது, மரணமடைந்த நண்பர் ராம் ஆவி யாக வந்து பயமுறுத்துகிறார். தன் மரணத்திற்கு காரணம் அந்த நண்பர்களில் ஒருவர்தான் என நினைத்து அவரை கொல்ல நினைக்கிறார். அவருடன் அவரது காதலி ஆவியும் சேர்ந்து கொள்கிறது.

ஒரு கட்டத்தில் கலையரசனின் உடலுக்குள் புகுந்து கொள்ளும் ராமின் ஆவி, கலையரசனை கொல்லப் போவதாக மிரட்டுகிறது. இதை அறிந்த மற்ற நண்பர்கள் என்ன செய்தார்கள்? கலையரசனால் ஆவிகளிடமிருந்து தப்பிக்க முடிந்ததா? என்பது மீதிக்கதை.

நண்பர்களாக வரும் அனைவரும் கச்சிதமாக நடித்தி ருக்கிறார்கள். கண்களில் ஒளி கக்கப் பேயாக வருவது, பேயாகவும் நண்பனாகவும் மாறி மாறிப் பேசுவது என கலவரப்படுத்திவிட்டார் கலையரசன். அவர் குற்ற உணர்ச்சியில் தவிக்கும் காட்சிகள் அருமை. ஐந்துபேரும் பேய்ப்படத்திற்கே உரியபடி ஆரம்பத்தில் நட்பு டான்ஸ் ஆடுகிறார்கள். அதன்பின்னர் பேய் வரும்போதெல்லாம் பயப்படுகிறார்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாக கோபப்பட்டு உடன் இருப்பவர்களையும் படம் பார்க்கும் நம்மையும் கூட எரிச்சல் வரப்பண்ணுகிறார்கள்.முனிஸ் காந்த், அர்ஜூனன், காளி வெங்கட் என மூன்று நகைச் சுவை நடிகர்களை வைத்துக்கொண்டு காமெடிக் காட்சி களை கூட வைக்காமல் திரைக்கதையை நகர்த்தியிருப் பதை தவிர்த்திருக்கலாம். அதற்குப் பதிலாக அவர்க ளின் பயத்தையே நகைச்சுவையாக்கியிருந்தால் விட்டி ருந்தால் இன்னொரு நகைச்சுவை – திகில் வெற்றிப் படமாக அமைந்திருக்கும்

படத்தில் ஒளிப்பதிவாளர் விஜய் கார்த்திக்கின் பணி அபாரமானது. ஆனால் அவரது கைவண்ணத்திற்கு திரைக்கதை சரியாக ஒத்துழைக்கவில்லையே என்பது தான் வருத்தம்.

பொதுவாக பேய் படம் என்றால் இசைதான் மிரட்டும். இதிலும் அப்படித்தான். ரதன் இசையமைப்பில் பயம் நம்மை தொற்றிக் கொள்கிறது. 'சொல்லட்டுமா' பாடல் மனதை வருடுகிறது.

தற்கொலை செய்துகொண்ட காதல் ஜோடி, ஆவியாக வந்து பழிவாங்குவதற்கான காரணம் பொருத்தமாக இருக்கிறது. வால்பாறையில் பெரிய பங்களா, ஆறு, அடர்ந்த காடு, மிரட்டும் காட்டு யானை என்று கதைக் கான களம் அருமையாக அமைந்திருக்கிறது. இந்த களத்தையும், திறமையான நடிகர்களையும் வைத்துக் கொண்டு புகுந்து விளையாடி இருக்கிறார் இயக்குனர் சதீஸ் சந்திரசேகர் என்று சொல்ல ஆசை தான் ஆனால் நடந்ததோ வேறு. ராமைச் சுற்றியே செல்லும் திரைக்கதை ஆயிஷாவைப் பற்றிய ரகசியத்தை வெளிப்படுத்துவது சுவாரஸ்யமாகத் தான் இருக்கிறது. கலையரசன் ஒரு கட்டத்தில் தன் உயிரைத் தர முன்வருவது மனதைத் தொடுகிறது. நட்பையும் காதலையும் காப்பாற்றும் விதத் தில் அமைந்திருக்கும் கடைசித் திருப்பம் பாராட்டத் தக்கது. இந்த இடத்தில் மட்டும் பாராட்டுக்கு உரியவர் இயக்குனர்.

பேய்ப்படம் என்கிற லேபிளுடன் வந்துள்ள இந்தப் படத்தில் மிஞ்சிப்போனால் இரண்டே இரண்டு இடங்களில் மட்டுமே பயப்பட முடிகிறது. பேய்க்கதையில் பிளாஸ் பேக்கும் க்ளைமாக்ஸும் வலுவாக இருக்கவேண்டாமா.? ஆனால் இதில் உப்புச்சப்பு இல்லாத, ஏற்றுக்கொள்ள முடியாத, பழிவாங்குவதற்கு சொல்லப்படும் சோப்ளாங்கி காரணம் படத்திற்கு மிகப்பெரிய மைனஸ். இயக்குனர் சதீஷ் சந்திரசேகரன் இன்னும் கொஞ்சம் மெனக்கெட்டி ருக்கலாம்.

வால்பாறையிலுள்ள ஒரே ஒரு பங்களாவைச் சுற்றித் தான் முக்கால்வாசி கதை நகர்கிறது. அந்த பங்களாவுக் குள் ஒவ்வொருவராக பயந்து நடப்பதும், நடுங்குவதும், ஓடுவதுமாக இருக்கும் முதல்பாதியில் இன்னும் சில சுவாரஷ்யமான காட்சிகளைச் சேர்த்து விறுவிறுப்பை கூட்டியிருக்கலாம். பேய்ப்படம் என்றாலே மிகப்பிரமாண் டமான பங்களாவையும் இருட்டு நேரத்தையும், மாடி யில் இருந்து மேலும் கீழும் இறங்குவதையும், கதாபாத் திரங்கள் அனைவரும் ஒவ்வொரு அறையாக சுற்றி வரு வதையும், மின் விளக்குகள் நினைத்த நேரத்தில் அணைந்து விடுவதையும் மட்டும் இன்னும் எத்தனை படங்களில் தான் காட்டிக்கொண்டு இருக்கப்போகிறார் களோ..? கடவுளுக்கே.. இல்லையில்லை அந்த பேய்க ளுக்கே வெளிச்சம்.

வெற்றியடைந்த படத்தின் இரண்டாம் பாகத்தை எடுக் கும்போது, முதல் பாகத்தின் வெற்றிதான் இரண்டாம் பாகத்துக்கு வில்லன். அந்தவகையில் மொத்தத்தில் 'டார்லிங் 2' பயப்படும்படியாக இல்லை..!!!

- நிசா - நிலாச்சாரல் வலைப்பூ

சினித்துளி

படங்கள் வெளியாவதில் சிக்கல்!

2016 ஜனவரி தொடக்கத்திலிருந்து, கடந்த மூன்று மாதத்தில் குறைந்தது 51 படங்கள் வெளியாகியிருக்கும். இது தமிழில் மட்டும் என்பது தகவல். ஏப்ரல் ஒன்றாம் தேதி வெள்ளிக்கிழமையென்பதால் ஏழு படங்கள் வெளி யாகியிருக்கிறது. ஹலோநான் பேய் பேசுறேன், ஓய், டார்லிங் 2, நாரதன், உயிரே உயிரே, ஒரு மெல்லிய கோடு, என்னுள் ஆயிரம் இந்த ஏழு படங்களும் வரும் வெள்ளிக்கிழமையை குறிவைத்து காத்திருக்கிறது. இதில் பல படங்கள் தள்ளிப்போகவிருக்கின்றன

இந்தமாதிரியான குறைந்த பட்ஜெட் படங்கள் நல்ல தரமான படங்களாக இருக்கின்றன. ஆனாலும் வெள்ளி, சனி, ஞாயிறு விடுமுறை தினங்களாவது முழுமையாக ஓடுமா என்று தெரியாததாலும் வேற்றுமொழிப்படங்களின் ஆதிக் கத்தாலும் வினியோகஸ்தர்கள் குறைந்த பட்ஜெட் படங்களை வாங்கத் தயங் குவதாக சொல்லப்படுகிறது.இதனால் குறைந்த பட்ஜெட்டில் வெளியாகும் படங்கள் ரிலீஸாவதிலும் அதற்கான முயற்சிகளில் ஈடுபடுவோரின் எண்ணிக் கையிலும் சிக்கல் ஏற்படும் என அஞ்சப்படுகிறது.

ஜோக்கர்!

குக்கூ இயக்குநர் ராஜுமுருகன், தனது அடுத்தப்பட வேலைகளை இனிதே முடித்துவிட்டார். ராஜுமுருகன் இயக்கத்தில், ஹீரோவாக சோமசுந்தரம், மற்றும் நாயகி களாக புதுமுகங்கள் காயத்ரி, ரம்யா நடித்திருக் கிறார்கள். இப்படத்துக்கு செழியன் ஒளிப்பதிவு செய் திருக்கிறார். படத்தின் இறுதிக்கட்டங்கள் அனைத் தும் முடிந்துவிட்டு இசை வெளியீடு மற்றும் திரைப் படத்தை விநியோகிக்க விநியோகத்தர்களுக்கு காத்தி ருக்கின்றனர் குழுவினர்.

கருடாவில் 3 விக்ரம்!

திரு இயக்கத்தில் விக்ரம் நடிக்கும் புதிய படம் கருடா. இதில் விக்ரம் ஜோடியாக காஜல் அகர்வால் நடிக்கிறார். இப்படத்தில் வில்லனாக பிரபல ஹிந்தி நடிகர் மகேஷ் மஞ்சுரேகர் நடிக்கிறார்.படத்துக்கு படம் கெட்டப்பை மாற்றி நடிக்கும் விக்ரம் இந்த படத்திலும் மூன்று விதமான கெட்டப்பில் நடிக்கவுள்ளாராம். சென்னையை அடுத்து பொள்ளாச்சி, கோவை, அகமதா பாத், லக்னோ, ஆகிய இடங்களிலும், பெரும்பகுதி படப் பிடிப்பு அரபு நாடுகளிலும் நடைபெற உள்ளது.

பாரதிராஜா எடுக்கும் குற்றப்பரம்பரை

பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் தென் தமிழகத்தின் குறிப் பிட்ட சில பகுதியைச் சேர்ந்த மக்கள் திருட்டையே தொழிலாக கொண்டு வாழ்ந்து வந்தார்கள். அவர் களை 'குற்றப்பரம்பரை' என அப்போதைய பிரிட்டிஷ் அரசு வகைப்படுத்தியது. இதனால், அந்த பகுதியி லுள்ள ஆண்கள் எல்லோரும் காவல் நிலையத்தில் தின மும் கையெழுத்திட வேண்டும் என்ற நிலை உருவா னது. அதிக ஆண்டுகள் நீடித்த இந்த நிலையை பெரிய போராட்டங்களுக்கு பிறகு மாற்றினார்கள்.

இந்த வரலாற்று பின்னணியை மையமாக வைத்து 'குற்றப்பரம்பரை' என்கிற படத்தை இயக்க பாரதிராஜா சில ஆண்டுகளாக சொல்லிக் கொண்டிருந்தார். இதற்கிடையில், இயக்குனர் பாலா இந்த படத்தை எடுக்கவுள்ளதாக செய்திகள் பரவியது. பல்வேறு சர்ச்சைகளின் பின் இந்நிலையில், இயக்குனர் பாரதிராஜா இப்படத்தை உடனடியாக தொடங்க திட்டமிட்டுள்ளார்.

herbalAid
AYURVEDIC - HERBAL SUPPLIMENT
Natural way to healthier life....
பல அபூர்வ மூலிகைகளைக் கொண்டு 100% இயற்கை முறையில் தயாரிக்கப்பட்டது இந்த ஆண்களுக்கான ஆயுர்வேத மசாஜ் எண்ணெய். எந்தவித பக்கவிளைவுகளும் அற்றது.
உங்கள் தாம்பத்திய வாழ்க்கையில் சிக்கல் அல்லது சந்தோசமின்மையா? காலத்தை வீணடிக்காதீர்கள்...

REPL® R.E.P.L Provides Stronger Health Naturally
Saandhha Oiil
ஆண்களுக்கு மட்டுமானது
Always Stunning
Feel excitement you never before
You can buy online from www.replhealthcare.com
or Buy from your local shop

Hair care

Breast message oil for women
Call Us Today
Don't wast on other day
மேலதிக விபரங்களுக்கு
020 8843 0330
For futher information visit - www.replhealthcare.com
10, Park Avenue, Southall, Middlesex, UB1 3AQ
Email ID : herbalaid@hotmail.co.uk
Skype ID : herbalaidhealthcenter Contact Number : 02088430330

Violin, Keyboard & Guitar

புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன
அனுபவம் மிக்க ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகிறது
OEBL , OFAL Syllabus,
Trinity college Syllabus க்கு ஏற்ப கற்பிக்கப்படுகிறது.
இடம் : New Malden Centre and Rosehill Roundabout.
For More Datails : 07917 128 581

Offer open until 30 June 2016. Pay by cash, cheque or UK debit card and send money to any bank account in Sri Lanka. The money can be remitted from any of our UK branches only. If you have an SBI UK account, you can make remittances for free even after the promotion period. For more information, please ask any branch staff or visit our website. KYC and terms & conditions apply.

sbiuk.com
0800 532 532

State Bank of India
United Kingdom

20,000 STATE BANK GROUP BRANCHES IN 34 COUNTRIES • 190 MILLION CUSTOMERS • IN THE UK SINCE 1921
Personal Banking | Corporate Finance | Trade Finance | Money Transfer | NRI Services

*Promotion period of free remittances to Sri Lanka ends 30 June 2016. Note: Transaction limits apply. Maximum amount of £5000 per day as a single transaction, subject to the exchange rate available on that day. Please note that only the cardholder can carry out the remittance transaction. For branch transactions, you will need to fill out a remittance application form, and supply identification (ID) and proof of address. SBI UK Individual account holders who maintain the minimum balance required in accordance with the terms and conditions of the account, are eligible to transfer funds FREE OF CHARGE. The monthly minimum balance is calculated based on the previous month's average balance, by totalling the daily balance in the previous month and then dividing this by the number of days in the previous month. For more information, please see the Remittance Terms and Conditions or speak to a member of staff. Authorised and regulated by Reserve Bank of India and Prudential Regulation Authority. Subject to regulation by the Financial Conduct Authority (FCA) and limited regulation by the Prudential Regulation Authority (PRA). Details about the extent of our regulation by the PRA are available from us on request. FCA registered number is 139156. For more information and clarification, visit us at our website www.sbiuk.com or visit your local branch. The contact centre is open from Monday to Friday from 9:00am to 6:00 pm.

JPN

Shipper | Movers | Transporters

Shipping: World Wide Door to Door
Air Cargo: Faster and Promised Delivery
Removal Services: Rate Lower - Job Higher

குறைந்த செலவில்
விமான மற்றும் கடல்-தரை
மார்க்கமான பொதி சேவை
பாதுகாப்பு - விரைவு - நம்பிக்கை

யாழ், வன்னி, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருமலை, அம்பாறைக்கு விரைவான மலிவான சேவை !

உலகெங்கும் கடல், வான் மார்க்கமாக பொருட்களை அனுப்ப நம்பிக்கையான ஒரே நிறுவனம்

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது சித்திரைப் புதுவருட நல்வாழ்த்துக்கள்

- Shipping & Airfreight
- Worldwide Destination
- Import & Export
- Packing & Crating
- Collection & Delivery
- All Sizes & Weights
- Immediate Insurance Cover
- Complete Documentation Service

Now we are Operating the Coaches Europe Wide!

Machinaries & Commercial Cargo Clearances and
Door Deliveries to any Corner of Srilanka @ Best Rates

குறைந்த விலையில் இலங்கைக்கு பொதிகளை மட்டுமல்லாமல் இலத்திரனியல் பொருட்களையும் பாதுகாப்பான முறையில் அனுப்பிக் கொள்ளலாம். உங்கள் பொருட்களை உங்கள் வீட்டிற்கே வந்து பெற்று அனுப்பும் சேவையும் உள்ளது.

Passenger Vehicles Available from 9 to 60 Seater Coaches

JPN Shipping Ltd.
Unit-A2c, Redlands, Coulsdon,
CR5 2HT, Surrey.

Web: www.jpnshippingltd.co.uk
Email: info@jpnshippingltd.co.uk
info@permainternational.co.uk

Call us .....
Tel: **020 8668 0252**
Mob: **079 3119 7571**

Southall Travel

Redefining Travel

Why travel with Southall Travel?

- ✓ Great value flights to Sri Lanka
- ✓ Number One Travel Agent to India, *with over 20 years experience*
- ✓ Open 24 hours a day, seven days a week. *Call us anytime*
- ✓ Price guarantee *will not be beaten on price*
- ✓ Specialists for worldwide flights and holidays with any airline, anywhere, anytime
- ✓ Fast and reliable service
- ✓ Multilingual staff *offering impartial advice*
- ✓ Trusted household brand *for total peace of mind*

ஏன் சவுத்ஹோல் டிராவல் மூலம் பிரயாணம் செய்ய வேண்டும்?

- ✓ சிறிலங்கா செல்லவிருக்கும் பயணிகளே நீங்கள் கொடுக்கும் பணத்திற்குப் பெறுமதியாக சொகுசாகவும், மனநிம்மதியாகவும் பிரயாணம் செய்லாம்.
- ✓ 20 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுள்ள இந்தியாவிற்கான முதன்மைவாய்ந்த பிரயானமுகவர்.
- ✓ வாரத்தில் 7 நாட்களும் 24மணிநேரம் சேவை. எந்நேரமும் தொடர்பு கொள்ளலாம்.
- ✓ விலைகளுக்கு உத்தரவாதம். விலையில் எங்களை ஒருவரும் வெல்ல முடியாது.
- ✓ உலக விமான விடுமுறைப் பயணங்களையும் எங்கேயும் எப்போதும் எந்நேரத்திலும் எந்த விமானத்திலும் மேற்கொள்ள பிரசித்திபெற்ற நிறுவனம்.
- ✓ நம்பிக்கையான துரித சேவை
- ✓ பலமொழிகளிலும் தேர்ச்சிபெற் ஊழியர்கள். பாரபட்சமற்ற சேவை செய்யக் காத்திருக்கிறர்கள்.
- ✓ நிறைந்த நிம்மதியுடன் பயணம் செய்ய நம்பிக்கையான எல்லோருக்கும் தெரிந்த ஓர் நிறுவனம்

Call Centre open 24 hours **0844 855 8017**

ABTA 80626

Think Travel, Think Southall Travel

www.southalltravel.co.uk

ATOL PROTECTED 5553